அஉம்

ஐந்து கரத்தனை யானை முகத்தனை
இந்தி னிளம்பிறை போலும் எயிற்றனை
நந்தி மகன்றனை ஞானக் கொழுந்தினைப்
புந்தியில் வைத்தடி போற்றுகின் றேனே.



தோடுடைய செவியன் விடையேறியோர் தூவெண்மதி சூடிக்
காடுடையசுட லைப்பொடிபூசிஎன் உள்ளங்கவர் கள்வன்
ஏடுடையமல ரான்முனைநாட்பணிந் தேத்தஅருள் செய்த
பீடுடையபிர மாபுரம்மேவிய பெம்மானிவ னன்றே.

சித்த மரபை உருவாக்கியவர் சிவபெருமான். அதனால் அவரையே ஆதி குருவாக கொண்டிருகின்றனர் சித்தர்கள். சிவபெருமானுக்கு சித்தீசுவரன் என்ற பெயரும் உண்டு.

http://esanoruvanae.blogspot.in/

முன்னுரை

பல சித்தர்கள் வாழ்ந்து மறைந்ததால் சித்தர் பூமி என்றும், பாரதிதாசன் போன்ற பல்வேறு அறிஞர்களும், கவிஞர்களும் வாழ்ந்து மக்களை வாழ்வித்ததால் ஞான பூமியென்றும், மகாகவி பாரதியார் போன்ற விடுதலை வீரர் மற்றும் சமூக சீர்திருத்தவாதிக்கெல்லாம் அடைக்கலம் கொடுத்ததால் அடைக்கல பூமி என்றும் பல்வேறு சிறப்புப் பெயர்கள் புதுச்சேரிக்கு உண்டு.

சில நாட்களுக்கு முன்பு, எம்பெருமான் ஈசன் அருளால் புண்ணிய பூமியாம் புதுச்சேரியில் உள்ள ஜீவ சமாதிகளை பார்க்கும் / தரிசிக்கும் பாக்கியம் பெற்றேன். சித்தர்கள் பிறப்பு, வாழ்க்கை, இறைநிலை, மக்களை பிரம்மிக்க வெய்த நிகழ்வுகள் மற்றும் சமாதி அடைந்த விதம்/இடம் போன்றவை பற்றி பல இடங்களில் (புத்தகம், காணொளி, இணைத்தளம்) தகவல்கள் இருக்கின்றது. ஆனால் இவை அனைத்தும் இணையத்தளத்தில் ஒரே இடத்தில் கிடைக்கும் வண்ணம் இல்லை. இல்லாதது ஒரு பிழையே!

ஒரு சிறு முயற்சியாக, பல இடங்களில் கிடைக்கும் தகவல்களை ஒன்றாக சேர்த்து இங்கு வழங்க முயற்சி செய்துள்ளேன். இதன் ஒரே நோக்கம், சித்தர்கள் பற்றியும், அவர்களின் வாழ்க்கை, போதனைகள் மற்றும் சமாதிகள் உள்ள இடங்களை பற்றி அனைத்து மக்களும் அறிந்து கொண்டு, அவர்களை நாடி செல்ல தூண்டுதலாக அமைய வேண்டும் என்பதே!

பல ஆசிரியர்கள், அடியார்கள் மற்றும் முகநூல் நண்பர்களை தொடர்பு கொண்டு, அவர்களின் அனுமதியோடு அவர்கள் எழுதிய எழுத்துக்களை எடுத்து இங்கு கொடுத்துள்ளேன். அந்த எழுத்துக்கள் சொந்தமான பக்கத்தை/புத்தகத்தை/இணையதள பக்கத்தின் குறிப்பை (Reference) அதன் பக்கத்திலேயே குறிப்பிட்டு உள்ளேன். சில ஆசிரியர்களை தொடர்பு கொள்ள முடியாமல் போய்விட்டது. அவர்கள் என்னை மன்னித்து, இந்த ஆவணத்தின் நோக்கத்தை கருத்தில் கொண்டு, பொருத்து-அருள வேண்டுகிறேன்.

புதுவை சித்தர்களை பற்றி 1978ஆம் ஆண்டு "ஞான பூமி" என்று புத்தகத்தில் -சித்தர்களை பற்றியும், அவர்களின் வாழ்க்கை, ஜீவ சமாதிகளை பற்றியும் எழுதியவர் தவத்திரு.சுவாமி ஓம்கார நந்தா. இன்று வரும் பல நூல்களுக்கு,"ஞான பூமியே" மூல நூல் என்பதில் எந்த ஐயமும் எனக்கு இல்லை. அவருக்கு எனது பணிவான வணக்கங்கள்,, அவரின் படைப்புக்கு எனது கோடானகோடி நன்றிகள்.

இது ஒரு ஆன்மிக நோக்கத்துடன் வெளியிடப்படும் ஒரு ஆவணம். விற்பனைக்கு அல்ல/ செய்யாதிர்; இலவசமாக தாருங்கள். தங்களின் மேலான கருத்துகளை/விமர்சனங்களை/ பிழைகள் திருத்த, esanoruvanae@gmail.com என்ற மின்முகவரியில் தெரியபடுத்தலாம்.

சுமார் 90 அடியார்களை அழைத்து சென்று, அனைத்து ஏற்பாடுகளையும் செய்த பாண்டி-வில்லியனூர் ஜல்லியார் டூர்ஸ் & டிராவல்ஸ் உரிமையாளர் சிவனடிமை திரு.ஜல்லியார் செல்வம் (எ) அத்தியப்பன் அவர்களுக்கு எனது கோடானகோடி நன்றிகள். தொடர்பு - 7708557755 // 7708558855. இந்த ஆவணத்தில் சித்தர்களை பற்றிய தகவல்களை தங்கள் பக்கத்தில் இருந்து எடுத்து கொள்ள அனுமதி அளித்த திரு. சிவா (http://jnanabhoomi.blogspot.ie/ & http://pudhuvaisithargal.blogspot.in), திரு.ஜெயராமன் (http://santhipriyaspages.blogspot.in), திரு. கார்த்திக் மற்றும் &திரு.மாதவன் (http://www.puduvaisiththargal.com/) அவர்களுக்கும் எனது நன்றிகள்.

சித்தன்/ஞானி/மகான்/பரதேசி

சித்தன்/ஞானி/மகான்/பரதேசிகள் என்பவர்கள் யார்? என்பதை ஆசிரியர் கோ.திருமுருகன் தன்னுடைய ஜீவ அமிர்தம் புத்தகத்தில் (வைதேகி பதிப்பகம்) மிகவும் அழகாக கூறியுள்ளார்கள். அதை காண்போம்!

“யாதும் ஊரே யாவரும் கேளிர்" என்ற அடிப்படை தத்துவத்துடனும் "ஒன்றே குலம் ஒருவனே தேவன்" என்ற உண்மையான ஒருமைப்பாடு உணர்வோடு, " சித்தம் போக்கு சிவன் போக்கு" என்ற கட்டற்ற சுதந்திர பரவசத்துடன், எவ்வித சமய சடங்குகளுக்கு கட்டுப்படாமல் தனித்து சிந்தித்து வழிகண்ட மனிதனே சித்தன்/ஞானி/மகான்/பரதேசி. பரதேசி என்பது புனிதமான சொல். அது இறைவனை குறிக்கும் சொல். பரமாகிய உலகத்தை ஆளும் இறைவன் பரதேசி என பெயர் பெறுகின்றார்.

சித்தர்களின் ஆயுட்காலம் இயற்கையாக முடிந்தபின் அவர்களுக்கு சமாதி எழுப்பப்படுகிறது. இச்சமாதி அதிஷ்டானம் என்று அழைக்கப்படுகின்றது. சில சித்தர் பெருமான்கள் உயிரோடு ஒரு குறிப்பிட்ட இடத்தில் உள்ளிறங்கி அப்படியே சமாதி ஆகின்றார்கள். இதற்கு ஜீவசமாதி என்று பெயர். இவர்களுக்கு தாங்கள் எந்த நாளில், நேரத்தில், எந்த இடத்தில் ஜீவசமாதி ஆகப் போகிறோம் என்பது முன்பே தெரியும்.


உலக மாயைகளில் இருந்து விடுபட்டு, தெளிந்த ஞான பார்வையில் மெய்பொருளை கண்டுணர்ந்து, என்றென்றும் ஆனந்த இனிப்பை அருந்தி வாழும் சித்தன்/ஞானி/மகான் முக்தி பெற்று, சமாதி அடைந்த இடங்களில் இறைவனின் பேர் ஆற்றல் கிடப்பதை பற்றி குதம்பை சித்தர் தமது பாடலில் தெளிவாக எடுத்துரைக்கிறார்.

“சிற்பிகள் கட்டிய கோயிலிலே
தற்பரன் இருக்க மாட்டான்; குதம்பாய்
தற்பரன் இருக்க மாட்டான்
சித்தர்கள் ஞானிகள் ஜீவ சமாதியில்
தற்பரன் தாண்டவம் புரிவானடி - குதம்பாய்
தற்பரன் தாண்டவம் புரிவானடி.”

நமது எண்ண ஓட்டங்களையும், பதட்டம், பரபரப்புகளை கட்டுபடுத்தி மனதை ஒருமுகபடுத்தி உதவுகின்றன மகான்களின் ஜீவசமாதிகள். ஜீவ சமாதிகள் முன்னால் அமர்ந்து தியானிக்கும் வேளையில் நல்ல ஒரு சக்தி நம்மை தழுவுவது போல் தோன்றும்.அவரவர் பக்குவபடி அவரவருக்கு அதிகமாகவும், குறைவாகவும் அருள் கிடைக்கும் (**எழுத்துகள் - ஜீவ அமிர்தம் புத்தகம், ஆசிரியர் கோ.திருமுருகன், வைதேகி பதிப்பகம் சொந்தமானது**).

இவ்விதம் நமக்கு தெரிந்தும் இன்னும் தெரியாத பல சித்தர்கள் உலவி, தம் அருள் ஆற்றலால் புண்ணியமாக்கிய பூமிதான் - புதுவை மண். இப்படி புதுவையிலும் அதை சுற்றியுள்ள பிற இடங்களிலும் உள்ள சித்தர்களின் ஜீவ பீடத்திற்குச் சென்று வழிபட்டு, அவர்களின் பேரருளை பெறுவோமாக!

புதுவை சித்தர்கள்



http://esanoruvanae.blogspot.in/

புதுவை சித்தர்கள்



http://esanoruvanae.blogspot.in/

1. அருள்மிகு மணக்குள விநாயகர் திருக்கோயில் - ஸ்ரீ தொள்ளைகாது சுவாமிகள்.



இந்த சித்தருக்கு பூர்வீகம் திருநெல்வேலி அல்லது மதுரையாக இருக்கும் என்று சொல்லப்படுகிறது. இவருக்கு அப்பா கிடையாது, அம்மா இவரை செல்லமாக வளர்த்தார். உரிய வயதில் செல்வம் மிகுந்த ஒரு பெண்ணை திருமணம் செய்ய நிச்சயம் செய்தனர். ஆனால் திருமணத்திற்கு முதல் நாளன்று மணப்பெண், தான் வேறு ஒருவரை விரும்பியதை தொள்ளைக்காது சித்தரிடம் தெரிவித்தனர். இதனால் சித்தர் யாரிடமும் சொல்லாமல் வீட்டைவிட்டு வெளியேறி, புதுச்சேரி அருகில் முரட்டாண்டி வந்து தங்கினார். பல நூறு மைல்கள் நடந்து வந்த களைப்பு தீர அங்கேயே சில நாட்கள் தங்கி விட்டார். பின்னர் அங்கிருந்து புதுச்சேரி நகரப்பகுதிக்கு வந்தார்.

இங்கு மணக்குள விநாயகர் கோவிலுக்கு சென்றார். அங்குதான் அவர் தனக்கு ஞானம் கிடைத்தது போன்ற உணர்வை பெற்றார். பின்னர் அங்கிருந்து முத்து மாரியம்மன் கோவிலுக்கு சென்றார். அதன்பிறகு தினமும் காலையில் மணக்குள விநாயகரை பூஜை செய்வார். அதன்பிறகு முத்து மாரியம்மனை தரிசிப்பார். அதன்பின் முரட்டாண்டிக்கு சென்று விடுவார். அவர் மக்களுக்கு அருளாசி வழங்கி நோயாளிகளை குணமடைய செய்து வந்தார். அதேபோல் கொடிய வறுமையில் சிக்கி தவித்தவர்கள் இவரின் ஆசீர்வாதத்தால் நல்ல நிலைக்கு உயர்ந்து உள்ளனர். தனிமையை விரும்பியதால் மக்களிடையே சித்து வேலைகளை செய்தார். அதாவது காலையில் மணக்குள விநாயகர் கோவிலில் பூஜை செய்வார். அங்கு மறைந்து முத்து மாரியம்மன் கோவிலினுள் இருப்பார். திடீரென்று அங்கும் மறைந்து முரட்டாண்டியில் இருப்பார்.



ஒரு முறை முரட்டாண்டியில் சித்தர் தங்கி இருந்த இடத்தில் ஏதோ பெரும் நெருப்பு பற்றி எரிவது போலத் தோன்றவே மக்கள் என்னவோ ஆபத்து என்று அங்கு சென்று பார்த்தனர். அங்கு தொள்ளைக்காது சித்தர் அமர்ந்திருந்தார். அங்கு தீப்பிடித்ததற்கான எந்த அறிகுறியும் இல்லை. இப்படி பல்வேறு சம்பவங்கள் நிகழ்ந்துள்ளன. ஒரு பவுர்ணமி நாளில், சித்தர் மணக்குள விநாயகர் கோவிலுக்கு வந்தபோது அங்கு பெருநெருப்பு மூண்டது போன்ற காட்சி நடந்தது. பக்தர்கள் சென்று பார்த்தபோது அந்த நெருப்பின் நடுவில் சித்தர் அமர்ந்திருந்தார். திடீரென்று நெருப்பு காட்சி மறைந்தது. சித்தர் உடல் அசையாமல் இருந்தது. சித்தர் யோகநிலையில் பக்தர்களுக்கு சந்தேகம் ஏற்பட்டது. உடனே அருகில் சென்று பார்த்தனர். சித்தர் எந்த ஒரு அசைவுமின்றி இருந்தார். ஆனால் உடல் நெருப்பு போல அனல் வீசியது. 3-நாட்கள் வரை பொறுத்து பார்த்த மக்கள் சித்தரிடம் எந்த ஒரு அசைவும் ஏற்படவில்லை. அப்போது சித்தர் சமாதியடைந்ததாக கருதினர். அவரின் உடலை அவர் வணங்கிய மணக்குள விநாயகர் கோவிலினுள்ளேயே விநாயகருக்கு பின்புறத்தில் சமாதி செய்தனர். தொள்ளைகாது சித்தர்களின் சமாதி அக்கோவிலின் கருவறைக்கு அருகில் அமைந்துள்ளது.

(எழுத்துக்கள் - http://www.maalaimalar.com/2015/04/03085246/manakula-vinayagar-temple-thol.html சொந்தமானது).

2. ஸ்ரீ நாகலிங்க சுவாமிகள், அம்பலத்தடையார் மடம், செட்டிகோவில் தென்புற வீதி.

திருவாசகம் இறைவனால் எழுதப்பெற்றது.இந்நூலில் இறைவனை எப்படி அடைவது, இறைவனின்பெருமைகள், அண்ட கோளங்களின் விந்தைகள், இரகசியங்கள் இயக்கங்கள், அவைகளை இயக்கும் மூலப்பொருள்கள், சூட்சும நிலைகள் யாவும் விவரிக்கப்பட்டுள்ளன. கனக சபையிலிருக்கும்

இந்நூலை யாரிடம் ஒப்புவிப்பது என்ற பிரச்சனை வந்தது.ஒவ்வொருவரும் தாங்களே இந்நூலை வைத்துக் கொள்ளவேண்டும் என்ற வைராக்கியத்தைக் கொண்டனர்.

அது பொழுது ஒரு அசரீரி கேட்டது;-"இந்நூலை நம் சிவகங்கையில் விடுங்கள்.அது கங்கையை சுற்றியிருக்கும் யாரிடம் போய் சேருகின்றதோ -அவரிடம் இருக்கட்டும்" என்றது. அவ்வாறே அந்நூல் சிவகங்கையில் விடப்பட்டது.ஆத்ம சாதகரும் சிவநேசச்செல்வருமாகிய ஒரு பெரியவரிடம்-அந்நூல் வந்து நின்றது.அவர், அந்நூலை எடுத்து தலையில் வைத்துக் கொண்டு சிவ பஞ்சாட்சரத்தை ஓதிக் கொண்டே அகத்திற்கு ஏகினார். அன்று முதல் அவ்விடத்திற்கு ஸ்ரீ பாதபூஜை அம்பலத்தாடையார் மடம் என்று பெயர் வழங்கலாயிற்று.பெரியவர்க்கு பின் ஒருவர் பின் ஒருவராக திருவாசகத்திற்கு சிவபூஜை செய்து பாதுகாத்தனர். இச்சமயம், கர்னாடகா யுத்தம் வந்தது.கோவில்களும், மடங்களும் இடித்து நாசமாக்கப்பட்டன. யுத்தம் சிதம்பரம் வரை பரவியது.



அப்பொழுது, அம்பலத்தாடையார் மடத்து பத்தாவது பட்டத்தை வகித்து வந்தார் ஸ்ரீ நாகலிங்க சுவாமிகள். யுத்தம் பரவி வருவதும் கோவில்கள் இடிக்கப்பட்டு நாசமாக்கப்படும் செய்தியை கேள்விப்பட்டு அதிர்ந்தார்.கண் கலங்கினார். இறைவனால் கைச்சாத்து இடப்பட்ட அத்தெய்வத் திருநூலுக்கு பாதிப்பு வந்து விடுமோ என்று பயந்தார். பரம்பொருளிடம் சென்று அழுதார்.உண்பதை விட்டு உயிரில்வதியும் சிவபெருமானை நோக்கி சிவபஞ்சாட்சர தியானத்தினுள் ஆழ்ந்தார். நாட்கள் கடந்தன.யுத்தம் கடுமையாகியது. அழிவுச் செய்திகள் வந்த வண்ணமிருந்தன. சுவாமிகள் நித்திரையை விட்டார்.சிவதியானத்தை தீவிரமாக்கினார். உலகியல் நினைப்பொழித்தார். திருவாசகத்தை காக்க வேண்டுமே என்ற ஒரே சிந்தனையில் இருந்தார்.ஓம் சிவாய நம என்ற நாமத்தில் ஆழ்ந்திருந்தார். அடியாரின் துயர் கண்ட இறைவன், இனியும் கலங்க வைப்பது முறையல்ல என்றெண்ணி நாகலிங்க சுவாமிகளின் நெற்றிப் பொட்டில் பூரணமாய் பரிணமிக்கும் இடத்தை சுட்டி காட்டினார். சுவாமிகள் களிப்பு கொண்டார்.இறைவன் சுட்டிக் காட்டிய இடமான ஞான பூமியாம்-புதுவை என்பதனைக் கண்டு மகிழ்ந்தார்.

ஆத்மசாதனைக்கு மிகவும் உகந்த இடமானதும், சித்தர்களையும் ஞானிகளையும் தன் பால் கவர்ந்திழுக்கும் புண்ணிய பூமியாம்- புதுவை தான்," திருவாசகத்தை" பாதுகக்க சரியான இடம் என்ற இறைவன் தீர்ப்பைக் கண்டு வியந்தார். இறைவன் கருணையை கண்டு மகிழ்ந்தார். திருவாசகம் கொண்ட வெள்ளி பெட்டகத்தை பட்டுத் துணியால் மூடி, சிரத்திலே சுமந்து தொண்டர்கள் இருவரை அழைத்துக் கொண்டு-புறப்பட்டார்-புதுவைக்கு.புயலினின்றும் தப்பித்து கடலூர் வழியாக புதுவை வந்து சேர்ந்தார்.

புதுவையில் ஒரிடத்தில் சிறு குடில் அமைத்து திருவாசகப் பெட்டகத்தை வைத்து சிவபூஜை செய்து வந்தார்.ஆழ்ந்த சிவத்தியானத்தில் ஈடுபட்ட நாகலிங்க சுவாமிகளுக்கு சக்திகள் பெருகின. அவை சித்துக்களாக மாறின.அன்பர்கள் பலரும் சுவாமிகளை தேடி வந்து, குறைகளைக் கூறி போக்கிக் கொண்டனர். சுவாமிகளின் பெருமைகளை பலரும் உணர்ந்தனர்.இப்படியே பல ஆண்டுகள் கடந்தன. சுவாமிகள் இறைவனோடு கலக்கும் நாளை எதிர்ப்பார்த்திருந்தார்.


ஒருசமயம் சிவபூஜை செய்து கொண்டிருக்கும் பொழுது அருகிலிருந்த பட்டத்து தம்பிரான் எதிர்கால நிகழ்ச்சியை சூசகமாக தெரிவிக்க- சீடன் பக்குவ நிலைக்கு வந்திருப்பதை உணர்ந்து, அக்கணமே தமது10 வது பட்டத்தை 11வது பட்டமாக சீடனுக்கு அளித்து பீடத்தில் அமர்த்தினார்.அன்றிரவே தாம் இறைவனோடு கலக்கும் செய்தியை இறைவனின் திருக்குறிப்பின் மூலம் உணர்ந்தார். இரண்டாம் நாள் தெய்வீக நிலையிலேயே சென்றது.சுவாமிகள் மௌனத்தையே கடைப்பிடித்தார்.தம் சீடர் செய்ய வேண்டிய முறைகளை மட்டும் விளக்கினார்.மூன்றாம் நாள் வந்தது.சிவத்தினுள் சிவமாகும் நேரமும் வந்தது.சிவத்தோடு ஐக்கியமாகும் ஜீவன் முக்தி பெற்றார்.

உலகம் உய்ய இறைவன் அருளிய திருவாசகத்தைப் போற்றி பாதுகாத்து, புதுவைக்கு கொண்டு வந்த பெருமை ஸ்ரீ நாகலிங்க சுவாமிகளையே சாரும். சுவாமிகள் தங்கியிருந்த இடத்தினுள்ளே அவரின் சமாதி

அமைக்கப்பட்டுள்ளது. சமாதி மேல் சிவலிங்கம் பிரதிஷ்டை செய்யப்பட்டுள்ளது இத்தெய்வீக இடத்திற்கு அம்பலத்தாடையார் மடம் என்று பெயர். இம்மடம் அமைந்துள்ளதால் அத்தெருவிற்கு அம்பலத்தாடையார் மடத்து வீதி என்று பிரஞ்சு அரசு பெயர் சூட்டியுள்ளது. திருவாசகம் அமைந்த வெள்ளிப் பெட்டகம் அன்றாடம் பூஜிக்கப்பட்டு வருகிறது.ஒவ்வோர் ஆண்டும் சிவராத்திரியன்று இரவு பெட்டகம்திறக்கப்பட்டு பூஜை செய்யப்படுகின்றது (எழுத்துக்கள் - http://jnanabhoomi.blogspot.in/2010/01/blog-post_6063.html சொந்தமானது).

3. ஸ்ரீ குரு அக்காசுவாமிகள் திருகோவில், வைத்திக்குப்பம்.

ஸ்ரீ அக்கா பரதேசி சுவாமிகள் பருமனாக இருப்பார். நல்ல வாட்ட சாட்டமான உடல்.நல்ல உயரம்.நல்ல சிவப்பு.சிறு வயதில் மாடு மேய்க்கும் சிறுவனாக வாழ்க்கை நடத்தி வந்தார். மாடுகளை ஓட்டிச் சென்று மேய்ச்சலுக்கு விட்டு விட்டு, தான் களிமண்ணால் செய்த பிள்ளையாருக்கு, பூக்கள் தொடுத்து மாலை அணிவித்து பூஜை செய்வார். எப்போதும் பிள்ளையாருக்கு அலங்காரம் செய்து மகிழ்வார். அதுசமயம் ஒரு பெண், சிறுவன் வணங்கிய மண்பிள்ளையாரை வணங்கினாள். சிறுவனுக்கு சந்தோஷம் தாங்க முடியவில்லை.தன் கையால் செய்து, தான் வணங்கி வரும் பிள்ளையாரை ஒரு பெண்ணும் வணங்குவதைக் கண்டு-மகிழ்ச்சி பொங்க அந்த பெண்ணின் கையை பிடித்து முத்தம் கொடுத்து விட்டார்.அப்பெண் கோபம் கொண்டு"உன் அக்கா வயதிருக்கும் என் கையை பிடித்து-முத்தம் கொடுக்கிறாயா? "என்று கோபித்து கடுமையாக பேசி விட்டு சென்று விட்டாள். அப்பெண் பேசியதை சிறுவனால் தாங்கிக் கொள்ள முடியவில்லை.அதையே நினைத்து நினைத்து மருகினார். பெண் இன்பத்திலிருந்து தம்மை விலக்கிக் கொள்வதற்காக வேண்டி எல்லா பெண்களையும் தன் சகோதரிகளாக கருதினார். எந்த பெண்ணைக் கண்டாலும் "அக்கா" "அக்கா" என்றே கூப்பிடுவார். அதனால் எல்லோரும் இவரை "அக்கா சாமியார்" என்றும் "அக்கா பரதேசி சாமியார் "என்றும் "அக்கா சித்தர்" என்றும் பலவாறு அழைத்து வந்தனர். கடைசியில் "குரு அக்கா சுவாமிகள்" என்ற பெயரே நிலைத்து விட்டது.



ஒரு நாள் இவர் வீதியில் சென்று கொண்டிருக்கும் பொழுது, ஒரு இடத்தில் பிச்சை கேட்டார். அப்பொழுது ஒரு வயதான பெண்மனி, இவருக்குள்ள வாட்ட சாட்டமான உடம்பிற்கு உழைத்து சாப்பிடலாமே-ஏன் பிச்சை எடுக்க வேண்டும் என்று கேட்க- செஞ்சிக்கு சென்று வேலை தேடினார். போலீஸ் வேலைக்கு மனு செய்து வேலையும் கிடைத்தது. காலம் சென்றது. ஒரு நாள் இவரின் மேலதிகாரி, மீன் வாங்கி வீட்டில் கொடுத்து விட்டு வரச் சொன்னார்.அதைச் சுவாமிகள், தாம் சாப்பிடுகின்ற ஒரு பெரியம்மாள் வீட்டில் கொடுத்து விட்டு வந்து விட்டார். அன்றிரவு, அம்மேலதிகாரி வீட்டிற்கு மீன் வராததைக் கண்டு கோபம் கொண்டு-சுவாமிகளைத் தேடி காவல் நிலையத்திற்கு சென்றார். அங்கு சுவாமிகள் தூங்கிக் கொண்டிருப்பதைக் கண்டு, மறுநாள் அவரை வேலையை விட்டு நீக்க முடிவு செய்து, வீட்டிற்குதிரும்பினார். மறு நாள் அதிகாரி சுவாமிகளிடம் மீனைப் பற்றி விசாரித்தார். மீன் பத்திரமாக இருப்பதாகக் கூறி அப்பெரியம்மாளிடமிருந்து மீனை வாங்கிக் கொண்டு வந்து காட்டினார். அதைக் கண்ட அதிகாரிக்கு கோபம் அதிகமானது. இரவு மீனை சாப்பிடவிடாமல் கெடுத்து விட்டானே என்று கொதித்தார். மேலதிகாரியின் கையிலிருந்த செத்த மீன்கள் உயிர்பெற்று துள்ளிக் குதித்தன. அதைக்கண்ட மேலதிகாரி அதிர்ச்சியடைந்தார்.

உடனே சுவாமிகள், தம்முடைய உடுப்பைக் கழற்றி வைத்து விட்டு சொன்னார். நள்ளிரவில் மேலதிகாரி வீட்டில் நடந்தவைகள், காவல் நிலையத்திற்கு அவர் வந்தது, பேசிய பேச்சுக்கள், எண்ணிய எண்ணங்கள், எல்லாவற்றையும் ஒன்று விடாமல் சொன்னார். "சாகும் பிணங்கள் -இன்று செத்த பிணத்தை தின்னும். மனிதரிடம், சேவகம் செய்ய விரும்பேன் "என்று கூறி விட்டு புதுவையை நோக்கி புறப்பட்டார். புதுவைக்கு வந்த சுவாமிகள் -வாழைக்குளம் என்னும் பகுதியில் தங்கியிருந்து சிவத்தியானம் செய்து வந்தார்.ஆத்ம சாதனையில் வெற்றி கண்டார். சுவாமிகளுக்கு சாப்பாடு கொடுக்க பல அன்பர்கள் காத்துக்

கொண்டிருப்பார்கள். ஒரு வீட்டில் சுவாமிகள் சாப்பிட வேண்டுமென்றால் ஒரு ரூபாய் கொடுக்க வேண்டுமென்ற நிபந்தனையின் பேரில் சாப்பிடுவார். அந்த ஒரு ரூபாயை கொண்டு வந்து --புதுவை, சோலைத்தாண்டவ குப்பத்தில் வசித்த ஒரு அச்சுக்கூடத்தார் வீட்டில் கொடுப்பார். இப்படியாக பல மாதங்கள் கொடுத்து வந்தார். திடீரென்று ஒரு நாள், ஒரு ரூபாயைக் கொடுத்துவிட்டு "இன்றோடு முன்பட்ட கடன் தீர்ந்து விட்டது "என்று சொல்லி சென்றார்.

தன் ஊழ்வினையை எப்படி அழிப்பது என்று அறிந்திருந்தார். ஒரு சமயம் சுவாமிகள் யாழ்ப்பாணம் சென்றிருந்தார்.அங்கு ஒரு பெரும் செல்வந்தர் சுவாமிகளின் பெருமையை நம்பாமல், கேலி செய்தார். "சுவாமிகள்-என்ன, அபிஷேகம் செய்து கொள்ளுமா?" என்று ஏளனம் செய்தார்.சுவாமிகளும் சிரித்துக் கொண்டே

"ஓ- தாராளமாக செய்யலாமே" என்று பதிலளித்தார்.

சுவாமிகளை அமரச் செய்து-வேண்டும் என்றே அவர் மேல், சுடச் சுட அன்னத்தை வடித்துக் கொட்டினார்கள்.சுவாமிகள் அமைதியாக நிஷ்டையில் ஆழ்ந்திருந்தார்.அன்னாபிஷேகம் முடிந்தது. சிறிது நேரம் கழித்து சாதத்தின் சூடு ஆறியதும், "சுவாமிகள் இந்நேரம் பரலோகம் சென்றிருப்பார்" என்று

கேலி பேசியவாறு அவர் மேலிருந்த சாதத்தை விலக்கிப் பார்த்தனர்.சுவாமிகள் ஆடாமல், அசையாமல் யோகத்தில் இருந்ததைப் பார்த்து-அவரின் சக்தியை உணர்ந்தனர்.தங்கள் தவற்றை உணர்ந்து சுவாமிகளிடம் மன்னிப்பு கேட்டனர். அன்னாபிஷேகம் செய்தவரின் பார்வை போய் விட்டது.

பின்னர் சுவாமிகள் புதுவைக்கு வந்தார். சுவாமிகளுடன் கண்பார்வை பறிபோனவரும் புதுவைக்குபுறப்பட்டு வந்தார்.ஒவ்வொரு நிமிடமும் தான் செய்த பெரும் பிழையை நினைத்து நினைத்து வருந்தினார். இப்படியே சில காலம் சென்றது.

ஒரு நாள், சுவாமிகள் திடீரென்று "அதோ தெரியும் திருமுருகனைப்பார்" என்று குருடரிடம் சொன்னார். "பார்வையில்லையே-எப்படிப் பார்ப்பது" என்றார் குருடர்." நன்றாகப் பார் தெரியும்" எனச் சுவாமிகள்சொல்ல -அப்படியே முருகனின் உருவத்தை ஆழ்ந்து நோக்க கண் பார்வை வந்தது.

ஒரு நாள், தாசிகள் இருவர் சுவாமிகளை எப்படியாவது தங்கள் வலையில் விழ வைத்து விட வேண்டும் என்று எண்ணி-அவரிடம் நயவஞ்சகமாக பேசி-புதுவை, தங்கள் இல்லத்திற்கு அழைத்துச் சென்றனர்.வீட்டின் கடைசி பகுதிக்கு அவரை அழைத்துச் சென்று அவர் மேல் கை வைக்க முயன்றனர். சுவாமிகள், சிரித்துக் கொண்டே வேகமாக வெளியே வர-வீட்டின் ஒவ்வொரு பகுதியாக இடிந்து விழுந்தது.வீடே நாசமாகியது.

சுவாமிகள், வாழைக்குளம் பகுதியில்-குதிரைக்குளம் அருகே சமாதியடைந்தார். அந்த சமாதியின் மேல் லிங்கம் பிரதிஷ்டை செய்யப்பட்டு -சிவாலயம் எழுப்பபட்டுள்ளது. சுவாமிகளின் சிஷ்யரான குரு நாராயண பரதேசி சுவாமிகளின் சமாதியும் -அத்திருகோவிலினுள் அமையப் பெற்றுள்ளது. அந்தக் கோவில் அமைந்துள்ள தெருவிற்கு "குரு அக்கா மடத்து வீதி "என்று பெயர்.



சுவாமிகள், தன் கையினால் செய்து பூஜித்து வந்த விநாயகர் புதுவை, கந்தன் தியேட்டர் (வணிக வளாகம்) அருகில், 45 அடி ரோடு திருப்பத்தில் அமைந்துள்ளது.மிகவும் சக்தி வாய்ந்த அந்த விநாயகரை "சாலை விநாயகர்"என்று அழைக்கிறார்கள். மண் பிள்ளையார் சிறுகச் சிறுக வளர்ந்து வருவதாக வயதான பெரியவர்கள் சொல்கிறார்கள் (எழுத்துக்கள் http://jnanabhoomi.blogspot.in/ சொந்தமானது).

4.ஸ்ரீ குரு வேதானந்த சுவாமிகள், திருவள்ளுவர் நகர் சாலை, வசந்த் நகர்.

வேதானந்த சுவாமிகள் 1892 -ம் ஆண்டு திருமருகல் என்னும் ஊரில் பிறந்தார். இவரின் உண்மை பெயர் தாண்டவராயன். தன்னுடைய 12 ஆம் வயதிலில் விட்டை விட்டு புறப்பட்டு திருத்தல யாத்திரை தொடங்கினார். தேவாரப் பாடல் பெற்ற தலங்களை கால்நடையாக தரிசித்து கொண்டே வந்தார். விராலிமலை தரிசனம் காண சென்ற பொழுது, இராசகிரிப் பெரியார் ஒருவரை சந்தித்தார். அவரிடம் சீடராக சேர்ந்து திருவாசகம், பட்டினத்தார் பாடல்கள், பகவத் கீதை, தாயுமானவர் பாடல்களை கற்றார்.தம் திருத்தல யாத்திரையை மீண்டும் தொடர்ந்தார். யாத்திரையின் பொழுது சிதம்பரம் மௌன சுவாமிகளை சந்திக்கும் பாக்கியம் பெற்றார். சுவாமிகளிடம் ஆன்மீக படங்களை கற்றுக்கொண்டார். சுவாமிகள் இவரின் திறமையை கண்டு வியந்து "வேலாயுதம்" என்ற பட்டம் சூட்டி அருளினார். பின்னர் திருவாவடுதுறை வெள்ளியம்பலத் தம்பிரானிடம் பிரவுலிங்கலீலை, சிவஞானபோதம் முதலிய சித்தாந்த பாடங்களை கற்று கொண்டார். பின்னர் தல யாத்திரையை தொடர்ந்தார். சாக்கோட்டை ஸ்ரீலஸ்ரீ வீர சேகர ஞான தேசிகரிடம் பல ஞான நூல்களை கற்று கொண்டார். தன் பாத யாத்திரையை மீண்டும் தொடங்கினார். தாமிரபரணி ஆற்றங்கரையில் விவேகானந்தரைச் சந்திக்கும் பாக்கியம் பெற்றார். அவரின் சந்திப்பு அவரை மீண்டும் இல்லற வாழ்க்கை பாதைக்குத் திரும்பியது.




தன் சகோதரி மகளையே திருமணம் செய்து கொண்டார். பொருள் ஈட்டும் நோக்கில் புதுவை வந்தார். புதுவை நேரு வீதியில் கைலி வியாபாரம் ஆரம்பித்தார். அவரது கடை "சாமியார் கடை" என்றே அழைக்க பெற்றது. இல்லற வாழ்க்கையின் பலனாக இரண்டு ஆண் குழந்தைகளுக்கும், ஒரு பெண் குழந்தைக்கும் தந்தை ஆனார். சுவாமிகள் தன் மனைவியின் மறைவிற்கு பிறகு முழு துறவு வாழ்க்கை வாழ தொடங்கினார். தினமும் வேதாந்த பாடங்களை நடத்த ஆரம்பித்தார்.மக்கள் இவரின் பாடங்களை/பேசுவதை கேட்பதற்கு மக்கள் பெரும் அளவு கூடினர். இவரை "வேதாந்த சாமியார்" மற்றும் "வேதானந்த சுவாமிகள்" என்று அழைக்க தொடங்கினர். இவருக்கு பல சீடர்கள் அமைந்தனர். அவர்களின் ஆதரவால் தனது வேதாந்த சொற்பொழிவுகளை தொடர்ந்து நடத்தி வந்தார். நாட்கள் பல ஓடின, ஒரு நாள் தன் பிறந்த பூமியான திருமருகல் சிவன் கோவில் கும்பாபிஷேகம் நடைபெற உள்ள செய்தி அறிந்தார். பயணம் மேற்கொள்ள தயார் ஆனார். அச்சமயமே அவர் உள்ளத்து இறைவன் அடி சேரும் நாள் குறிப்பு கிடைத்தது. இருப்பினும் கும்பாபிஷேகம் கண்டு விட வேண்டும் என்று ஆர்வத்தில் திருமருகல் நோக்கி இரயிலில் புறப்பட்டு விட்டார். மாயவரம் அடையும் பொழுதே, சுவாமிகளின் உடல்நிலை மிகவும் மோசமாகியது. இது இறைவன் கட்டளையை அலச்சியப்படுத்தியதின் விளைவே என்று உணர்ந்து உடனே புதுவை திரும்பினார். புதுவை வந்தவுடன் உடல் நிலை மறைந்தது. சுவாமிகள் 17.09.1962 அன்று பகல் மூன்று மணியளவில் தன் பூத உடலை துறந்து இறைவனுடன் ஐக்கியமானார். (**பொழிப்புரை - புத்தகம் திரு.சி.எஸ்.முருகேசன் அவர்கள் எழுதிய "புதுச்சேரி சித்தர் பீடங்கள்", குறிஞ்சி வெளியிடு**)

5.ஸ்ரீ குரு சித்தானந்த சுவாமிகள், கருவடிக்குப்பம்.

குரு சித்தானந்த சுவாமிகள். சித்துகள் செய்வதிலேயே ஆனந்தம் கண்டவர் என்பதால்தான் அவருக்கு அத்தகைய பெயர் வழங்கப்பட்டு வந்தது. அவரது வாழ்வு பல அபூர்வ சம்பவங்களை உள்ளடக்கியது. புதுச்சேரியில் முத்தியால்பேட்டையை அடுத்துள்ள கருவடிக் குப்பத்தில் சுவாமிகளின் சமாதித் திருக்கோவில் உள்ளது. சித்தானந்த சுவாமிகள் பிறந்த ஊர் புதுச்சேரி அருகே உள்ள கடலூர். புதுச்சேரியில் முத்தியால்பேட்டையில் வாழ்ந்து வந்தார் முத்துக்குமாரசாமிப் பிள்ளை. அவரது மனைவிக்குத் தீராத வயிற்றுவலிலி. யாரோ சொன்னார்கள்- சித்தானந்தர் வீட்டுக்குள் வந்தால்

வயிற்றுவலிலி உடனே சரியாகிவிடும் என்று. நம்பிக்கையோடு சித்தானந்தரைத் தேடி கடலூர் வந்தார் முத்துக்குமாரசாமிப் பிள்ளை. விஷயத்தைச் சொல்லிலி அவரைத் தன் வீட்டுக்கு வருமாறு அழைத்தார்.

சித்தானந்தர், "அதற்கென்ன புறப்படுவோம்' என உடன் கிளம்பினார். அவர் புதுச்சேரியில் பிள்ளை வீட்டுக்குள் நுழைந்த மறுகணம் பளிச் என்று வயிற்றுவலி முற்றிலுமாக நீங்கி எழுந்து உட்கார்ந்தாள் பிள்ளையின் மனைவி. அதுவரை வயிற்றுவலிலியால் துடித்துக் கொண்டிருந்த அவள் அளவற்ற நிம்மதி அடைந்தாள். தெய்வம் அல்லவா மனித வடிவில் வந்திருக்கிறது! சற்று யோசித்த அவள் சித்தானந்தரிடம் ஒரு வேண்டுகோளை வைத்தாள். "சாமீ! நீங்கள் எங்கள் வீட்டிலேயே சிலகாலம் தங்கலாகாதா?' என்பதே அந்த எளிய பெண்மணியின் வேண்டுகோள். இதற்கான காரணங்கள் இரண்டு. சுவாமிகள் தன் இல்லத்தில் தங்க வேண்டும் என உண்மையிலேயே பக்திப்பூர்வமாக அவள் விரும்பினாள் என்பது ஒன்று. சுவாமிகள் தன் வீட்டை விட்டுச் சென்றால் தன் கொடும் வயிற்றுவலிலி எங்கே மறுபடி வந்துவிடுமோ என அஞ்சினாள் என்பது இன்னொன்று. அவள் எண்ணத்தைப் புரிந்துகொண்ட சுவாமிகள் நகைத்தார். ""மகளே! உன் வயிற்றுவலிலி மீண்டும் உன்னைத் துன்புறுத்தாது. அதற்குக் காரணமான தீய சக்திகள் வீட்டை விட்டு விலகி ஓடிவிட்டன. உனக்கு மறுபடி வயிற்றுவலிலி வருமோ என்ற அச்சம் தோன்றும்போதெல்லாம் பிறவிப்பிணி உள்ளட எல்லாப் பிணிகளையும் போக்கக் கூடிய நமசிவாய மந்திரத்தை ஜெபிப்பாயாக. என்றாலும் உன் வேண்டுகோளுக்கு நான் உடன்படுகிறேன். உன் வீட்டிலேயே தங்குகிறேன்!" என்றார் சுவாமிகள். முத்துகுமாரசாமிப் பிள்ளையும் அவர் மனைவி அன்னம்மாளும் அடைந்த ஆனந்தத்திற்கு ஓர் அளவு உண்டா என்ன? மாபெரும் சித்தராய் உலகோரால் கொண்டாடப்படும் ஒரு மகான் தங்கள் வீட்டிலேயே கொஞ்ச காலம் தங்கப் போகிறார்! பக்திப் பரவசத்தில் அவர்கள் தழுதழுத்தார்கள். தினமும் அந்த வீட்டில் நடந்தது ஆன்மிகச் சந்தைதான். நூற்றுக்கணக்கான மக்கள் சுவாமிகளைத் தேடி வந்தார்கள். ஒவ்வொரு வருக்கும் ஒவ்வொருவகை பிரச்சினை.



சுவாமிகளின் அருளுரையைக் கேட்டும், அவர் நிகழ்த்தும் அற்புதங்களைக் கண்டும் அவர்கள் மெய் சிலிலிர்த்தார்கள். எல்லாரிடமும் ஆசைகளைக் குறைத் துக் கொண்டு நேர்மையான வழியில் வாழுமாறு வலிலியுறுத்தினார் சுவாமிகள். தீய பழக்கங்களைத் தொலைத்துவிட்டு தூய வாழ்வுக்குத் திரும்பு மாறு கூறினார். அவரது அருளுரைகளுக்கு வசப்பட்டு மக்கள் மெல்ல மெல்ல நல்ல நெறிகளை அனுசரித்து வாழத் தலைப் பட்டார்கள். சுவாமிகளின் புகழ் மேலும் மேலும் பரவியது. சித்தானந்தர் பற்பல உடல் பிணி களுக்கு மருத்துவம் செய்தார். அவருக்கு உடல்நோய்களைத் தீர்க்கும் மருத்துவம் தெரிந்திருந்தது. தமது அற்புத சக்தியினாலும் பலரது பிணிகளைக் குணப்படுத்தினார். எங்குசென்றாலும் அன்னம்மாளுக்கும் முத்துக்குமாரசாமிப் பிள்ளைக்கும் கொடுத்த வாக்குறுதிப்படி இரவு அவர்கள் வீட்டிற்குத் திரும்பிவிடுவார். சுவாமிகள்மேல் மட்டற்ற அன்பு செலுத்திய அந்த அபூர்வத் தம்பதிகள் அவரைத் தங்கள் பிள்ளைபோல் பார்த்துக் கொண்டார்கள். முத்துக்குமாரசாமிப் பிள்ளைக்கு சுவாமிகள் பிள்ளை ஆனார்! அன்னம்மாளின் வயிற்றில் பிறந்த பிள்ளை அல்ல என்றாலும் வயிற்றுவலிலி நீக்கிய பிள்ளை அல்லவா! சித்தானந்தரின் மகிமைகளால் கவரப்பட்டு முத்தையா முதலிலியார் என்பவர் அவரது தீவிர அன்பரானார்.

முதலிலியாரின் மனைவிக்குத் திடீரென்று கடும் பிரசவவலி எடுத்தது. அப்போது அவள் பட்ட வேதனையையும் அந்த வலியால் அவள் அலறிய அலறலையும் காணவும் கேட்கவும் சகிக்காத முதலியார் மருத்துவரைத் தேடிப் போவதற்கும் முன்பாக சுவாமிகளைத் தேடிவந்தார். ""என்ன செய்வேன். இப்படித் துடிக்கிறாளே அவள்! மருத்துவரைப் பார்ப்பதற் கும்முன் தங்கள் ஆசிகளைப் பெறவந்தேன்" என்று மனம்குமுறிப் பதறினார். அமைதியாக முதலியாரைப் பார்த்த சுவாமிகள், ""ஆனந்தன் என்று பெயர் வை!" என்றார். முதலிலியாருக்கு ஒன்றும் புரியவில்லை. ""என்ன சொல்கிறீர்கள் சுவாமி?" என்று கேட்டார் அவர்.

""உன் மனைவியின் பிரசவ வலி நின்று விட்டது. அவள் இப்போது மிகுந்த மகிழ்ச்சியோடு உன் வரவை எதிர்பார்த்துக் காத்திருக்கிறாள். சுகப் பிரசவம் ஆகியிருக்கிறது. ஆண்குழந்தை பிறந்திருக்கிறது. இனி நீ ஆனந்தமாக இருக்கப் போகிறாய். அதனால்தான் அந்தக் குழந்தைக்கு ஆனந்தன் என்று பெயர் வை என்றேன். இனி மருத்துவர் எதற்கு? நேரே வீட்டுக்குப் போ! மனைவியைக் கவனி!" என்று திருநீறு கொடுத்து அனுப்பினார் சுவாமிகள். வீட்டுக்கு ஓடிய முதலிலியாருக்கு உண்மை யிலேயே ஆனந்த அதிர்ச்சி காத்திருந்தது. பக்கத்தில் கொழுகொழுவென்று ஓர் ஆண் குழந்தை சிரித்துக் கொண்டிருக்க, மனைவி அவரை வரவேற்றாள். தம் ஞானக் கண்ணால் அனைத்தையும் உணர்ந்துசொல்லும் சுவாமிகளின் ஆற்றல் முதலிலியாரைப் பரவசத்தில் ஆழ்த்தியது. அவர் சுவாமிகள்மேல் கொண்ட பக்தி மேலும் வலிமைப்பட்டது.

ஒருநாள் சுவாமிகள் குயவர்பாளையத்தைச் சேர்ந்த ஒரு பக்தர் வீட்டிற்குச் சென்றுவிட்டுத் திரும்பி வந்துகொண்டிருந்தார். வழியிலிலிருந்த சாராயக் கடை ஒன்றின் வாசலிலில் ஒரு குடிகாரன் அவரை வழிமறித்தான். ""சாமீ! ஆன்மிகமெல்லாம் பேசறீங்களாமே? கொஞ்சம் சாராயம் குடிச்சுப் பாருங்க. நல்லா ஆன்மிகம் பேச வரும்!" என்று அவரைக் கிண்டல் செய்தான். அவனைத் தவிர்த்துவிட்டுப் போக முனைந்தார் அவர். ஆனால் அவனோ மறுபடி மறுபடி வழிமறித்து சாராயம் குடிக்கு மாறு வற்புறுத்தினான்.

கெடுதலைத் தனக்குத்தானே வரவழைத்துக் கொள்வதென அவன் முடிவு செய்திருக்கிறபோது அதை யார்தான் தடுக்க முடியும்? சுவாமிகள் ""சரி, சாராயம் கொடு!" என்றார். நிகழவிருக்கும் விபரீதத்தை உணராமல், சாராயக் கடைக்காரரிடம் ""சாமிக்கு வேண்டும் மட்டும் சாராயம் கொடு!" என்றான் அவன். சுவாமிகள் மெல்லிலிய முறுவலுடன் சாராயம் குடிக்கலானார். திரும்பத் திரும்ப சாராயத்தை வாங்கிக் குடித்துக் கொண்டே இருந்தார். ஒரு பீப்பாய் சாராயம் காலிலியாயிற்று! கடைக்காரன் வெலவெலத்துப் போனான். சுவாமிகளைப் பற்றி ஏற்கெனவே அறிந்திருந்த அவன் முகத்தில் அச்சம் பரவியது. ஆனால் சுவாமிகளிடம் எந்தத் தள்ளாட்டமும் இல்லை. ஏதோ பசித்த குழந்தை பாலைக் குடிப்பது மாதிரி குடித்துக் கொண்டே இருந்தார். ஆனால் அவர் குடித்த சாராயத்தின் போதையெல்லாம் குடிகாரன் உடலிலில் ஏறிக் கொண்டிருந்தது. தன் போதையைக் கட்டுப் படுத்த இயலாத அவன் தள்ளாடினான்; தடுமாறினான்; வாய்குழறினான்; மயக்கம் போட்டுக் கீழே சரிந்தான். அளவற்ற போதை காரணமாக அவன் நாடித் துடிப்பு மெல்ல மெல்லக் குறைந்துகொண்டிருந்தது.

கடைக்காரன் சுவாமிகளின் காலிலில் விழுந்து மன்னிப்பு வேண்டினான். ""என்னை ஏதும் சபித்துவிடாதீர்கள். நான் பிள்ளை குட்டிக்காரன்!" என்று அழுதான். ""நீ என்னப்பா செய்வாய்? அவன் சொன்னபடி நீ செய்தாய். அவ்வளவுதானே?" என்ற சுவாமிகள் தன்னை வம்புசெய்த குடிகாரனை ஒரு பார்வை பார்த்து விட்டு, வேகமாக முத்துக்குமாரசாமிப் பிள்ளை இல்லத்தை நோக்கி நடையைக் கட்டினார்.

திகிலடைந்த கடைக்காரன் உடனே ஓடிப் போய் அந்தக் குடிகாரனின் உறவினர்களுக்குத் தகவல் சொன்னான். அவர்கள் வந்து பார்ப்பதற்குள் நிலைமை மோசமாகியிருந்தது. அளவற்ற போதை தலைக்கேற அவன் பிழைப் பதே சிரமம் என்பதை உறவினர்கள் உணர்ந் தார்கள். மருத்துவரிடம் போகலாம் என்று ஒருவர் சொன்னதைக் கேட்டு, அந்தப் பைத்தியக்காரத் தனத்தைச் செய்யவேண்டாம் என்று கண்டித் தாள் அந்தக் குடிகாரனின் மனைவி. தன் கணவனை அள்ளித் தோள்மேல் சுமந்துகொண்டு சுவாமிகளைத் தேடி ஓடினாள் அவள். கூட்டம் அவளைப் பின்தொடர்ந்தது.

சுவாமிகளிடம், ""ஐயா, எனக்கு நீங்கள்தான் மாங்கல்யப் பிச்சை தரவேண்டும்!" எனத் தன் கணவனை அவர் காலிலில் கிடத்தித்தானும்விழுந்து வணங்கினாள். மக்கள் வெள்ளம் என்ன நடக்கப் போகிறதோ என அச்சத்தோடு பார்த்துக் கொண்டிருந்தது. சுவாமிகளின் கருணை மனம் உருகியது. ""டேய். போதையில் கிடந்தது போதும்; எழுந்திரு." என்று ஆணையிட்டார் அவர். அடுத்த கணம் வாரிச்சுருட்டிக் கொண்டு அவன் எழுந்து நின்றான்.

""சாமி... என்னை மன்னிச்சுடுங்க சாமி!" என மறுபடி அவர் காலில் விழுந்து பணிந்தான். இனிமேல் சாராயம் குடிப்பதில்லை என்று மனைவிக்கு சத்தியம் செய்து தரச்சொன்னார் சுவாமிகள். அவன் அப்படியே சத்தியம்

செய்துகொடுத்தான். மனைவி கண்ணீர் மல்க சுவாமிகளுக்கு நன்றி தெரிவித்து விடைபெற்றாள்.

சித்தர்களின் உணவைப் பற்றி என்ன சொல்வது? அவர்களில் சிலர் பல மாதங்கள் சாப்பிடாமலே இருப்பதுண்டு. சிலர் பசி வந்தால் கல்லைக் கடித்துச் சாப்பிட்டுப் பசி ஆறுவதுண்டு! சித்தானந்த சுவாமிகள் எப்போது சாப்பிடுகிறார்- எதைச் சாப்பிடுகிறார் என்றெல்லாம் அதிகம் பேர் எதுவும் அறியவில்லை. அவர் சாப்பிடுவதுண்டா, காற்றையே உணவாய்க் கொள்கிறாரா என்றுகூட சிலர் சந்தேகம் கொண்டதுண்டு.

ஆனால் முத்தையா முதலிலியாரின் மனைவி அவர்மேல் தன் பிள்ளைபோல் பாசம் வைத்தி ருந்தாள். ""உடலைப் பராமரிக்காமல் என்ன தியானம் வேண்டிக் கிடக்கிறது? கொஞ்சம் சாப்பிட்டுவிட்டுப் பிறகு இந்த தியானத்தை எல்லாம் வைத்துக் கொள்ளக் கூடாதா?" என்று அடிக்கடி அவள் அங்கலாய்ப்பாள். தன் வயிற்று வலியை நீக்கியவரின் வயிற்றுப் பசியை நீக்குவதைத் தன் கடமைபோல் மேற்கொண்டிருந்தவள் ஆயிற்றே! சுவாமிகள் எப்போதாவது அவளிடம் வசமாக மாட்டிக் கொள்வார். சாப்பிட்டு விட்டுப் போகும்படி அவள் வற்புறுத்தும்போது சிலநேரம் சரி என்று சாப்பிட உட்கார்வார்.

முத்தையா முதலிலியார் வீட்டில் ஒரு கருங்கல் உண்டு. அம்மிக்கல் மாதிரி சற்று சமதளமாக உள்ள கருங்கல் அது. அதில் இலை எதுவும் போடாமல் கழுவிவிட்டு உணவு பரிமாறச் சொல்வார்.

சுவாமிகள் ஏன் இப்படியெல்லாம் சொல்கிறார் என்ற விசித்திரங்களை யார்தான் அறிய முடியும்? சுவாமிகள் கல்லிலில் சாப்பிடுவதை எண்ணி அந்தப் பெறாத தாயின் மனம் உருகும். ஆனால் என்ன செய்வது? கருங்கல்லில் பரிமாற மறுத்தால், அவர் சாப்பிடாமலே போய்விட்டால் அது இன்னும் சங்கடமல்லவா?

உளுந்து வடை, சுண்டல் போன்றவைதான் அவருக்கு விருப்பமான உணவு வகை. அவற்றை ஏதோ சாப்பிட்டேன் என்று கொறித்துவிட்டு எழுந்துவிடுவார். அவர் தனக்காகச் சாப்பிடாமல் வேறு யாருக்காகவோ சாப்பிடுவதாகத் தோன்றும். சாப்பிட்ட நாட்களிலும் சரி; சாப்பிடாத நாட்களிலும் சரி- உடல் ஆரோக்கியத்திலோ சுறுசுறுப்பான நடையிலோ சுவாமிகளிடம் எந்த வித்தியாசத்தையும் காணமுடியாது.

அவர் மற்ற எல்லாரையும்போல அல்ல; மற்ற எல்லாரையும்விட அதிக ஆரோக்கியத்தோடு இருந்தார். 'சாப்பிடும்போது வேறு யாருக்கோ சாப்பிடுவது மாதிரி சாப்பிடுகிறார். அது மாதிரி அவர் சாப்பிடாத காலங்களில் அவருக் காக வேறு யாரோ சாப்பிடுகிறார்களோ என்னவோ!' என்று நினைத்து வியந்து கொள்வாள் முதலிலியாரின் மனைவி.

சுவாமிகள் சாப்பிடப் பயன்படுத்திய அந்தக் கருங்கல்லுக்கு ஒரு தனி மகிமை வந்தது. பிரசவ வலிலியால் அவதிப்படுபவர்கள் அந்தக் கல்லிலில் சற்று நேரம் உட்கார்ந்தால் போதும். வலிலி விரைவில் நீங்கி சுகப் பிரசவம் நடந்தது! பிரசவத்திற்குக் காத்திருக்கும் பெண்களெல்லாம் முதலியார் மனைவியின் அனுமதியைப் பெற்று, அந்தக் கல்லில் சற்றுநேரம் பிரார்த்தனையோடு அமர்ந்து விட்டுச் செல்வார்கள்.

சுவாமிகள்மேல் ஒரு குயவனுக்கு மிகுந்த அன்பு. அவர் பெருமையை உணர்ந்திருந்த அவன் அடிக்கடி அவரைத் தேடிவருவான். அவரது அருளுரைகளில் மனம் ஈடுபட்டு கேட்டுக் கொண்டிருப்பான். தன் வீட்டாரிடம் சுவாமிகளின் மகிமைகள் பற்றி ஓயாமல் சொல்லிலிக் கொண்டிருப்பான். அவனுக்கு வாழ்நாளில் ஒரே ஒரு ஆசை. சுவாமிகள் என்றாவது ஒரு நாள் தன் வீட்டில் விருந்து சாப்பிட வேண்டும் என்பதுதான் அது. ராமன் சாப்பிடப் போகும் விருந்துக்காக சபரி காத்திருந்த மாதிரி அவனும் பிரார்த்தனை செய்துகொண்டு காத்திருந்தான். சுவாமிகள் எங்கு போனாலும் அங்கே போய் அவரது அருள்பொலியும் திருமுகத்தை மனதில் உள்வாங்கிக் கொண்டான் அவன்.

சுவாமிகள் உபதேசம் செய்யும் நேரங்களில் ஐயப்ப சாமி மாதிரி குத்துக் காலிலிட்டு அமர்வதை யும் நன்கு கவனித்துப் பார்த்துக் கொண்டான். அவனிடம் ஒரு கலை குடியிருந்தது. மண்ணால் பொம்மை செய்யும் கலை. அச்சு அசல் சுவாமிகளைப்போலவே ஒரு பொம்மையை உருவாக்கினான். நெற்றியில் குங்குமம்.

முகத்தில் தாடி. கழுத்தில் ருத்திராட்ச மாலை. அவன் கலைத்திறனோடு உருவாக்கிய சிலை மட்டுமல்ல அது; பக்திப் பெருக்கோடு உரு வாக்கியதும்கூட. அவனது பக்தியை மெச்சி சுவாமிகளே அந்த மண்பொம்மையில் ஊடுருவி அமர்ந்துகொண்டார் என்றுதான் பார்த்தவர் களுக்குத் தோன்றியது.

சுவாமிகளைச் சிறிய வடிவில் நேரில் பார்ப்பதைப்போல் பார்த்தவர் கள் மயங்கினார்கள். அந்தச் சிலையைப் பார்த்து கன்னத்தில் போட்டுக்கொண்டார்கள். சுவாமிகளிடம் ஒருநாள் தன் வீட்டுக்கு விருந்துண்ண வரவேண்டும் என்று விண்ணப்பித்தான். அவர் அவன் முதுகில் தட்டிக் கொடுத் தார். நாளையே வருகி றேன் என்றார்.அந்தக் குயவன் அளவற்ற ஆனந்தம் அடைந்தான். மறுநாள் விருந்துக்கு வேண்டிய எல்லா ஏற்பாடுகளையும் செய்யலானான். அந்த வீடே விழாக்கோலம் பூண்டது.

மறுநாள் காலை சுவாமிகள் வருகை தந்த போது, வாயிலிலில் முழங்காலிலிட்டு அமர்ந்து சுவாமிகளைப் பார்த்தவாறே கண்ணீர் பெருக்கினான் அவன். அந்த எளிய குயவனின் உள்ளார்ந்த பக்தியைக் கண்டு சுற்று வட்டாரமே வியந்தது. குயவன் வீட்டில் ஊர் முழுவதும் குழுமி விட்டது. சுவாமிகள் ஆஞ்சனேயரை ராமபிரான் தழுவிக் கொண்ட மாதிரி அவனை அள்ளித் தழுவிக் கொண்டார். ""அன்பனே, உள்ளே வா" என அவனோடு வீட்டுக்குள் நடந்தார்.

அன்றுதான் சுவாமிகள் அத்தனை சாப்பாடு சாப்பிட்டதை எல்லாரும் பார்த்தார்கள். சுவாமிகள் அவன் தந்த உணவையா உண்டு கொண்டிருந்தார்? அவனது தூய பக்தியை அல்லவா மனமாரப் பருகிக் கொண்டிருந்தார்! விருந்து முடிந்ததும் சுவாமிகளை விழுந்து வணங்கி அவன் தான் உருவாக்கிய சிலையை அவர் கைகளில் கொடுத்தான். அச்சு அசலாக சுவாமிகளைப்போலவே அமைந்திருந்த அந்தச் சிலையைப் பார்த்து கூட்டம் கைதட்டி ஆர்ப் பரித்தது.

சிலையை மறுபடி மறுபடி பார்த்த சுவாமிகள் அருட்புன்னகை புரிந்தார். ""தோலால் மூடப்பட்ட கூடு, மண்ணால் செய்யப்பட்ட கூடு!" எனத் தம்மையும் அந்தச் சிலையையும் காட்டிக் காட்டி குறிப்பிட்டார். ""சிலையை நானாக எண்ணிக் கொள்ளுங்கள்!" என்றார். விரைவில் தான் உலகை விட்டு மறையப் போகிறோம் என்பதை அவர் சூசகமாக உணர்த்தினார். அப்படியும் அவரது குறிப்பை யாரும் புரிந்துகொள்ளவில்லை. ஒருநாள் முத்துக்குமாரசாமிப் பிள்ளையை அழைத்தார் சுவாமிகள். ""வரும் வெள்ளிக் கிழமை எனக்குக் கல்யாணம் நடக்கப் போகிறது. நம் அன்பர்கள் எல்லாரையும் முத்தியால்பேட்டையில் உள்ள சிங்காரத் தோட்டத்திற்கு வரச் சொல்லிலி விடுங்கள்!" என்று உத்தரவிட்டார்.

பிள்ளைக்கு ஏதோ புரிந்தது; புரியாதது போலவும் இருந்தது. புரிந்துகொண்ட உண்மை யைப் புரிந்து கொள்வதில் விருப்பம் இல்லாமல் இருந்தார் அவர். விழிநீரைத் துடைத்துக் கொண்டு அன்பர்கள் அனைவருக்கும் செய்தி சொல்லி அனுப்பினார். அந்த நாளும் வந்தது. எல்லாருமே நடக்கப் போவதை உணர்ந்து கண்ணீர் பெருக்கிக் கொண்டிருந்தனர். ஆராதனைக்குரிய மங்கலப் பொருட்கள் வந்து குவிந்திருந்தன. கூட்டம் வெள்ளம்போல் கூடியிருந்தது. விறுவிறு வென்று நடந்து தோட்டத்திற்குள் வந்த சுவாமிகள், தம் அன்பரான சொக்கலிலிங்கம் பிள்ளை என்பவரை அழைத்தார். தாம் பயன் படுத்திய கைக்கடிகாரத்தையும் தம்முடைய பாதுகைகளையும் அவரிடம் கொடுத்தார்.

""நீ வைத்துக்கொள். எனக்கு கைக் கடிகாரம் தேவைப்படாது. நான் காலத் தைக் கடக்கப் போகிறேன். பாதுகை களும் தேவைப்படாது. மண்ணில் நடக்கத்தான் பாதுகை தேவை. ஆகாயத்தில் நடக்கப் பாதுகைகள் எதற்கு?" அவர் சொன்னதைக் கேட்டு கூட்டம் விம்மியது. மங்கல காலங்களில் அழுவது சரியல்ல என்று கூட்டத்தினருக்கு உணர்த்திய அவர், தாம் உடலை உகுத்தாலும் சூட்சும ரூபமாக அவர்களுக்கு என்றும் வழிகாட்டுவோம் என்று உறுதியளித்தார். கூட்டம் ஒருவாறு தன் துயரத்தைக் குறைத் துக்கொண்டது. அபிஷேக ஆராதனைகளை எந்தெந்த வகையில் செய்யவேண்டும் என்று விரிவாக உணர்த்திய அவர், பத்மாசனத்தில் அமர்ந்து நிஷ்டையில் ஆழ்ந்தார்.

ஆராதனைகள் தொடங்கின. கற்பூர ஆரத்தி காட்டும்போது சுவாமிகளின் ஆன்மா அவரது உடல்

கூட்டிலிலிருந்து விடுதலை பெற்றிருந்தது. செய்தி கேட்டு மக்கள் ஆயிரக்கணக்கில் குழுமத் தொடங்கினார்கள். சுவாமிகளின் திருமேனியைச் சமாதிக்கு எடுத்துச் செல்ல யத்தனிக்கையில் ஓர் அபூர்வ நிகழ்ச்சி நடந்தது. சுவாமிகள் மறுபடி உயிர்த் தெழுந்தார்! அவரைச் சுற்றி ஒரு புனித ஒளி கண்ணைக் கூசவைக்கும் வகையில் படர்ந்திருந்தது. ""ஆராதனைகளைச் செய்யும்போது இன்னின்ன செயல்களை அவசரத்தில் செய்யாமல் விட்டுவிட்டீர்கள். அவற்றையும் பொறுமையாகச் செய்து உடலைச் சமாதி செய்வியுங்கள்!" என்று அறிவுறுத்திய சுவாமிகள், மீண்டும் தன் உயிரை உகுத்தார்! திகைப்படைந்த மக்கள் மறுபடி ஆராதனைகளை முறைப்படி செய்து, அவரது திரு மேனியை அவர் சொன்னவாறே முத்துக் குமாரசாமிப் பிள்ளை தோட்டத்திற்கு ஊர்வல மாக எடுத்துச் சென்றார்கள். அங்கே அவரது உடலை மண்ணில் வைத்து மூடி சமாதி எழுப்பினார்கள். (எழுத்துக்கள் http://www.nakkheeran.in/users/frmArticles.aspx?A=11392 சொந்தமானது).

6.ஸ்ரீ பெரியவருக்கு பெரியவர் சுவாமிகள், பொன்னியம்மன் கோவில், பாக்கமுடையான்பேட்டை.


பெரியவருக்கு பெரியவர் புதுவையில் தட்டாஞ்சாவடி என்னுமிடத்தில் வாழ்ந்து வந்தார். சுமார் 5 ½ அடி உயரமிருப்பார். மெல்லிய சரீரம். கறுப்பு நிறம். நான்கு முழ வெள்ளை வேஷ்டியும்.கரை போட்ட துண்டும்



அணிந்திருப்பார். மிகவும் சுறுசுறுப்பானவர். அற்புத சக்திகளைக் கொண்டவர்.இவர் காலையில் எழுந்து அருகிலுள்ள பொய்யா குளத்தில் நீராடிவிட்டு இறைவனை வழிபடுவார். அச்சமயம் குளத்திற்கு எதிர்கரையில் உள்ள கோவிலின் அருகிலுள்ள மரத்திலுள்ள பாம்பு படமெடுத்து சூரிய நமஸ்காரம் செய்து கொண்டிருக்கும். இவர் குளத்தை விட்டு வீடு திரும்புவதற்குள் அவரின் வீட்டு அறைக்குள் வந்துவிடும். அச்சர்ப்பம் அவரின் வீட்டில் நீண்ட காலம் இருந்தது.இருவரின் தொடர்பை அவ்விருவரே அறிவர். மக்களின் நோய்களை தன் சக்தியால் அறிந்து குணமாக்கிவிடுவார். சுவாமிகளுக்கு சிறு வயதில் ஏற்பட்ட ஒரு அனுபமே இவரை சித்த புருஷன் நிலையை அடைய செய்தது. சிறு வயதில் சுவாமிகள் ஒரு வண்டியில் சென்று கொண்டு இருந்தார். அப்பொழுது எதிரில் தெய்விக தோற்றத்துடன் ஒரு பெரியவர் வருவதை கண்டு "இவர் கடவுளாக இருபரோ ப் என்று சுவாமிகள் நினைக்க, அவரோ "ஆமாண்டா" என்று கூறி இருக்கிறார். இதை சற்றும் எதிர்பாரத சுவாமிகள், அவரை வணங்கி அவருடன் மூன்று நாட்கள் தங்கி உள்ளார். தகதீட்சை அருளினார். சுவாமிகளின் உடல் முழுவதும் திருஒளி பரவியது. ஏகாந்தத்தில் தம்மை நிறுத்திக்கொண்டார். ஆண்டுதோறும் திருவண்ணாமலை தீபத்திற்கு சென்று வருவது வழக்கமாக கொன்றிருந்தார். சுவாமிகள் 14-07-1967 ஞாயிற்றுக்கிழமை, ஏகதசி திதியில் இரவு சுமார் 10 மணியளவில் பரப்பிரம்மத்தோடு ஐக்கியமானார். **(பொழிப்புரை - புத்தகம் -ஓம்காரம், சென்னை வெளியிட்டில் தவத்திரு சுவாமி ஓம்கார நந்தா அவர்கள் எழுதிய "ஞானபூமி").**

7. மகான் ஸ்ரீ கணபதி சுவாமிகள், தட்டஞ்சாவடி.

வட ஆற்காடு மாவட்டத்தின் வாலாஜா தாலுகா, செக்கடிகுப்பம் என்னும் ஊரில் சிதம்பரம்-சின்னம்மாள்



என்கிற புண்ணிய தம்பதியருக்கு 1879ஆம் வருடம் ஆவணி மாதம் விநாயகர் சதுர்த்தி அன்று மகனாகப் பிறந்ததால் கணபதி என்ற திருநாமம் இடப்பட்டது. மானிட பிறப்பு பெற்றதன் பயன் என்ன என்பதை முற்பிறவியில் உணர்த்தலோ என்னவோ சுவாமிகள் பாலகனாக இருக்கும் போதே அவருக்கு பற்பல கேள்விகள் தோன்றின! உடம்பில் உயிர் போனது என்பதும் வந்தது என்பது என்ன? நான் யார்? கணபதி என்ற பெயர் உயிருக்கா? உடம்பிற்கா? இறப்பு என்றால் என்ன? அதை தடுப்பது எப்படி? என பற்பல கேள்விகள் தோன்றின. இதன் காரணமாக பல குருமார்களை நாடி பல காலங்கள் சேவை செய்தார். அவர்களுடைய பதில்கள் சுவாமிகளுக்கு ஆத்ம அனுபவத்தை தரவில்லை. இதன் காரணமாக,

சுவாமிகள், பல புண்ணிய இடங்களிலும், மலைகளிலும் தேடித்திரிந்தார். பெற்றோர்கள் மகனை தேடி கண்டு சுவாமிகளுக்கு அவரின் அக்காள் மகளாகிய மாரியம்மாள் என்பவரை திருமணம் செய்து வைத்தனர்.

சில காலம் சென்று ஸ்ரீமத் அகண்ட பரிபூரண அருளானந்த சுவாமிகளின் தரிசனம் கிடைக்கப் பெற்று அவரிடம் அடைக்கலம் ஆகி சிஷ்யன் ஆனார். குருவானவர் பல சோதனைகளுக்கு பிறகு திருவடி தீட்சை அருளினார். தனக்கு ஏற்பட்ட பல கேள்விகளுக்கு, குருவின் அருளால் விடை கிடைக்க தொடங்கியது, ஆத்மானந்ததில் சொக்கி இருந்தார். தன் சீடன் திருமணமானவர் என்பதை கண்டறிந்த குருவானவர்; இல்லறமே நல்லறம் என்பதை உணர்த்தி குடும்பத்தில் சேர்ந்திருக்க செய்தார். குருவாக்கே தெய்வவாக்கு என்று மதித்து சுவாமிகள் குடும்பத்தோடு சேர்ந்து நான்கு குழந்தைகளுக்கு தந்தை ஆனார். பரவாழ்வும், இகவாழ்வும் தன் இரு கண்களாக பாவித்து சஞ்சலம் இல்லாமல் தன் குருவோடு அகத்திலும் புறத்திலும் ஞானியாக வாழ்ந்தார். குரு தன் சிஷ்யன் கணபதியை குருவாக நியமித்து சிலகாலங்களில் சமாதி ஆனார்.

பிள்ளைகளை வளர்த்து கரை சேர்த்து தன் மனைவிக்கு தன் பிரிவால் எந்த பாதிப்பும் இல்லை என்பதை



உணர்ந்து தான் பெற்ற ஆத்மா ஆனந்தத்தை மற்றவர்களுக்கு பெற வேண்டும் என்ற நோக்கத்தில் ஆத்ம அனுபவத்தை தேடும் மனிதர்களோடு தன்னை இணைத்து கொண்டார். தன் குருநாதருக்கு குரு பூஜை செய்து வந்தார். இறுதியாக 1994ஆம் ஆண்டு புதுவைக்கு வந்து பல சிஷ்ய அடியார்களை வீட்டில் இறைபக்தியை போதித்து அவர்கள் வாழ்க்கையை மேம்படுத்தி வந்தார். அவருக்கு அப்பொழுது வயது 120 மேல் இருக்கும் என்று தெரிகிறது. ஸ்ரீ கணபதி சுவாமிகள் தான் சமாதி ஆகும் தருணத்தை குறிப்பாக அடியார்களுக்கு உணர்த்தினார். விஷு வருடம் வைகாசி மாதம் 16 ஆம் நாள் செவ்வாய் கிழமை மகம் நட்சத்திரம் கூடிய நன்நாளில் (29/05/2001) இரவு 9:00 மணியிலிருந்து 10:30 மணிக்குள்ளாக நிர்விகல்ப சமாதியில் அமர்ந்தார்.

நிர்விகல்ப சமாதி என்பது அறிபவன் (பிரம்மம்) மற்றும் அறியப்படும் பொருள் (சீவன்) போன்ற வேறுபாடுகள் அகன்று இரண்டாவதற்ற பிரம்ம வடிவாகவே ஆகி பிரம்மத்துடன் ஒன்றி, ஒடுங்கியுள்ள மனநிலைதான் நிர்விகல்ப சமாதி என்று பதஞ்சலி முனிவர் விளக்கியுள்ளார். இதில அறிபவன் (திருக்), அறியப்படும் பொருள் (திருஷ்யம்) போன்ற வேறுபாடுகள் அனைத்தும் கரைந்து போயிருக்கும். பிரம்மவஸ்து ஒன்று மட்டுமே அனுபவத்தில் இருக்கும். இத்தகைய உயர்ந்த சமாதி நிலையை அடைவதற்கு, யமம், நியமம், ஆசனம், பிராணாயாமம், பிரத்யாகாரம், தாரணம், தியானம், சமாதி எனும் எட்டு படிகளில் சாதனை செய்ய வேண்டும். இவற்றை இடைவிடாத பயிற்சி மேற்கொண்டால், நிர்விகல்ப சமாதி யின் மூலம் பிரம்ம அனுபவம் நேரடியாக உண்டாகும். கடந்த 29.5.2001-ம் ஆண்டு லாஸ்பேட்டை விமான நிலையம் பின்புறம் மகான் கணபதி சாமிகள் ஜீவசமாதி அடைந்தார். இதையடுத்து பக்தர்கள் அந்த இடத்தில் கோவில் அமைத்து வணங்கி வந்தனர்.இதற்கிடையே லாஸ்பேட்டை விமான நிலையத்தை விரிவாக்கம் செய்ய அரசு முடிவு செய்தது. இதற்கான பணி தற்போது நடந்து வருவதால் கணபதி சாமிகளின் ஜீவசமாதியை இடிக்க வேண்டிய சூழ்நிலை உருவானது. ஆனால் மகானின் பக்தர்கள் சமாதியை இடிக்கும் அரசின் முடிவுக்கு கடந்த 2005-ம் ஆண்டு முதல் கடும் எதிர்ப்பு தெரிவித்தனர்.

இது தொடர்பாக புதுவை அரசு மற்றும் சம்பந்தபட்ட அதிகாரிகளுக்கு கடிதம் எழுதி வந்தனர்.இதனை தொடர்ந்து மகானின் ஜீவசமாதியை பாதுகாப்புடன் இடமாற்றம் செய்து வேறு இடத்தில் சமாதியை வைக்க இடம் தருவதாக அரசு கூறியது. இதுகுறித்து சமாதியில் உள்ள மகான் கணபதி சாமிகளிடம் அவரது பக்தர்கள் கூறினர்.அதற்கு கணபதி சாமிகள் கனவில் வந்து சம்மதம் தெரிவித்தார். இதையடுத்து சமாதியை அங்கிருந்து மாற்ற பக்தர்கள் சம்மதித்தனர். இதனை தொடர்ந்து நேற்று மாலை மகானின் சமாதியை சுற்றி கட்டப்பட்டிருந்த சுவர்கள் பொக்லைன் எந்திரம் மூலம் இடிக்கப்பட்டது. சமாதி இருக்கும் இடத்தை சுற்றி பள்ளம் தோண்டப்பட்டது. பின்னர் நள்ளிரவு 1 மணிக்கு மகானின் சமாதி கண்டெய்னர் மூலம் பாக்க முடையான்பட்டு பகுதிக்கு எடுத்து வரப்பட்டது. புதுவை குடிமை பொருள் வழங்கல்துறை அலுவலகத்துக்கு

எதிரில் பள்ளம் தோண்டப்பட்டிருந்த இடத்தில் மகானின் சமாதி வைக்கப்பட்டது (**எழுத்துக்கள்** http://www.maalaimalar.com/2011/01/10182056/puduvai-samiyaar-news.html **சொந்தமானது**).

8.ஸ்ரீ கம்பளி ஞான தேசிக சுவாமிகள், தட்டாஞ்வசாடி.

கம்பளி ஞான தேசிகர், சென்னயிலிருந்து புதுவைக்கு வந்ததாக சொல்லப்படுகிறது.இவருடைய உண்மை பெயர், பெற்றோர் விவரங்கள் யாருக்கும் தெரியவில்லை.இவர் கம்பளி போர்வை அணிந்திருந்ததால் மக்கள் இவரை கம்பளி சாமியார் என்று அழைத்தனர். இவர் புதுவையிலுள்ள பாக்குமுடையான்பட்டு, முத்தியால்பேட்டை கவுண்டன்பாளையம் போன்ற பகுதிகளில் உலவி வருவார்.



கவுண்டன்பாளயத்தில், சாஹையார் என்ற பெயர் கொண்ட குடும்பத்தினரிடம் மட்டும் தொடர்பு கொண்டிருந்தார். ஒரு இஸ்லாமிய பெரியவர், இவருக்கு குருவாக இருந்தார் என்று சொல்லப்படுகிறது.வேலாயுதம் என்ற வைத்தியர் இவரிடம் நெருங்கிப் பழகியதாகவும் சொல்லப்படுகிறது. இச்தேசிகர் நிறைய கல்வி அறிவு பெற்றவர்.சுத்த பிரம்மச்சாரி.மாயையை வென்றவர். சுவாமிகள் தன் ஆன்மீகச் சக்தியால் ஊர் மக்களுக்கு நிறைய நன்மைகள் செய்துள்ளார். பக்தர்களுக்கு கொடிய நோய் வந்துவிட்டால் அவர்களுக்கு பச்சிலையும் விபூதியும் தந்து குணமாக்குவார்.ஒம்ஸ்ரீ கம்பளி தேசிக சுவாமிகள் நினைத்த இடத்தில் மறைந்து, நினைத்த இடத்தில் தோன்றும் சக்தி படைத்தவர். சூட்சுமத்தில் மறைந்திருக்கும் ஒன்றை ஸ்தூலத்திற்கு அழைத்து வரும் ஆற்றல் படைத்தவர்.

சில சமயம் சாலையில் நின்று கொள்வார்.வாயில் ஒரு சுருட்டை வைத்துக் கொண்டு போவோர், வருவோரிடம் நெருப்பு கேட்பார். அவர்கள் தராவிட்டால் தன் ஆட்காட்டி விரலை சுருட்டுக்கு முன்னால்-பத்த வைப்பது போல் நீட்டுவார். சுருட்டு குப்பென்று பற்றிக் கொள்ளும். சுவாமிகள் ஒரு முறை கள்ளுக் கடைக்கு சென்றார். கையை நீட்டினார். கடைக்காரர்," இன்னும் போணியாகவில்லை-போ" என்றார்.சுவாமிகள் நெடுந்தூரம் சென்று ஒரு ஆலமரத்தடியில உட்கார்ந்து விட்டார். அன்று பூராவும் வியாபாரம் ஆகவேஇல்லை. கள்ளுக்கடைக்காரர், சுவாமிகளை தேடி ஓடினார். வெகு சிரமத்திற்கு பின் சுவாமிகளை கண்டு பிடித்து கடைக்கு கூப்பிட்டார். சுவாமிகள்,"நான் வருகிறேன் - நீ முன்னால் போ" என்று சொல்லி



அவரை அனுப்பினார். கடைக்காரர், ஒரு குதிரை வண்டியில் வேகமாக கடைக்கு வந்து சேர்ந்தார். சுவாமிகள், அதற்கு முன்னரே வந்து அங்கு உட்கார்ந்திருந்தார். மற்றுமொரு நாள் ஒரு சாராயக்கடைகாரனிடம் கையை நீட்டினார். அவனும் இன்னும் போணியாகவில்லை என்று சொன்னான்.சுவாமிகள் போய் விட்டார். அன்று முழுதும் எவ்வளவு முயன்றும் சாராய புட்டியின் மூடிகளை திறக்க முடியவில்லை.பாக்குமுடையான்பட்டில் ஒரு வீட்டில், சுவாமிகள் ஊறுகாய் கேட்டார். வீட்டுக்காரர்," இல்லை போ" என்று துரத்தினார். சிறிது நேரங்கழித்து வீட்டுக்காரர் ஊறுகாயை திறந்து பார்க்கும் பொழுது-ஊறுகாயில் புழு பூழ்த்திருந்தது. உடனே அவர் சுவாமிகளை தேடிச் சென்று மன்னிப்பு கேட்டார். பின், மறுபடி புழுக்கள் ஊறுகாயானது.

ஒரு சமயம், சுவாமிகளும் மற்றும் சிலரும் அடர்ந்த கள்ளிக்காடு வழியே சென்று கொண்டிருந்தார்கள். ஒரு விரியன் பாம்பு சுவாமிகளை கடித்து விட்டது. அடுத்த நாள் சுவாமிகள் இறந்திருப்பார், என்று உடன் வந்தவர்கள் நினைக்க, காட்டில்- அந்த இடத்தில் பாம்பு இறந்து கிடந்தது. சுவாமிகள், தன் ஆத்ம சாதனைகளை பெரும்பாலும் தரையில் செய்வதில்லை.தண்ணீரில் தான் செய்து வந்தார். நீரின் மேலேயே படுத்துக் கிடப்பார். ஜலஸ்தம்பனம் செய்வது இவரது பழக்கம். சுவாமிகள், ஏதோ ஒரு காரணத்தால் ஜலத்தில் ஸ்தம்பனம் செய்து கொண்டார். சில நாட்களில் ஜல சமாதியடைந்தார். குளத்திலேயே அவர் உடல் கிடந்தது. அவ்வழியே சென்றவர் இதை கவனிக்கவில்லை. மறுநாள் காலை ஒரு குரல் கேட்டது "கம்பளி தண்ணியிலே-கம்பளி தண்ணியிலே". இக்குரல் தொடர்ந்து கேட்டவண்ணமாக இருந்தது.

மக்கள் ஒன்று கூடி அவர்தம் திருவுடலை, நீரிலிருந்து வெளிகொணர்ந்து-அங்கேயே சமாதி செய்தனர். சமாதியின் மேல் ஒரு லிங்கமும் பிரதிஷ்டை செய்துள்ளனர். சமாதியை சுற்றிலும் சுவாமியின் அனுக்கிரகம் பெற்றவர்கள் ஏழு பேர் சமாதியடைந்துள்ளனர். ஒரு சமயம் குப்பம்மாள் என்ற மாது மகோதர நோயால் துன்பப்பட்டாள்.சுவாமியின் சன்னதியில் விழுந்து அழுதாள். எந்த மருந்துமில்லாமல் அந்த நோய் அவளை விட்டு அகன்றது. சுவாமிகள் 1874 -ம் ஆண்டு டிசம்பர் 21-ம் தேதி தட்டாஞ்சாவடி அருகில் உள்ள ருத்திர பூமிக்குச் சமீபத்தில் சமாதியடைந்தார் (எழுத்துக்கள் http://jnanabhoomi.blogspot.in/2010/01/blog-post_7870.html சொந்தமானது).

9.திரு சிவசடையப்பர் திருக்கோவில், பேட்டையன்சத்திரம், தட்டாஞ்சாவடி.



தாயார் அம்மாள் புதுச்சேரி அடுத்துள்ள பெருமுக்கல் மலை பகுதியில் மாடுகள் மேய்ப்பது வழக்கம். ஒரு நாள் பலத்த மழை. வீடு திரும்ப முடியாத நிலையில் மலை மீது இருந்த மண்டபத்தில் தங்கி விடுகிறாள். அன்று இரவு, திடிரென ஒரு பிராகசமான ஒளி! கண்விழித்து பார்த்த அந்த சிறுமிக்கு ஒரே ஆச்சிரியம். ஒரு சித்தர்/யோகி படுத்திருந்தார். அவரை சுற்றி ஒரே ஒளி வட்டம். அவர் உடல் மேலே மேலே சென்று கொண்டு இருந்தது. பயந்துபோன சிறுமி கண்ணை முடிகொண்டு உறங்கி விடுகிறாள். மறுநாள் காலை கண் விழித்து பார்க்கிறாள். மழை நிற்க வில்லை. மிகவும் சோர்ந்து போய் இருந்தால். பசி மயக்கமும் சேர்ந்து கொண்டது. இரவு நடந்ததை எண்ணி பார்த்து கொண்டே சித்தர் கண்ட இடத்திற்கு செல்கிறாள். பச்சை இலைகளும் சில தங்கத்தில் ஆன தகடுகளும் கிடந்தன. சிறிது தூரம் சென்ற உடன், அவள் இரவு கண்ட சித்தர் சாதரணமாக அமர்ந்து கொண்டு இருந்தார். சிறுமிக்கு ஒரே பயம், தயக்கம் மற்றும் பசி மயக்கம். இவளின் நிலையை உணர்ந்த யோகி, சில பழங்களை சாப்பிட கொடுத்தார். அந்த சித்தர் இந்த சிறுமியை பார்த்து "தினமும் இந்த மலைக்கு வருவாயா என்று கேட்டார்?" தயங்கிய சிறுமி "ஆம்" என்று சொல்லி விட்டு தயக்கத்துடன் நின்றால்! தயக்கத்தை உணர்த்த சித்தர், தனக்கு தினமும் வந்து பச்சை இலை அரைத்து தருவியா? என்று கேட்டார். சிறுமியும் சம்மதித்தால். தினமும் ஆடுகளை ஒட்டி கொண்டு வந்து மேய விட்ட உடன், சித்தருக்கு பச்சிலை அரைத்து கொடுப்பாள். சித்தரும் கூலியாக ஒரு நாணயம் தருவார்.

பல நாட்கள் சென்றது, திடிரென ஒருநாள் சித்தர் சிறுமியை இனி வர வேண்டாம் என சொல்லி விட்டார்.



வேறு ஊருக்கு செல்ல தயாராகி கொண்டு இருந்தார் சித்தர். தனக்கு வரும் கூலி நின்று விட்டதே என்று வருத்தத்தில் நின்று கொண்டு இருந்தால். தயக்கத்தை உணர்ந்த சித்தர், ஐந்து வருடம் கழித்து இங்கே வருவேன் என்றும் சொன்ன சித்தர், ஒவ்வொரு சித்ரா பௌர்ணமிக்கும் இங்கே வருவேன் - என்னை பார்க்க வேண்டினால் வந்து பார் என்று சொல்லி கிளம்பினார். சிறுமியும் தினமும் தனது ஆடுகளை ஒட்டி கொண்டு வந்து மேய விடுவாள். தான் சித்தர் இருந்த இடத்தில் அமர்ந்து கொள்வாள். நாட்கள் செல்ல செல்ல சித்தர் பூஜித்து வந்த சிவலிங்கத்தை தானும் பூசை செய்ய வேண்டும் என்ற ஆசை அத சிறுமிக்கு மேலோங்கியது. தினமும் அந்த சிவ லிங்கத்திற்கு பூசை செய்ய தொடங்கினால். பக்தி மார்க்கத்தில் மிகுந்த நாட்டம் ஏற்பட்டது - நாளடைவில் பக்தி பெருகியது. ஒரு சித்ரா பௌர்ணமிக்கு சித்தர் அங்கு வந்தார். அந்த சிறுமிக்கு, அவர் குருவாக தெரிந்தார். சித்தரும் தாயார் அம்மாள் பக்குவ நிலையை அடைந்து விட்டால் என்று அறிந்து யோகா மார்கத்தையும், ரசவாதத்தையும் கற்று கொடுத்தார். அன்று முதல், சிறுமியின் வாழ்க்கையில் பல மாற்றங்கள். தியானத்திலே பல நேரங்களை கழிந்தது. பெற்றோர்கள் இவளின் நிலையை கண்டு மிகவும் வருந்தினார்கள். சிறுமியின் தந்தை புதுவையில் உள்ள தனது சகோதரியின் விட்டிற்கு மன மாற்றத்திற்கு அனுப்பி வைத்தார்கள். அங்கும் அவள் தியான வாழ்க்கை தொடர்ந்தது. மனக்குறை உடன் வரும் மக்கள், பில்லி, சூன்யம் போன்ற பிரச்சனைகளால் அவதி படுவோரும் இவளை சந்தித்து தம் குறைகள் நீங்க பெற்றனர். திருமண வாழ்க்கை நாட்டம் இல்லாமல் போனது.


இவரின் அடர்ந்த கூந்தல் சில நேரங்களில் சரியாக சீவாமல் சடை விழ ஆரம்பித்தது. இதனாலேயே இவர் பெயருடன் சடைத் தாயார் அம்மாள் என அழைக்க தொடங்கினர். ரசவாத வித்தை மூலம் இல்லாதவர்களுக்கு இரும்பை பொன்னாகி கொடுத்தும், பச்சிலை மூலிகை மூலம் பலருடைய நோய்களை தீர்த்து வைத்தார். இவர் வளவனூர் சமாதி அடைந்ததாகவும், சிலர் இவர் பேட்டையான் சத்திரம் என்னும் இடத்தில் சமாதியடைந்த இடமே சடையப்பர் கோயில் என்று சொல்வோரும் உண்டு. (**பொழிப்புரை - புத்தகம் -ஸ்ரீ இந்து பப்ளிகேஷன்ஸ் வெளியிட்டில் கானமஞ்சரி சம்பத்குமார் அவர்கள் எழுதிய "சித்தமெல்லாம் நிறைந்த சித்தர்கள்").**

10. தவத்திரு கதிர்வேல் சுவாமிகள், பிருந்தாவனம்.



ஸ்ரீ கதிர்வேல் சுவாமிகள் இலங்கையிலிருந்து தமிழ்நாட்டிற்கு ஆன்மீகச் சுற்றுப்பயணமாக வந்தார். வள்ளலாரை கண்டவர், அவரின் தெய்வீகஆற்றலால் ஈர்க்கப்பட்டு தமிழகத்திலேயே தங்கி ஆத்ம வேள்வி செய்ய இடம் தேடினார். ஞானிகளை தன்னகத்தே ஈர்க்கும் சக்தி பெற்ற இப்புதுவை, சுவாமிகளையும் கவர்ந்தது. மாபெரும் துறவியர் கூட்டம் புதுவையிலும், புதுவையை சுற்றி உள்ள ஊர்களிலும் வசித்து வருவதை அறிந்து புதுவையில் சித்தன்குடி என்ற ஊரை தேர்ந்தெடுத்து இங்கேயே தங்கி விட்டார்.

உணவு வேண்டி வருபவர்களுக்கு உணவு வழங்கியும்-ஏழ்மையில் வாடியவர்க்கு உதவியும் வந்துள்ளார்.தேங்காய் ஓடுகளை நாணயங்களாக மாற்றி-கஷ்டப்படுபவர்க்கு கொடுத்து உதவுவார். இரக்க குணமும் சித்து விளையாட்டும் இவரை மகானாக காட்டியது.நோயினால் பாதிக்கப்பட்டவர்களுக்கு பச்சிலை மூலிகையினால் நோய்களை குணப்படுத்தியுள்ளார். தொழுநோயால் பாதிக்கப்பட்டவர்களுக்கு வியாதியை தீர்த்து வைக்கும் அற்புத மருத்துவராகவும் விளங்கினார். சுவாமிகள் முத்தியால்பேட்டை வருவார், அங்கு வயது முதிர்ந்த பாட்டியிடம் ஒரு கிழங்கை கொடுத்து அதை சுட்டு தர சொல்வர். அந்த கிழங்கை முன்று, நான்கு நாட்களுக்கு உணவாக வைத்து கொள்வார். சுவாமிகள் குரு சித்தானந்த சுவாமிகள் பீடத்திற்கு வந்து தவத்தில் ஈடுபட்டார். பல நாள் தவத்தின் விளைவாக ஞானம் கைவரப் பெற்றார்.புதுவைக்கு வந்த வள்ளலாரை தரிசித்து ஆசி பெற்றார். வள்ளலாரை பார்க்கும் முன் சுவாமிகள் ஒன்று இரண்டு வார்த்தைகள் பேசுவார். வள்ளலாரின் தீட்சைக்கு பிறகு பேசுவதை நிறுத்தி விட்டார்.



இவர் சாலையில் பின்னோக்கி தான் நடந்து செல்வாராம்.இவர் வருவதை பார்க்கும் பொதுமக்கள் இவருக்கு வழிவிட்டு ஒதுங்கி செல்வார்களாம். பிரஞ்சு பொலீஸ் கூட இவரைப் பார்த்து தொப்பியைக் கழற்றி விட்டு சல்யூட் அடிக்குமாம்.இவரைப்பற்றி பாரதியார் எழுதிய பாடல்கள் அநேகம். சுவாமிகளின் அளவற்ற ஆற்றலைக் கண்ட மக்கள் அவரிடம் வந்து ஆசி பெற்ற வண்ணம் இருந்தனர். பக்தர்கள் மன சஞ்சலமின்றி மகிழ்ச்சியுடன் வாழ்ந்து வந்தனர். சுவாமிகள், தான் இறைவன் திருவடியைச் சேரும் தினம் நெருங்கி விட்டதை தன் ஞானத்தால் உணர்ந்தார். சித்தன் குடிசையிலே-அந்த மாந்தோப்பின் நடுவில் தனக்காக அறுகோண வடிவில் ஒரு மண்டபம் அமைத்து, அதனுள் தன் உருவச்சிலையை மரத்தால் செய்து நினைவிடமாக வைக்க வேண்டும் என்று மக்களிடம் வேண்டுகோள் வைத்தார். நாட்கள் சென்றன. அந்த நாளும் வந்தது.

01-02-1904 -ம் ஆண்டு தை மாதம் 19ம் நாள் திங்கட்கிழமை பூச நட்சத்திரம் பௌர்ணமி திதி அன்று இறைவனுடன் கலந்தார். பாரதியார் சந்தித்த யாழ்பானத்து சுவாமிகள் இவர்தானா என்பது

புரியாத புதிராகவே இருந்து வருகிறது. சிலர் இவர் தான் என்பார்கள். வேறு சிலரோ யாழ்பானத்து சுவாமிகள் இவரில்லை-அவர் அருளம்பல சுவாமிகள் என்பதும் அவர் இலங்கையிலே சமாதி கொண்டுள்ளார் என்றும் சொல்கிறார்கள். "ஈழத்துச் சித்தர்கள்" என்ற நூலில் யாழ்பானத்து சுவாமிகளைப் பற்றியும், பாரதியார் சுவாமிகளை சந்தித்ததைப் பற்றியும் விளக்கமாக குறிப்பிடபட்டுள்ளது (எழுத்துக்கள் http://pudhuvaisithargal.blogspot.in/2013/05/blog-post_5488.html சொந்தமானது).

11. ஸ்ரீ சச்சிதானந்த சுவாமிகள் - ஸ்ரீ சிங்கேரி சிவகங்கா மடம்!



சன்யாசி ஒம் ஸ்ரீ சுப்பிரமணிய அபிநய சச்சிதானந்த பாரதி சுவாமிகள் 1870ஆம் ஆண்டு கர்நாடக மாநிலத்தில் பிறந்தார். தனது 16வது அகவையில் சன்யாசம் ஏற்றார். சிருங்கேரி சிவகங்க மடத்தின் பீடாதிபதியாக தமது 16ஆம் பட்டம் ஏற்றார். சுவாமிகள் பல முறை பாரத தேசம் முழுவதும் யாத்திரை செய்துள்ளார். சுவாமிகள் ஸ்ரீ வித்யா உபாசகர் - அம்பாளை நேரில் காணும் புண்ணியத்தை அடைந்தவர். தமிழ், தெலுங்கு, கன்னடம், மராத்தி, குஜராத்தி, ஹிந்தி போன்ற 6 மொழிகளில் பேசும் ஆற்றலை கொண்டு இருந்தார். ஆதிசங்கரர் சிருங்கேரியில் தேவி சாரதாம்பாள் பிரதிஷ்டை செய்தது போன்று, சிவகெங்கையிலும் செய்யவேண்டும் என்று அருளுணர்வு கூற, 1910ஆம் ஆண்டு கோயில் கட்டி முடித்தார். புதுவையில் இருந்து ஈப்பூர் கிருஷ்ணசாமி செட்டியாரும் அவருடைய உதவியாளரும் சென்று இருந்தனர். செட்டியார் அவர்கள் நாகபஞ்சமி பூசை செய்வது வழக்கம். பூசைக்கு தேவையான பொருட்கள் அனைத்தும் வாங்கி முதல்நாள் இரவே தயார் செய்து வைத்து விட்டார். ஆனால் இரவு தூங்க செல்லும் முன் காலையில் கோலம் போட தேவையான மாவு வாங்க மறந்துவிட்டதை உணர்ந்தார்.இரவு நேரம் ஆகிவிட்டதால் செட்டியார் இறைவனை தொழுதுவிட்டு வருத்ததுடன் உறங்க சென்று விட்டார். விடியற்காலையில் எழுந்த உடன் வாசலில் ஒருவர் தட்டுடன் இருப்பதை கண்டார். அவரின் கையில் இருந்த தட்டில் கோல பொடி இருந்ததை கண்டு வியப்படைந்தார். சுவாமிகள் செட்டியாருக்கு ஏற்பட்ட கலக்கத்தை தம் ஞானத்தால் உணர்ந்து கலக்கத்தை போக்கினார். சிவஞான சித்தி பெற்றவர்களால் தான் இது முடியும்.

ஒரு முறை பம்பாய் மாநிலத்தில் யாத்திரை மேற்கொண்டு இருந்த சுவாமிகள், ஒரு காட்டு வழியில் சென்று கொண்டு இருந்தார். அப்பொழுது அங்கு மறைந்து இருந்த திருடர்கள் இவர்களை மறித்து பொருட்களை கொள்ளை அடிக்க முயன்றனர். அப்பொழுது பணியால் ஒருவன் சுவாமிகள் பற்றி, திருடர்களிடம் சொன்னான். அவர்களின் தலைவன், சுவாமிகள் வந்த பல்லக்கு அருகில் வந்தான். சுவாமிகள் திரையை திறந்து தலைவனை பார்த்தார். சுவாமிகளின் பார்வை திருடர்களின் தலைவன் மீது பட்டது. அங்கு ஒருவித அமைதி நிலவியது. சுவாமிகளின் அருட்பார்வை தலைவனின் விதியை தொட்டது. அவன் மனம் மாறியது. தலைவன், மற்ற திருடர்களை சுவாமிகளின் பல்லக்கை சுமந்து செல்ல ஆணையிட்டான். சுவாமிகள் தன் இடத்தை அடைந்ததும் அவர்களுக்கு பிரசாதம் அளித்து நேர்மையாக வாழும்படி கேட்டுக்கொண்டார். ஒருமுறை நர்மத ஆற்றங்கரையில் சாதுர் மாச விரதம் மேற்கொண்டார். அந்த சமயத்தில் ஈப்பூர் கிருஷ்ணசாமி செட்டியார், சுவாமிகளை சந்தித்து புதுவை வரும்படி கூறினார். சுவாமிகள் செட்டியாரை ஆசிர்வதித்து "இன்னும் குறிகிய காலத்தில் இந்த உடலை உம்மிடம் ஒப்படைப்போம்" என்று சொன்னார். தனது 30ஆண்டு கால பணியில் இருந்து தன்னை கொஞ்சம் கொஞ்சமாக விலக்கி கொண்டார்.

பெங்களூரில் இருந்து புதுவை வந்தார். தான் இறைவனை அடையும் காலம் நெருங்குவதை உணர்ந்த சுவாமிகள், சங்கரர் வருகிறார், சங்கரர் வருகிறார் என்று மூன்று நாட்களாக சொல்லி கொண்டே இருந்தார். "யாரும் இனிமேல் தொந்தரவுகள் தரக்கூடாது அமைதியாக எல்லோரும் அமைதியில் நிலைத்து விடுங்கள்" என்று கடைசியாக கூறி விட்டு இரவு 10.30மணி அளவில் விதேக முக்தி அடைந்தார். 1918ஆம் ஆண்டு கலவை சுப்புராய செட்டியாருக்கு சொந்தமான எல்லபிள்ளைச் சாவடியில் அடக்கம் செய்யப்பட்டது. சுவாமிகள் புதுவையில் இருந்து கொண்டு தன்னை நாடிவரும் பக்தர்களுக்கு அருளாசி புரிந்து கொண்டு

இருக்கிறார். (**பொழிப்புரை - புத்தகம் -ஓம்காரம், சென்னை வெளியிட்டில் தவத்திரு சுவாமி ஓம்கார நந்தா அவர்கள் எழுதிய "ஞானபூமி").**

12. திரு சக்திவேல் பரமானந்தர் சுவாமிகள், முதலியார்பேட்டை.

ஓம் ஸ்ரீ சக்திவேல் பரமானந்த குரு சுவாமிகள், தென்னாற்காடு மாவட்டத்திலுள்ள கடலூரில் 175 ஆண்டுகளுக்கு முன் அந்தண மரபில் தோன்றினார். அந்தண மரபுப்படி வேத பாராயணங்கள், உபநிஷத்துக்கள் அனைத்தும் கற்பிக்கப்பட்டன.சாஸ்திரங்களின் வலிமையை உணர உணர மந்திர சக்தியின் அற்புதம் அவருக்குத் தென்பட்டன.தேவியை பூஜிக்க இயந்திரங்களை பயன்படுத்தினார். அங்கிங்கெனாதபடி எங்கும் பரந்திருக்கும் பரம்பொருள் தன்னுள் இருப்பதை அறிந்துணர்ந்தார்.



இளம் வயதில் தந்தையை இழந்தார்.சகோதரர்களிடையே சொத்து தகராறு தோன்றியது. நம்மை அழிக்கும் சக்திக்கு பங்கு போட்டுக் கொள்ள சண்டையிடும் துன்மர் கூட்டத்தினிடையே நாமிருப்பது வீண் என்று வீட்டை விட்டு புறப்பட்டார். ஆத்ம ஞானமே நமக்குத் தேவை. ஆத்ம தரிசனமே தாம் காண வேண்டிய காட்சி என்று கங்கை, காசி, ஹரித்துவார், பண்டரிபுரம், காஷ்மீர் போன்ற பகுதிகளுக்கெல்லாம் சுற்றிச் திரிந்தார். இதன் விளைவாக மன உளைச்சல் நின்றது.கடைசியாக புதுவை வந்து சேர்ந்தார். எங்கும் இறைவன் மயம் என்ற உணர்ச்சி அவருள் பொங்கி வழிந்தது. அனைத்திலும் இறைவனைக் கண்டார். அதனால் தரையில் கால் வைத்து நடக்கவும் கூசினார்.மக்கள் பேசுவதைப் பார்த்து இறைவன் அவர்கள் உருவில் பேசுகிறார் என்பார். நாய் குரைப்பதைப் பார்த்து இறைவன் அந்த உருவத்தில் பேசுகிறார் என்பார். கதிரவனின் பிரகாசத்தைப் பார்த்து ஆனந்தக் கூத்தாடுவார்.கடலின் அழகையும், ஆழத்தையும் பார்த்து "இறைவா-உன்னை உணர முடிகிறதே "என்பார். நெருப்பில் கையை விட்டு "இறைவா- உன்னை தொட முடிகிறதே" என்பார்.

" இறைவா- நீ எங்குமிருக்கிறாய்-உன்னை நான் எங்கும் பார்க்கிறேன், உன்னிடம் பேசுகிறேன் - விளையாடுகிறேன். இதைவிட எனக்கு என்ன வேண்டும்-இப்படியே இருந்தால் போதும்" என்று ஆனந்தக்கண்ணீர் விடுவார். கண்ணீர் தாரை தாரையாக வழியும்.சதா சர்வ காலமும் அவர் கண்ணீர் விட்டுக் கொண்டேயிருப்பார். இறைவன் மேல் ஒரே அன்பு மயமாக ஆனந்த மயமாக இருப்பார்.

சுவாமிகள் ஏகாந்தத்தில் நிலைத்த உடன் சத்துவ குணத்திலிருந்து நிர்குணத்திற்கு வந்தார்.இத்தருணத்தில் ஓம் ஸ்ரீ ஞானானந்த சுவாமிகளின் சந்திப்பு ஏற்பட்டது.இமயமலையில் இருவரும் ஆத்ம சாதனை பயிலும் போது இருவருக்கும் நட்பு ஏற்பட்டது. பிறகு சுவாமிகள் புதுவைக்கு வந்து தங்கியிருக்கும் பொழுது, ஞானானந்த சுவாமிகளின் சந்திப்பு மீண்டும் ஏற்பட்டது. சுவாமிகள் ஆனந்தமயமாக காட்சியளித்தார். அவரின் லட்சுமிகடாட்சமான முகத்தை கண்டு-மக்கள் அவரின் சக்தியை உணர்ந்தார்கள். சுவாமிகளிடம் ஆசி பெற்றவர்களின் நோய் குணமாகியது.அப்பகுதி மக்களின் துன்பம் சிறுக சிறுக மறைந்தது.யாராவது தங்கள் கஷ்டத்தை சுவாமிகளிடம் சொன்னால்-இதோ இறைவன் இருக்கிறானே, கஷ்டமெங்கே, ஆனந்தமாக இருக்கிறான்" சந்தோஷமாக போ" என்பார்.வந்தவரின் கஷ்டம் அக்கணமே மறைந்து விடும்.

சுவாமிகளை தரிசனம் செய்தால் அன்று பூராவும் சந்தோஷமாக இருக்கும் என்பதை மக்கள் கண்டுணர்ந்தார்கள். நம்பிக்கையும் ஏற்பட்டது. அவரின் பேரன்பு பிரபஞ்ச முழுவதும் பரவத் தொடங்கியது. ஒரு நாள் மாலை அப்படியே உட்கார்ந்திருந்தார். எதையோ பார்த்து சிரித்து கொண்டிருந்தார்.ஒரு திக்கையே நோக்கி தொடர்ந்து சிரித்துக் கொண்டிருந்தார்.

பக்கத்திலிருந்தவர்களுக்கு ஒன்றும் புரியவில்லை. அருகிலிருந்தவர்கள் ஆச்சரியத்தோடு வினவினார்கள். "அங்கே ஆண்டவன் சிரிக்கப் போறான்டா - ஆயிரமாயிரம் பேர் வாழப் போறாண்டா" என்று துள்ளிக் குதித்தோடினார். தன் வேட்டியை எடுத்துக் காட்டி, "துணி வரப் போகுதடா-துணி வரப் போகுது"என்று

சிரித்தார்.சற்று நேரம் கழித்து மீண்டும் “எல்லோரும் ஏறிப் போக பெரிய வண்டி வரப்போகுது- எப்போதும் ஓடும் “என்று சிரித்துக் கொண்டிருந்தார்.



சில காலம் அமைதியாக இருந்தார்.இரவிலும் பகலிலும் தூங்குவது இல்லை.ஒரு நாள் விடியற்காலையில் எழுந்து உட்கார்ந்து கொண்டு தரிசிக்க வருவோரையெல்லாம் “நாளைக்கு வாங்கோ- நாளைக்கு வாங்கோ”என்றார். ஒவ்வொருவரையும் பார்த்து கரம் கும்பிட்டு சொன்னார். இதைப் பாத்தவர்களுக்கு உடல் சிலிர்த்தது. சுவாமிகள் ஏதோ முக்கியமான செய்தி சொல்லப் போகிறார் என்று நினைத்தனர். சுவாமிகள் சொற்படியே மறுநாள் சுவாமிகளைப் பார்க்க வந்தார்கள்.

ஓம் ஸ்ரீ பரமானந்த சத்குரு சுவாமிகள் பரமானந்தத்தில் திளைத்து சமாதியில் மூழ்கி விட்டார். செய்தி காட்டுத்தீ போல பரவியது.ஆத்ம சாதகர்கள், பக்தர்கள், ஞானிகள் என அனைவரும் கூடி விட்டனர்.புதுவை முதலியார்பேட்டை, காராமணிக்குப்பத்தில் சுவாமிகளின் அருளுடலை அடக்கம் செய்தனர்.சுவாமிகள் வழிபாடு செய்த லிங்கம் சமாதியின் மேல் பிரதிஷ்டை செய்யப்பட்டுள்ளது.சுவாமிகள் பூஜித்த இயந்திரமும் அங்கேயே உள்ளது.சுவாமிகள் குறிப்பிட்ட படியே அந்த இடத்தில் “நெசவாலை” ஒன்றும் ரயில் தண்டவாளமும் பிற்காலத்தில் உருவானது. சுவாமிகள் வாழ்ந்த காலத்தைச் சரியாக கணக்கிடுவதற்குப் போதிய சான்றுகள் இல்லை.இருப்பினும் கி.பி. 1830 லிருந்து கி.பி.1860 வரை அல்லதுகி.பி. 1870 லிருந்து கி.பி.1890 வரை இருக்கலாம் என்று செவிவழிச் செய்திகள் செப்புகின்றன **(எழுத்துக்கள்** http://jnanabhoomi.blogspot.in/2010/01/175.html **சொந்தமானது).**

13. ஸ்ரீ மண்ணுருட்டி சுவாமிகள், தென்னஞ்சாலை ரோடு, கண்ணன் நகர்.



மண்ணுருட்டிச் சித்தர் திருகோவிலூர் புண்ணிய பூமியில் வைஷ்ணவ பாரம்பரியத்தில் பிறந்தவர். இயற்பெயர் ராமகிருஷ்ணன். கல்லூரி இறுதி ஆண்டில் இவருக்கு ஒரு ரசவாதம் நிகழ்ந்தது. சிறிது சிறிதாக உலக விசயங்களின் இருந்து விடுபட்டார். செயல்பாடுகளும் குறைந்தது. சிந்தனையிலே முழிகி கிடந்தார். இவரை கண்ட பெற்றோர்கள் கவலை கொண்டனர். சிதம்பரம் அருகில் உள்ள கொத்தடையில் உள்ள ஒரு அம்மன் கோயிலுக்கு அழைத்து சென்றனர். ஆனால் அங்கு ஆத்ம சாதனையில் ஆழ்ந்து போய் விட்டார். அங்கிருந்து புறப்பட்டு திருவண்ணாமலை சென்று, காட்டில் அமர்ந்து தவத்தில் ஈடுபட்டார். இவரை எப்படியோ தேடி பிடித்து, இவருடைய பெற்றோர்கள் மிண்டும் வீட்டிற்கு அழைத்து சென்றனர். தம் தாயின் மறைவிற்கு பிறகு கடலூரை நோக்கி நடந்தார், தெரு தெருவாக சூற்றினார். ஒருநாள் ஒரு வீட்டின் முன் நின்றார் - உணவு கேட்டார். விட்டின் உள்ள பெண்மணி ஆப்பொழுது தான் சமையல் வேலை செய்து முடித்திருந்தார். சித்தர் சென்ற சில நேரங்களில் அப் பெண்ணின் கணவர் வந்தார். உணவு பரிமார தொடங்கிய பெண்மணிக்கு ஒரே அதிர்ச்சி. சித்தரை தேடி சென்று மன்னிப்பு கேட்டனர். ஒரு முறை ஒரு வக்கீல் விட்டில் சென்று உணவு கேட்டார். உணவு அளித்தார் பெண்மணி. சாப்பிட இலையை எடுத்து போட்ட அந்த விட்டு வேலைக்காரன், இலையை பார்த்து அருவெறுப்பு அடைந்தான். இதை உணர்த்த சித்தர் அந்த இலையில் வாந்தி எடுத்தார். எடுத்த வாந்தி அனைத்தும் மல்லிகை பூக்களாக மாறி இருந்தது.

பக்குவ நிலையை அடைந்திருந்த அவர் புதுவை சென்றார். சித்தானந்த சுவாமிகள் சமாதிக்கு அருகில் தவத்தில் இடுப்பட்டார். இவர் தனிமையில் தன் சிந்தனையில் மனதை ஒருநிலையில் கட்டுபடுத்தியவர். அப்படி கட்டு படுத்தும் பயிற்சிக்காக ஒரு கையில் தன் கட்டை விரலை மண்ணில் வைத்துக்கொண்டு உருட்டிக்கொண்டு இருப்பார். இதனால் இவரை மண்ணுருட்டி சாமிகள் என்று அழைத்தனர். ஒரு முறை புதுவையில் உள்ள தாழைக்ககாட்டு ஓடையில் கரையில் தவத்தில் இருந்தார். அச்சமயம் மழை பெய்து

பெருக்கெடுத்து ஓடியது. அந்த வெள்ளத்தில் சித்தர் கழுத்து வரை புதைந்து விட்டார். மறுநாள் வழிப்போக்கன் ஒருவன், சித்தரை கண்டு மண்ணில் புதைந்து இருந்த சித்தரை தோண்டி எடுத்து வெளியே கொண்டு வந்தார். வெளியில் வந்த சித்தர், எதுவுமே தெரியாதது போல் நடந்து சென்று விட்டார். ஸ்ரீ மண்ணுருட்டி சுவாமிகளின் ஜீவ சமாதி புதுச்சேரி சுதேசி காட்டன் மில் எதிரில் உள்ள கோவிந்தசாமி முதலியார் தோட்டத்தில் உள்ளது. இவர் 1965 ம் ஆண்டு ஜனவரி மாதம் 16 -ம் தேதி ஜீவ சமாதி அடைந்தார் **(பொழிப்புரை - புத்தகம் -ஸ்ரீ இந்து பப்ளிகேஷன்ஸ் வெளியிட்டில் கானமஞ்சரி சம்பத்குமார் அவர்கள் எழுதிய "சித்தமெல்லாம் நிறைந்த சித்தர்கள்").**

14. ஸ்ரீ அரவிந்தர், அன்னை.

ஸ்ரீ அரவிந்தர் - இந்தியத் தேசியவாதியும், மெய்யியலாளரும், ஆன்மிகத் தலைவரும், கவிஞரும் ஆவார். இந்திய விடுதலை இயக்கத்தில் இணைந்த இவர் போராட வீரராய் இருந்து ஆன்மிக வாழ்க்கையை மேற்கொண்டவர். அரவிந்தர் வட இந்தியாவின் கொல்கத்தா நகரில் பிறந்தார். கிருஷ்ண தனகோஷ், ஸ்வர்ணலதா என்போரின் மகன். ஐந்து வயதான போது மூத்த சகோதரர்கள் விநய பூஷன், மன்மோகன் ஆகியோரோடு டார்ஜிலிங்கில் லோரெட்டோ கான்வென்ட்டில் சேர்ந்தார். 1879 இல் கல்வி கற்பதற்காக சகோதரர்களோடு இங்கிலாந்து சென்றார். கேம்ப்ரிட்ஜில் கல்வி கற்கும் போதே புரட்சிகரமான சிந்தனையுடையவராகக் காணப்பட்டார். தாமரையும் குத்து வாளும் என்ற ரகசிய சங்கத்தில் உறுப்பினரானார். பெப்ரவரி 1893 இல் இந்தியா மீண்டார். அரவிந்தர் தாயகம் திரும்பிய கப்பல் விபத்துக்குள்ளாகி அவர் மறைந்தார் என்ற தவறான தகவலால் அதிர்ந்து தந்தையார் இறந்தார். அதனால் தாயார் சுவர்ணலதா தேவி மனநோயாளி ஆனார். இந்தியா திரும்பிய அரவிந்தர், பரோடா சமஸ்தானத்திலும் அரசுப் பணிகளிலும் கடமையாற்றினார். 1904 இலேயே பிரணாயாமம் பயிலத் தொடங்கிய போதும் சிறை வாழ்க்கை யோக நெறியில் அதிகம் அக்கறை கொள்ள வைத்தது. ஸ்வராஜ் (விடுதலை) என்பதை அரசியற் கண்ணோட்டத்தில் மட்டுமன்றி ஆன்மீகக் கண்ணோட்டத்திலும் பொருள் கொண்டார். பரமனின் ஆட்சியைப் பூமியில் நிலை நாட்டுவதற்கு விடுதலை முதற்படி என்று கருதியவர். 1909இலே சிறையிலிருந்து விடுதலை பெற்றதை அடுத்து அரசியல் இயக்கங்களைத் தவிர்த்துக் கொண்டு யோக நெறியில் முழுக் கவனத்தையும் செலுத்தினார். 1910இல் ஷாம்சுல் ஆலம் கொலை வழக்கில் அரவிந்தர் மேல் குற்றம் சாட்டப்பட்டது. கைதாவதிலிருந்து தப்பிக்க அரவிந்தர் சந்திர நாகூருக்குத் தப்பிச் சென்றார். அங்கிருந்து ஏப்ரலில் மாறுவேடத்தில் பிரெஞ்சு ஆதிக்கத்திலிருந்த புதுச்சேரிக்கு வந்தார். ஆங்கிலேய அரசிற்கு எதிரான கொந்தளிப்பில் இருந்து முற்றாக விலகிக் கொள்ளும் வாய்ப்பு கிடைக்கப்பெற்றதை அடுத்து யோகநெறியிலே தன்னைப் பக்குவப்படுத்துவதில் முழுக்கவனத்தையும் செலுத்தினார். அங்கு ஆசிரமம் அமைத்து தியானத்திலும் யோகத்திலும் ஈடுபட்டார். பாரதியாரோடு நட்புக் கொண்டார். சாவித்திரி காவியத்தைப் படைத்தார் (எழுத்துக்கள் https://ta.wikipedia.org/ சொந்தமானது).





1878 ஆம் ஆண்டு, பிப்ரவரி மாதம் 21 ஆம் தேதி பாரிசில் மிரா பிறந்தார். இளம் வயதிலேயே அறிவாற்றல் மிக்கவராகவும், எளியோருக்கு இரங்கும் குணம் கொண்டவராகவும் விளங்கினார். இயல்பிலேயே ஆன்மீக நாட்டம் கொண்டிருந்த அவருக்கு தினம்தோறும் தியானத்தில் ஆழ்வதும், இறை ஒளியை தரிசிப்பதும் வழக்கமாக இருந்தது. அவருக்கு அடிக்கடி ஒரு கனவு வரும். அந்தக் கனவில் மெள்ள மெள்ள தன் உடலை

விட்டு வெளியேறுவார். வீடு, தெரு, நகரம் என எல்லாவற்றிலும் உயர்ந்து மேகக் கூட்டங்களினிடையே காட்சி அளிப்பார். பொன்னொளி வீசிக் கொண்டிருக்கும் அவர் உடலை, ஒளிவீசக் கூடிய ஒரு நீண்ட பட்டாடை தழுவிக் கொண்டிருக்கும்.

பிரான்சில் அன்னை வசித்த போது அவரது கனவில் பல்வேறு ஆன்மீகப் பெரியவர்களும் தோன்றி பல உண்மைகளை அவருக்கு போதித்தனர். அவர்களுள் ஒளி வீசும் கண்களுடனும், நீண்ட தாடியுடனும் ஒரு மனிதர் அடிக்கடி வந்தார். அவர், இந்தியத் தத்துவங்கள் பற்றியும், வேத உபநிஷத்துகள் பற்றியும் எடுத்துரைத்தார். ஓவியத்தில் தேர்ச்சி பெற்றிருந்த அன்னை அவரது உருவத்தை ஓவியமாக வரைந்து கொண்டார். பிற்காலத்தில் பாண்டிச்சேரியில் ஸ்ரீ அரவிந்தரைத் தரிசித்த போது, அவரே தனக்கு கனவில் வந்து பல உண்மைகளை போதித்த ஆசான் என்பதையும், அவரே தனது குரு என்பதையும் கண்டு கொண்டார். அவரையே முழுமையாகச் சரணடைந்தார். தனது ஆன்ம ஆற்றலால் ஸ்ரீ அன்னையாக உயர்ந்தார்.

ஸ்ரீ அன்னையால் பல்வேறு அற்புதங்களும் நிகழ்த்தப் பெற்றிருக்கின்றன.

ஒரு நாள் புதுவையில் பலத்த புயல் வீசியது. பல மரங்கள், வேரோடு சாய்ந்தன. கடல் பொங்கி உள்ளே வந்து ஆசிரமம் உட்பட பலவற்றை அழிக்கும் சூழல் உருவாகியது. மக்கள் உட்பட பலரும் செய்வதறியாது திகைத்தனர். என்ன செய்வதெனப் புரியாமல் ஸ்ரீ அன்னையிடம் வந்து வேண்டிக் கொண்டனர். அன்னையும் அவர்கள் வேண்டுகோளுக்கு மனமிரங்கினார். தியானத்தில் ஆழ்ந்தார். சூட்சும உருவில் சென்று கடல் தேவதையின் முன் நின்றார். ஆசிரமம் பற்றியும் சாதகர்கள் பற்றியும், அதன் நோக்கம் பற்றியும் விரிவாக எடுத்துரைத்தார். அப்பாவிகளை அழிப்பதால் நேரும் துன்பத்தைப் பற்றியும் தேவதைக்கு எடுத்துச் சொன்னார். பெரிய பெரிய கற்களைக் கொண்டு வரச் செய்து, அவற்றை கரையோரத்தில் போடச் செய்தார். அதைத் தாண்டி நகருக்குள்ளே வரக் கூடாது என்று கடல் தேவதைக்குக் கட்டளையிட்டார். அன்னையின் வார்த்தைக்குக் கட்டுப்பட்ட கடல் பின் வாங்கியது. அது முதல் அது, கற்கள் அடுக்கி வைக்கப்பட்டுள்ள தனது எல்லையைத் தாண்டி நகருக்குள் வருவதில்லை.

ஒரு முறை ஸ்ரீ அன்னை ஆசிரமத்து சாதகர்களுடன் பேசிக் கொண்டிருந்தார். அப்பொழுது திடீரென தனக்குள் சமாதி நிலையில் ஆழ்ந்தார். வெகு நேரம் கழித்தே அவர் தனது கண்களைத் திறந்தார். சாதகர்கள் காரணத்தை வினவிய பொழுது, தான் கிரீஸ் நாட்டிற்குச் சென்று விட்டு வந்ததாகவும், பல பக்தர்கள் மானசீகமாக தன் உதவி வேண்டி அழைத்ததால், சூட்சும உருவில் அங்கு சென்று உதவி விட்டு வந்ததாகவும் அன்னை குறிப்பிட்டார்.

ஆம், அன்னையைத் தேடி நாம் செல்ல வேண்டியதில்லை. நாம் மானசீகமாக, உண்மையாக அழைத்தால் அங்கு ஸ்ரீ அன்னையே நம்மைத் தேடி வருவார். ஸ்ரீ அன்னையே சாதகர்களிடம் இது குறித்து, 'நேர்மையான பிரார்த்தனைகள் யாவும் நிறைவேற்றப்படுகின்றன. ஒவ்வொரு அழைப்புக்கும் நிச்சயம் பதில் உண்டு' என்று தெரிவித்திருக்கிறார்.

ஒரு முறை ஆசிரமத்தில் உள்ள சாதகர்களுக்கு ஒரு சந்தேகம் ஏற்பட்டது. அரவிந்தரால் 'ஸ்ரீ அன்னை' என்ற நூலில் குறிப்பிட்டிருக்கும் அன்னையும் தங்களுடன் தற்போது இருக்கும் அன்னையும் ஒருவர் தானா என்று. தங்களின் சந்தேகத்தை அரவிந்தரிடமே கேட்டனர். அதற்கு ஸ்ரீ அரவிந்தர் 'சந்தேகமென்ன. அந்தப் பராசக்தியே இங்கே மானிட உருவில் சாதகர்களை வழி நடத்திச் செல்ல முன் வந்திருக்கிறாள். இதில் ஐயமே வேண்டாம்' என்று விடையளித்தார்.

பராசக்தியின் அம்சமான அன்னை சாதகர்களை பல விதங்களில் ஊக்குவித்தார். எப்போதும் சுறுசுறுப்பாகப் பணியாற்றிக் கொண்டிருக்க வேண்டுவதன் அவசியத்தை எடுத்துரைத்தார். நேர்மை, உண்மை, சத்தியம், தூய்மை இவற்றைக் கொண்டதாக வாழ்வு அமைய வேண்டும் என்பதை வலியுறுத்தினார். மக்கள் அனைவரும் ஒன்றுபட்டு சகோதரர்களாக ஒருமித்த உணர்வுடன் வாழ வேண்டும் என்ற எண்ணத்தில் அவர் 'ஆரோவில்' நகரை நிர்மாணித்தார். இன்று அது ஒரு சர்வ தேச நகரமாகத் திகழ்கிறது (எழுத்துக்கள் http://www.tamilhindu.com/2009/02/life-of-saints-mother-aurobindo/ சொந்தமானது).

15. ஸ்ரீ ஸ்ர்ப்ப சித்தர் ஆலயம், அரியாங்குப்பம்.



இவர் பல நுற்றாண்டுக்கு முன்னால், ஆடு மாடுகளை மேய்க்கும் தொழிலை செய்து வந்துள்ளார். இறைவன் அருளால் உயர்ந்த நிலையை அடைந்து சமாதி அடைந்துள்ளார். இவருடைய சீடர்கள் இருவர், இவரின் சமாதியின் இடது மற்றும் வலது புறம் சமாதி அடைந்துள்ளனர். இந்த நிலத்தின் உரிமையாளர், தன் வாழ்கையில் பல பிரச்சனைகளை சந்தித்து, தற்பொழுது சுவாமிகளுக்கு ஒரு சமாதியையும், சுவாமிகள் வழிபட்ட அம்மனுக்கு பக்கத்திலேயே ஒரு சிறு கோயிலையும் அமைத்துள்ளார். அமைதியான சூழ்நிலையை கொண்டுள்ளது. அரியாங்குப்பம் புதிதாக கட்டப்பட்டுள கடலூர் சாலையில் உள்ள அரிசி ஆலை பக்கத்தில் (கடலூரில் இருந்து செல்லும் பொழுது இடது புறம்) உள்ள தெருவில் சற்று உள்ளே சென்று இடது புறம் திரும்பினால் இவரின் சமாதியை அடையலாம்.

16. ஸ்ரீ மொட்டை சுவாமிகள், நோணாங்குப்பம்.



சங்கராபரணி கரையில் அமைந்துள்ள நோணாங்குப்பம் ஒரு காலத்தில் வனமாக இருந்துள்ளது. நோணாங்குப்பத்தில் உள்ள அருள்மிகு ஸ்ரீ திரிசூலி அம்மன் ஆலயத்தில் இவருடைய சமாதி உள்ளது. இவருடைய பூர்விகம் பற்றிய தகவல் கிடைக்கவில்லை. இஞ்சம் பாய் மற்றும் கமண்டலம் வைத்திருப்பர் என்றும், நினைத்த மாத்திரத்தில் பழனி, மைலம் போன்ற இடங்களுக்கு சென்று வரும் சக்தி உடையவராக இருந்துள்ளார். இந்த கோவிலில் அம்மன் சிலை கிடைத்த பொழுது அதன் அருகில் பாதரச லிங்கம் செய்து வெய்க பூமியை நோண்டிய பொழுது செப்பு தகடு கிடைத்துள்ளது. அதில் சித்தரின் பற்றிய தகவல் கிடைத்துள்ளது. சித்தர் அம்மன் பக்தராக இருந்துள்ளது, இதில் இருந்து தெரிகிறது. செப்பு தகடு கிடைத்த இடத்தில மேலும் நோண்டிய மக்களுக்கு அதிர்ச்சி! நோண்டிய இடத்தில் புகை வர ஆரம்பிக்க, அந்த இடத்தை மூடிவிட்டனர். அவருக்கு ஒரு பீடம் அமைத்து அதில் சிவலிங்க பிரதிஷ்டை செய்து வழிப்பட்டு வருங்கின்றனர். ஆவணி மாதம் 3ஆம் வெள்ளிகிழமை குரு பூசை கடந்த 20 ஆண்டுகளாக கொண்டாடப்பட்டு வருகிறது.


17. ஸ்ரீலஸ்ரீ அருள் சக்தி அன்னை, பிள்ளையார்க்குப்பம், கடலூர் சாலை.

திருநெல்வேலி மாவட்டத்தில் கோவில்பட்டிக்கு சுமார் 50 கிலோ மீட்டர் தொலைவில் உள்ள இரெட்டியப் பட்டியில் 1856ஆம் ஆண்டு சைவ வேளாளா மரபில் தோன்றினார். திண்ணை பள்ளி கூடத்தில் எழுத படிக்க கற்றுகொண்டார். விவசாயத்தில் இடுப்பட்டார். சில காலம் சென்றபின் மதுரைக்கு சென்று ஒரு முகம்மதியர் கடையில் கணக்கு பிள்ளையாக சேர்ந்தார். தினமும் நான்கு மணிக்கு வைகையில் நீராடி, முன்னவனார் வழிபாடு செய்து வந்தார். ஒரு நாள் சிறந்த அருட்ஜோதி கண்டு அருகே நீராடி முடிந்ததும், ஒரு சிறந்த அருட்ஜோதி கண்டு அருகே செல்கையில் அது ஒரு விநாயகர் போன்று ஜோலிக்க, சுவாமிகள் பெரும் மகிழ்ச்சியுடன் தவழும் பொழுது அது ஒரு விநாயகர் சிலையாக மாறியதை கண்டு, அம்மூர்த்தியை எடுத்து ஒரு மேடை மீது அமர்த்தி "பரி பூரண விநாயகர்" எனத் திருநாமம் வழிபட்டு வந்தார். இக்கோவில் மதுரை மாநகரில் வைகை தென்கரையில் புகை வண்டி நிலையம் செல்லும் பாலத்திற்கு மேற்கில் கிழக்கு நோக்கியதாக அமைந்துள்ளது. சுவாமிகள் ஒருநாள் கடையில் நிட்டையில் அமர்ந்த சுவாமிகள் சில நாட்கள் எழுந்திருக்கவே இல்லை. ஒரு நாள் எழுந்து குற்றாலம் சென்று சண்பகமாதேவி அருவிக்கரையில் உள்ள ஒரு குகையில் சென்று நிட்டையில் அமர்ந்தார். பல ஆண்டு தவம் புரிந்து பிறவி பெரும் பயன் பெற்றார்.

சுவாமிகள் ஆங்காங்கு பக்குவம் பெற்ற அடியார் பலரின் இருப்பிடம் நாடி சென்று ஆட்கொண்டு அருள் புரிந்து அவர்களின் நல்வாழ்விற்கு அருந்துணையாக நின்று ஊக்கி வரலானார். கி.பி 1923 மார்கழி மாதம் 28ம் தேதி வெள்ளிக்கிழமை இறைவனோடு கலந்தார்.

சக்தி அன்னை விஜய ஆண்டு, ஆவணி திங்கள் மக நட்சத்திரத்தில் வானவர் போற்ற திருஅவதாரம் செய்தார். சொர்ணம் என்னும் திருநாமம் சூட்டினர். சிறுவயதிலே தந்தையர் இறந்து விட, தாயார் விட்டிற்கு அழைத்து வந்தனர். சீரும் சிறப்புமாய் வளர்ந்து வந்தார். இவருக்கு 10வயது இருக்கும் பொழுது ஆதி சங்கர குரு பரம்பரை சார்ந்த காஞ்சி காமகோடி பிடாதிபதி ஜகத்குரு ஸ்ரீ சந்திரசேகராந்திர சுவாமிகள் அன்னை ஊருக்கு எழுந்தருளினார். அன்னையை கண்ட சுவாமிகள் முகத்தில் பொலிந்த தெய்வீகப் பொலிவையும், பின்னர் அருள் நிலையில் உயர போகும் தன்மையை தம் ஞானத்தால் உணர்த்து, திருக்கண் சாத்தி, அருள் புரிந்தனர்.சிறுவயதிலேயே இறை வழிபாடு செய்த பின்னரே உணவருந்துவார். "ஆரியக் கூத்தாடினாலும் காரியத்தில் கண் வை" என்பது போல நம் அருள் அன்னை அவர்கள் இளம் வயதிலேயே எந்த காரியத்தை செய்தாலும் இப்பிறவி கடைத்தேற வேண்டுமே, வழிகாட்டிக் கரை சேர்க்கும் குருநாதர் வைக்கப்பட வேண்டுமே என்ற ஏக்கம் கொண்டு இருந்தனர்.

சிறுவயதிலே திருப்பதி, பழனி, மைலம், திருவகிந்தபுரம், திருப்பரங்குன்றம், திருக்கழுக்குன்றம் சென்று தரிசிக்கும் பாக்கியம் பெற்றவர். பழனி கோயிலில் மலை இறங்கும் பொழுது ஒரு பெரியவர் "அங்கு ஏன் போகிறாய்?" என்று கேட்டார். "உன் மனக்குறை நீங்கும் - இந்த வில்வமும் மிளகும் சாப்பிடு" என்று அருள் புரிந்தார். பழனி முருகனே அவ்வாறு அருள் செய்ததை பின்னர் தான் அறிந்தார் அன்னை. இளமையிலே எந்த காரியம் செய்தாலும் இந்த பிறவி கடைத்தேற வேண்டுமே, வழிகாட்டி கரை சேர்க்கும் வளமைமிகு குருநாதர் வைக்க வேண்டுமே என்று ஏக்கம் கொண்டவராய் இருந்தார்.



அந்த நேரமும் வந்தது! ஆனத்தூர் பகுதியில் இரெட்டியப்பட்டி சுவாமிகள் விஜயம் செய்தார். அன்னை தம் 22ஆம் அகவையில் அருட்சட்டம் ஏற்றார். இதன் பிறகு பல மாற்றங்கள் அன்னையார் வாழ்க்கையில் நடக்க தொடங்கியது. ஒரு நாள் அன்னையர் கனவில் சுவாமிகள் தோன்றி அன்னையை அழைத்து கொண்டு அருகில் உள்ள விநாயகர் கோயிலில் அமர்த்தி நீராட்டியது போன்று ஒரு கனவு நிகழ்ச்சி நடந்தது. ஆறு மாதம் கழித்து ஒரு நாள் தியானத்தில் அமர்ந்திருக்கையில் விநாயகர் திருகாட்சி கிடைத்தது. ஆவியை இறைவனடியில் ஒப்புவித்து சதா நிட்டை கூடிப் பேரின்பம் பெற்றார்கள்.

ஒரு முறை பிள்ளையார் குப்பத்தில் சுவாமிகள் விஜயம் செய்தார்! ஊரில் உள்ள விநாயகர் கோவிலில் வழிபாடு புரியும் சாஸ்திரிகள் உணவு சமைத்து கொடுப்பார். ஒரு நாள் தனக்கு வேதங்களில் இருக்கும் ஐயங்களை போக்க நினைத்தார்! இருந்தும் சுவாமிகள் வேதங்களில் ஞானம் இருக்குமா? என்ற எண்ணத்தில் விட்டுவிட்டார். அன்று இரவு சுவாமிகள் சாஸ்திரிகள் கனவில் தோன்றி சுவாமிகள் கொண்ட ஐயங்களை தெளிவாக்கினார். அடுத்த நாள், சாஸ்திரிகள் சுவாமிகளை சந்திக்க வந்த பொழுது "என்ன! வேதங்களில் ஐயம் தீர்ந்ததா?" என்று அருள் புரிந்தார். ஒரு முறை அன்னை சுவாமிகளிடம் "இந்த பிறவியிலேயே இறவா நிலை அடைய வேண்டும்: என்று வேண்டினார்கள்."அதற்கும் தடையா தாய்?" என்று அருள் புரிந்தார் சுவாமிகள். ஒரு முறை அன்னையின் வேண்டுகோள் இணங்க ஒரு முறை ஆண்டவர் திருவுருவப்படம் ஒன்றை தம் திருகரங்களால் க் கொடுத்து அருளினார். அப்படமே தற்போது பிள்ளையார் குப்பத்தில் அருட்சக்தி சன்னதியில் பிரதான படமாகப் பூஜையில் இருந்து வருகிறது.



ஆண்டுகள் பல கடந்தன... பக்குவம் பெற்ற நம் அன்னை அவர்கள் தாம் குற்றாலத்தில் செய்த தவத்தை பிள்ளையார் குப்பதிலே அன்னை நடத்த செய்ய திருவுளம் கொண்டார்கள். உயர்ந்த தவ நிலையை அருளுமுன், சில மாதங்கள் அன்னை அவர்களின் உடம்பைத் தூயுமை செய்தார்கள். கடுமையான தவத்தால் பல சிரமங்கள் ஏற்பட்டன. ஒரு சமயம், தன்னால் முடியாமல் போய்விடும் என்று அச்சம் கொண்டு உயிர் விட

முடிவெடுத்தனர். வீட்டின் கிணற்றில் ஏறி அமர்ந்து விட்டார். ஆனால் இப்படி இறப்பதால் ஊர் மக்கள் ஏசுவார்கள் அதனால் சுவாமிகள் குறிப்பின்படி கடும் தவம் செய்து முடியாமல் இறப்பது மேல் என்று முடிவு செய்து இறங்கி வந்து விட்டார்கள்.

முதலில் முன்று மாதங்கள் நிர்விககற்பம் தொடங்கியது - ஆகரமோ, நீரோ, சிறிதும் பருகாது அறையில் அமர்ந்தார். இல்லமே குகையாக அமைந்தது. அன்னை எலுமபும் தோலுமாக இருந்தார். ஆனால் தவ ஒளி எங்கும் வீசிற்று, குண்டலினி சக்தி மேலே ஏறி நின்றது. வாசியோகம் என்ற நிலையை எய்தினர்.

அன்னையின் பெருமை எல்லா திசைகளிலும் பரவியது. திருவண்ணாமலை அடியார் ஒருவர் கீல்வாத நோயால் பாதிக்கப்பட்டு இருந்தார். அன்னையிடம் கொண்டு வந்து சேர்த்தனர். நான்கு நாட்கள் தம் இல்லத்திலே தங்க வைத்து விபுதி தீர்த்தம் தர, நோய் விலகியது. நல்லாத்தூர் அடியார் ஒருவர் சித்த சுவாதினம் இல்லாமல் இருந்தார். அன்னை ஆணைப்படி அங்கேயே தங்க சொன்னார். நான்கு நாட்கள் ஓடின, ஒரு நாள் கிணற்றில் எதோ பொருள் விழுந்த மாதிரி சப்தம் கேட்டது. அந்த அடியார் உடல் கிணற்றில் மிதந்து கொண்டு இருந்தது. அன்னை உடலை ஆட்கள் விட்டு துக்க செய்து, உடல் முழுவதும் திருநீறு பூச செய்தனர். என்ன ஆச்சிரியம்! அவர் எழுந்தது மட்டும் இல்லாமல் மனநோயும் பூரண குணம் அடைந்தார். ஒரு முறை, பென்னகடத்தை சேர்ந்த ஒரு அன்பரின் குழந்தை ஒரு அணியை முழுங்கி விட்டது. சிறு குழந்தை என்பதால் சிகிச்சை அனைத்தும் பலன் அளிக்காமல் போய்விட்டது. அன்னையிடம் வந்தனர். குழந்தையின் வயிற்றில் விபுதி பூசி, திர்த்தம் அளித்தனர். மறுநாள் குழந்தையின் மலத்தில் வழியாக அந்த ஆணி வெளியேறியது. இது போன்று பல அதிசியங்களை அன்னை நிகழ்த்தினார்கள்.

தம் பொன்னார் திருமேனிக்குள் ஒளிர்ந்த ஜோதியை பூரணத்தோடு ஒன்றவைக்கும் நாள் வந்து விட்டதை அறிந்தார்கள். ரௌத்திரி ஆண்டு ஆடி மாதம் 21 ஆம் தேதி புதன் கிழமை ஆடிப்பூர நன்னாளில் (13/08/1980) அன்னை அகண்ட பரிபூரண சச்சிதானந்தத்தொடு இரண்டறக் கலந்தார் (**பொழிப்புரை - புத்தகம்** - **அருட்சக்தி அன்னை வரலாறு**, **ஆசிரியர்கள் வித்துவான் சு.மங்கையர்க்கரசி** & **பாலகவி.வெங்கடராமன்**, **ஸ்ரீ இரெட்டியப்பட்டி சுவாமிகள் சங்கம்**).

18. ஸ்ரீ வண்ணாரபரதேசி சுவாமிகள், ஒதியம்பட்டு.

அனைத்து சித்தர்களுக்குமே அவர்களது முடிவுக்காலம் முன்கூட்டியே தெரிந்திருக்கும். பின்னர் நிகழ இருப்பதை முன்னரே அறிந்துகொள்ளும் ஆற்றல் மிக்கவர்கள் சித்தர்கள். அத்தகைய சித்தர்களுள் ஒருவர்தான் வண்ணாரப் பரதேசி.இவர் வள்ளலார் ராமலிலிங்க அடிகளின் சமகாலத்தைச் சேர்ந்தவர். அக்காலத்தில் ஒரு அடர்ந்த காடு போன்ற இடத்தில் வாழ்ந்தவர். அதுவும் சாதாரண காடு அல்ல. ஏகப்பட்ட வில்வ மரங்கள் அடர்ந்து வளர்ந்திருந்த வில்வக்காடு! வில்வத்திற்கும் ஈஸ்வரனுக்கும் தொடர்பு உண்டல்லவா! இவர் அந்தக் காட்டின் நடுவே தவம் செய்து கொண்டிருந்தார். ஒருநாள் அவரது கை, கால், மற்றும் அனைத்து உறுப்புகளும் தனித்தனியே கிடப்பதைக் கண்ட மாடு மேய்க்கும் சிறுவர்கள் பயந்துபோய், ஊர் மக்களை அழைத்து வந்தனர்.

அவர்கள் வருவதற்குள் வண்ணாரப் பரதேசி சித்தர், தன் யோக நிலையில் இருந்து மாறி பழையபடி அவரது உருவத்தில் காணப்பட்டார். வியந்துபோன மக்களுக்கு அப்போதுதான் புரிய ஆரம்பித்தது- அவர் சித்தர் என்று.அந்த வில்வக்காடுதான் பின்னர் வில்லிலியநல்லூர் என மாறி, நாளடைவில் வில்லியனூர் என மருவியுள்ளது. அவரது சக்தியையும், ஆற்றல் பற்றியும் புரிந்துகொண்ட மக்கள் அவரைத் தேடி வந்து வணங்க ஆரம்பித்தனர். அங்கே மீன் விற்பனை செய்பவர்கள் இவரை வணங்கிய பிறகுதான் மீன் விற்பனைக்குச் செல்வார்களாம். சித்தரது கையால், பூமியில் இருந்து மண்ணை எடுத்துக்கொடுத்து அனுப்பினால் மீன்கள் அனைத்தும் வெகுவிரைவில் விற்பனையாகிவிடுமாம்! அதுபோல், நோயுற்றவர்களுக்கு மகான் வண்ணாரப் பரதேசி, மண் எடுத்து உடம்பில் பூசி குணப்படுத்தியிருக்கிறார்.



பக்தர்கள் கேட்டதை வழங்கும் சக்தி அவருக்கு இருந்தது. பல ஆண்டுகள் மக்களுக்கு அருள் வழங்கிய இந்த சித்தரின் ஆயுட்காலம் முடிந்ததும், அன்றைய பக்தர்கள் அவருக்கு சமாதி கட்டினார்கள். சிறிய ஓலைக் குடிலுக்குள் இருந்த இந்த மகானின் சமாதிக்கு, பின்னாளில் கல் கட்டடம் கட்டி சிறப்பு செய்தனர். இச்சித்தர் சமாதியாகியுள்ள பகுதி, புதுச்சேரி அருகேயுள்ள வில்லியனூரை அடுத்துள்ள ஒதியம்பட்டு ஆகும். பக்கத்தில் உள்ள மில்களில் பணிபுரியும் பெண்கள், வேலைக்குப் போகும் முன்பு இச்சமாதிக்கு வந்து தீபம் ஏற்றிவிட்டுச் செல்கிறார்கள். தாங்கள் கேட்பதெல்லாம் கிடைப்பதாகவும், நினைப்பதெல்லாமே நிறைவேறுவதாகவும் கூறுகின்றனர் இந்த பக்தைகள். மகான் வண்ணாரப் பரதேசிச் சித்தரின் மகிமை பற்றி விளக்கமாக எடுத்துரைக்க முன்வந்தனர் கங்காலட்சுமி- மதிவாணன் தம்பதியர்.



"எங்களுக்குத் திருமணமாகி பதின்மூன்று வருடங்கள் குழந்தைப் பேறு இல்லாமல், ஏங்கிப்போய் இருந்தோம். சென்னையிலுள்ள குழந்தையின்மை சிகிச்சை மையத்திற்குச் சென்றோம். அங்கே என் மனைவியை ஒரு வருடம் தங்கியிருந்து சிகிச்சை பெறவேண்டும் என்று கூறினார்கள். இதற்கு என் மனைவி உடன்படவில்லை. எனவே நாங்கள் அங்கிருந்து கிளம்பி வந்துவிட்டோம்" என்று மதிவாணன் கூற, தொடர்ந்து கங்காலட்சுமி பேசினார். ""எனக்கு அங்கே தங்கியிருக்க உடன்பாடு இல்லை. என் மனதிற்குள் தெய்வ சக்தியால் குழந்தை கிடைக்கும் என்ற நம்பிக்கை இருந்தது. இங்கே வந்து வண்ணாரப் பரதேசி சுவாமி களிடம் தஞ்சம் அடைந்தோம். குழந்தைக்காக வேண்டிக்கொண்டோம். அடுத்த ஒரே வருடத்தில் எங்களுக்கு ஆண் குழந்தை பிறந்தது. இப்போது அவனுக்கு ஒன்பது வயது"என்று முகம் மலர சொல்கிறார்.

மகான் வண்ணாரப் பரதேசி ஆலயம் மிக அமைதியாக உள்ளது. இங்கே தினமும் தீபம் ஏற்றி வணங்க வரும் பெண்கள் அநேகம். சித்தர்மீது மாறாத பக்திகொண்டு இவரைத் துதித்து வணங்கி வருகின்றனர் அவரது பக்தர்கள். கோவிலிலின் முன்பக்கம் அடர்ந்து, வளர்ந்துள்ள மரங்கள் உள்ளன. சமீபத்தில் வீசிய "தானே' புயலிலில் புதுச்சேரியில் பல மரங்கள் விழுந்து சரிந்தபோதும், இங்குள்ள மரங்களில் ஒன்றுகூட விழவில்லை. ஒரு கிளை கூட சரியவில்லை... அதுபோல சுவாமிகளுக்கு ஏற்றிய தீபம்கூட அணையவில்லையாம். அது இந்த மகானின் மகத்துவத்தால்தான் என்று நம்பிக்கையோடு கூறுகிறார்கள் மக்கள்.சமாதியைச் சுற்றிலும் நிறைய பாம்புகள் இருக்குமாம். இதுவரை ஒரு பாம்புகூட யாரையும் தீண்டியதில்லையாம் (எழுத்துக்கள் http://www.nakkheeran.in/Users/frmArticles.aspx?A=14851 சொந்தமானது).

19. ஸ்ரீ தேங்காய் சுவாமிகள் சித்தர், வில்லியனூர்.



புதுவையிலுள்ள மூலகுளம் பகுதியிலிருந்து சுவாமிகள் வந்ததாக கூறுவர். மணவெளி கிராமத்திற்கு அருகிலுள்ள தண்டுகரை மேடு என்ற பகுதியில் சிறு குடிசை அமைத்து வசித்து வந்துள்ளார். அங்கு தீவிரமான ஆத்ம சாதனையில் ஈடுபட்டிருந்தார். பிரச்சனைகளால் பாதிக்கபட்ட மக்களுக்கு குறைகளை தீர்த்து வைத்துள்ளார்.பக்தர்களை தேங்காயை கொண்டு வரச்செய்து அதை உடைத்து பார்ப்பாராம். தேங்காயினுள் நீல நிறத்தில் எழுத்துக்கள் தெரியுமாம். அதைப்படித்து பக்தர்களின் பிரச்சனைகளுக்கு தீர்வு சொல்வாராம். அதனாலேயே "தேங்காய் சித்தர்" என்ற பெயர் வந்ததாம். பில்லி சூன்யம் -ஏவல் முதலியவற்றை விரட்டி அடிப்பாராம். பச்சிலை மூலிகைகளைக் கொண்டு கை தேர்ந்த வைத்தியம் செய்வாராம். அவர் கை பட்டாலே நோய் பறந்து விடுமாம். சில ஆண்டுகளுக்கு பிறகு வில்லியனூரில் மரத்தடியில் அமர்ந்து முக்தி அடைந்து விட்டார்.அவருக்கு அங்கேயே சமாதி எழுப்பி வழிபாடு செய்து வருகின்றனர்.சுவாமிகளுக்கு தேங்காயை வைத்து வழிபட்டால் பிரச்சினைகள் தீரும் என்ற நம்பிக்கை இன்றளவும் உள்ளது (எழுத்துக்கள் http://pudhuvaisithargal.blogspot.in சொந்தமானது).

20.ஸ்ரீ இராம பரதேசி சுவாமிகள், வில்லியனூர்.



ஓம் ஸ்ரீ ராம் பரதேசி சுவாமிகள் ஆந்திராவைச் சேர்ந்தவர். சிறு வயதாய் இருக்கும் பொழுதே தாயை இழந்து விட்டார். இவர் எதிலும் பற்றுக் கொள்ளாது, இங்கும் அங்குமாக அலைந்து திரிந்து கொண்டிருப்பார். இவருக்கு அளித்த ஆடைகளை அணியாமல் தூக்கியெறிந்து விட்டு- சாதாரண கோவணத்துடன் திரிவது வழக்கம். நடுரோட்டில் படுத்துத் தூங்குவார்.

இவருக்கு ஒன்றும் தெரியவில்லையே என்று மற்றவர்கள் நினைத்து பரிதாபப்பட்டார்கள். மற்றவர்களுக்கு ஒன்றும் தெரியவில்லையே என்று இவர் பரிதாபப்படுவார்.இப்படி சில ஆண்டுகள் கழிந்தன. ஒரு நாள் விடியற்காலையில், எதையோ நினைத்து வீதியில் சென்று கொண்டிருக்கும் போது இவரை ஒரு பெரியவர் கைத்தட்டிக் கூப்பிட்டார். இவருடைய கன்னங்களை தன் இரு கைகளால் ஏந்தி, இவருடைய முகத்தை ஆடாது, அசையாது அப்படியே பார்த்துக்கொண்டிருந்தார். ராம் பரதேசி சுவாமிகளும் அப்படியே அந்த பெரியவரை சிறிது நேரம் பார்த்தபடி-தம்மை மறந்து கல்லாக நின்றார். வந்த பெரியவர் சுவாமிகளுக்கு பிரம்ம உணர்வை ஏற்படுத்தினார். தன்னை அறியும் அறிவைப் போதித்தார்.பிரம்மப் பேரொளி வீச வைத்தார். உடல் முழுவதும் தடவி கொடுத்து "போடா போ" என்று சொல்லி மறைந்து விட்டார்.

பிரம்ம முகூர்த்தத்தில் வீட்டை விட்டு வந்தவர்-பின் வீடு திரும்பவேயில்லை. சிரித்துக் கொண்டே கால் நடையாக நடந்து கொண்டேயிருந்தார். மனிதனையும் அவனது தீயபேய்க் கூத்தையும் வெறுத்து ஒதுக்கினார். வேகமாக நடந்தார். நடந்துக் கொண்டேயிருந்தார்.இவருள் ஆத்ம சக்தி வளர்ந்தது. உடலெல்லாம் பாய்ந்தது.அந்த ஆன்மக் கனலே பெரு நெருப்பாகி அவர் மனத்தை சுட்டெரித்தது.மனத்தை சுட்டெரித்தவன் எவனோ அவனே ஆத்ம ஞானி.அவனுக்கு நண்பர், உற்றார்-உறவினர், பகைவர் என்று யாரும் இல்லை. ஆத்ம ஞானி என்றால் விதியை வென்றவன் என்று பொருள்.இப்படியே நடந்து கொண்டிருந்தவர் -புதுவைக்கு வந்து சேர்ந்தார்.



ஓம் ஸ்ரீ ராம் பரதேசி சுவாமிகள் நல்ல உடல்வாகு கொண்டவர். சுமாரான உயரம்.சிவந்த மேனி. தெய்வீக முக அமைப்பு.குண்டாண கண்கள். நீண்ட தாடியும், சடா முடியும் கொண்டவர்.சிறு வயிறு.இடையில் கோவணம்.அவருடைய புருவ மத்தியில் உருண்டையாக ஒரு பொருள் சுழன்று கொண்டேயிருக்கும்.

சுவாமிகளின் இயற்பெயர் என்னவென்று யாருக்கும் தெரியாது. ஆனால் சதா சர்வ காலமும் "ராம் -ராம்- ராம்" என்று சொல்லிக் கொண்டேயிருப்பார்.அதனால் இவரை "ராம் பரதேசி "என்று மக்கள் அழைத்தார்கள். இவர் திருமணமாகாதவர்.சுத்த பிரம்மச்சாரி. சிவனை அடைவதற்கும், சிவ நிலை பெறுவதற்கும் பரதேசி ஆவதுதான் உயர்ந்த நிலை. அப்படியே பரதேசி ஆனார். சுவாமிகள் சித்துக்களில் வல்லவர்.மக்களுக்கு தன் ஆத்ம சக்தியால் அவர்களின் பெருங் குறைகளை தீர்த்து வைத்தார். அருளை வாரி வழங்கினார். நாகப் பாம்பு கடித்து இறந்தவரை அவரிடம் தூக்கி வந்து முறையிடுவார்கள். சுவாமிகள் சிரித்துக் கொண்டே"ஏ, நாகம்மா- இங்கே வாடி "என்பார். எந்தப் பாம்பு இறந்தவரை கடித்ததோ அதே பாம்பு, அங்கு வந்து சுவாமிகள் எதிரில் படமெடுத்து நிற்கும்.சுவாமிகள் கையை நீட்டுவார்.நாகம் தன் விஷத்தை சுவாமிகள் கையில் கக்கும். அதை அப்படியே விழுங்கி விடுவார்.சில சமயங்களில் நாகத்தை தூக்கி தன் நாக்கினருகில் கொண்டு செல்வார்.நாவினில் நாகம் கொத்தும். அதை அப்படியே உண்பார். பாம்பின் விஷத்தை உணவாக கொள்வது இவரது வழக்கம். இப்படி நாகம் தீண்டப்பட்டவர்களை உயிர் பிழைக்க வைத்துள்ளார். குண்டலினி யோகத்தில் வெற்றி கண்டவர் கூட பாம்பின் விஷத்தை உண்ணலாம் என்பது விதி. ஓம் ஸ்ரீ ராம் பரதேசி சுவாமிகளும் மௌன தியானத்தை ஆத்மீக சாதனையாகக் கடைபிடித்தார். எதிர்பட்டோரின் அல்லல்களை நீக்கினார். ஜீவன்களுக்கு ஏற்படும் நோய்களை குணமாக்கினார்.

நெருப்பு நெருப்பை அழிக்காது.விஷம் விஷத்தை தள்ளாது.இத்தனையும் படைத்த பரம்பொருளுக்குள் யாவும் அடைக்கலம்.அப்பரம்பொருளினின்று திருவருளைப் பெற்ற ஆத்ம ஞானியரிடம்அனைத்துலகப் பொருட்களும் சரணடைவது வழக்கம். ஆகவே அவருக்கு முதுமை பருவம் வரவில்லை.சமாதிவரை பாலகனாகவே காட்சியளித்தார். பிரணவத்தின் பேராற்றலை உணர்ந்தார்.சர்வத்துக்கும் ஆதி காரணகர்த்தா ஓங்காரமே என்பதைஅவரது ஆத்மானுபவம் அவருக்குச் சுட்டி காட்டியது. சுவாமிகள் தம்மை பெரும் கயிற்றால் குழந்தைகளை விட்டு கட்டச் சொல்வார்.அவர்களை விட்டே வீதி வீதியாக இழுத்துச் செல்லும்படி சொல்வார்.குழந்தைகள் அவ்வாறே வில்லியனூர் முழுதும் அவரை இழுத்துச் செல்லுவார்கள்.பிறகு குழந்தைகளுக்கு மிட்டாய் கொடுப்பார். சுவாமிகள், இவ்விடத்தில் 30 ஆண்டுகளுக்கு பின்னர் ஒரு அதிசயம் நடக்கப் போகிறது என்று சொன்னார். அதன்படியே, சுவாமிகள் கூறிய இடத்தில் வில்லியனூர் புகைவண்டி நிலையம் அமயப் பெற்றது.

சுவாமிகள் தம்முடலை பிரம்ம உடலாக மாற்றி ஓங்காரப் பேருடலாக திருப்பினார்.அப்படியே தன்னந்தனியாக பலகாலம் ஒரே இடத்தில் அமர்ந்து விடுவார். இப்படி ஒரு சமயம், 1838 ஆம் ஆண்டு, பரப்பிரம்மக் காட்சியை உடலோடு கண்டு கொண்டிருந்தார். உடல் ஆடவில்லை, அசையவில்லை.கீழே விழவும் இல்லை. சமாதி நிலை பெற்றிருந்தார்.

இதனைக் கண்ட பாமரமக்கள், சுவாமிகள் இறந்து விட்டார் என்று தவறான முடிவிற்கு வந்து, சுவாமிகளை சமாதி நிலையிலேயே புதைத்து விட்டார்கள். அவரை புதைத்தஇடம், வில்லியனூர் புகை வண்டி நிலையத்தில் உள்ள பயணச்சீட்டு கொடுக்கும் இடத்திற்கு கீழேயுள்ளது.1868 ஆம் ஆண்டு ரயில் தண்டவாளம் போடுவதற்கு, இடத்தை அகலப்படுத்த தோண்டினார்கள். தோண்டும் பொழுது திடீரென ரத்தம் பீறிட்டு அடித்தது. பயந்து போனவர்கள் மண்ணை மெதுவாக அப்புறப்படுத்திப் பார்த்தார்கள்.அங்கே, சுவாமிகளின் உடம்பு அழியாமல்-உயிருள்ளவர்களின் உடல்போல்பசுமையாக இருந்ததைக் கண்டார்கள். ஆச்சரியத்திலும், அதிர்ச்சியிலும் உறைந்து போனார்கள்.அப்படியே மெதுவாக சுற்றுப்புறத்திலுள்ள மண்ணை அப்புறப்படுத்தி சுவாமிகளை மெதுவாக வெளியே தூக்கி வைத்தார்கள்.இச்செய்தி ஊர்மக்களுக்கு பரவியது. பிரஞ்சு அதிகாரிகளுக்கும் தெரிய வந்தது. உடனே அனைவரும் அங்கு கூடினர்.ஊர் பெரியவர்கள், வயதானவர்கள் சுவாமிகளின் பெருமைகளைப் பற்றி பிரஞ்சு அதிகாரிகளுக்கு எடுத்துரைத்தனர். சுவாமிகளுக்கு சமாதி அமைவிக்க ஒரு இடம் ஒதுக்கி தருமாறு அதிகாரிகளை கேட்டுக் கொண்டனர். அவ்வாறே பிரஞ்சு அதிகாரிகளும் சுவாமிகளின் பெருமையை உணர்ந்து- தற்போதுள்ள அந்த இடத்தை ஒதுக்கி கொடுத்தனர். சுவாமிகள் ஜீவன் உள்ள பொழுதே சமாதி அடைந்தார்கள் (எழுத்துக்கள் http://jnanabhoomi.blogspot.in/2010/01/blog-post_03.html சொந்தமானது).

21. ஸ்ரீ தட்சிணாமூர்த்தி சுவாமிகள், தென்னல்.

ஸ்ரீ தட்சிணாமூர்த்தி சுவாமிகளின் சித்தர் பீடம் புதுச்சேரியில் இருந்து விழுப்புரம் செல்லும் நேர் வழிபாதையில் தென்னல் என்னும் கிராமத்தில் அருகில் உள்ள அய்யனார் கோவிலுக்கு வலப்புறம் உள்ள குளக்கரையில் ஒரு சின்ன கீற்று கொட்டகையில் உள்ளது.எங்கிருந்தோ வந்தார் தட்சிணாமூர்த்தி என்ற நாமம் தாங்கிய சுத்த சந்நியாசி.புதுச்சேரிக்கு அடுத்த, பள்ளித் தென்னல் என்ற சிற்றூருக்கு வந்தார். வெளியூரில் இருந்து வந்த இவரை, ரெட்டியார் ஒருவர் உபசரித்தார். இவரும் அவருடைய நண்பரும் தொண்டு செய்து வந்தனர்.



ஊரில் சேமங்கள சுவாமிகள் என்று ஒருவர் இருந்தார். தன்னை விட கல்வியில் சிறந்தவர் எவரும் இல்லை என்ற அகந்தை கொண்டவர். ஊரில் உள்ளவர்களை வம்புக்கு இழுப்பார். ஒரு நாள் தட்சிணாமூர்த்தி சுவாமிகளையும் வம்புக்கு இழுத்தார்! சித்தரை பார்த்து "நீர் எந்த ஊர்?" என்றார்! சித்தர் பொறுமையாக "நீரும் நானும் ஒரே ஊரில் இருந்து தானே புறப்பட்டோம் அதற்குள் மறந்து விட்டதா? என்றார். சேமங்கலம் சுவாமிகளுக்கு கோவம் அதிகரித்தது. தத்துவம் வாய்ந்த விஷயங்களை கேள்விகளாக கேட்க தொடங்கினார். தட்சிணாமூர்த்தி சுவாமிகளோ இவருடன் வாதம் செய்வது வீண் என்று அந்த இடத்தில் இருந்து விலகி

சென்று விட்டார். சித்தரை வம்புக்கு இழுத்த சேமங்கலம் சுவாமிகளுக்கு தான் செய்த வம்பினால் பாரிசவாயு நோய் ஏற்பட்டது. இதை உணர்ந்த சேமங்கலம் சுவாமிகள் மனம் வருந்தினார். இதை உணர்ந்த சித்தர், அவர் முன்பு திடிரென தோன்றி அவரது உடலை தடவி கொடுத்தார். உடனே நோய் குணமானது.

ஒரு முறை ஊரில் உள்ள ஒரு பெரிய வைத்தியர் விட்டின் திண்ணையில் அமர்ந்து இருந்தார். திடிரென்று வைத்தியம் சம்பந்தமாக, வெளியே புறப்பட்ட வைத்தியர்; சித்தரை தான் திரும்பும் வரை வயதிலே இருக்கும் படி வேண்டினர். சித்தர் சம்மதித்து, விட்டு திண்ணையில் அமர்ந்தார். அந்த வைத்தியர் மனைவியிடம், வைத்தியரின் ஒவ்வொரு செயலையும் சொல்லி கொண்டே வந்தார். விட்டுக்கு திரும்பிய வைத்தியரிடம், இதை சொல்லிய மனைவியை பார்த்து அச்சிரியத்தில் பார்த்தார் வைத்தியர்.

ஒரு முறை ஒரு செல்வந்தர் உணவு அருந்த சித்தரை அழைத்திருந்தார். திருவோட்டில் உணவு அருந்துவதை கண்ட அவரின் மனைவி தரகுறைவாக எண்ணினார். இதை உணர்த்த சித்தர், சிரித்து விட்டு அவர் எண்ணியதை அப்படியே சொன்னார். செல்வந்தரின் மனைவி மனம் வருந்தி அவர் பாதங்களில் விழுந்தார்.




முக்தி அடையும் நாளை முன்கூட்டியே உணர்த்த சித்தர், தனது அடியார் ஒருவர் விட்டில் வேலை பார்க்கும் சிறுவனை 108 குடம் தண்ணி ஊற்றுவாயா என்று கேட்டார். எதுவும் புரியாத அந்த சிறுவன், லேசாக தலையை ஆட்டினான். மறுநாள் அந்த சிறுவன் அந்த சித்தரை 108 குடம் தண்ணீரால் சித்தரை அபிஷேகம் செய்தான். பிற்பகல் உணவை அங்கு வந்த அனைவருடன் அமர்ந்து உண்டார். பிறகு தவத்தில் அமர்ந்தார். உடல் அசைவற்று இருப்பதை பார்த்த மக்கள், அவரின் இறுதி சடங்கிற்கான ஏற்பாடுகளை செய்தனர்.

ஊரில் மாடு மேய்க்கும் சிறுவன் ஒருவன் சித்தரின் மீது மிகுந்த அன்பு வைத்திருந்தான். சித்தரின் இறுதி ஊர்வலத்தை கேள்வி பட்டு மிகவும் வருந்தினான். தன்னால் அவரை பார்த்து கடைசியாக பேசமுடியவில்லையே என்று வருந்தினான். ரதத்தின் அருகில் சென்று கண்ணீர் சிந்தினான். திடிரென கண் விழித்த சித்தர் "தம்பி போகிறேன்" என்று சொல்லி சமாதி நிலை அடைந்தார். இந்த அதிசிய காட்சியை கண்ட அனைவருக்கும் அதிர்ச்சி! சுவாமிகள் சவுமிய வருடம் ஆனி மாதம், 26ஆம் தேதி (7-7-1909) வெள்ளிகிழமை பிற்பகல் 2 மணிக்கு முக்தி அடைந்ததாக சொல்லப்படுகிறது. சுவாமிகள் வழிபட்டதாக சொல்லப்படும் லிங்கம் ஒன்று அவரின் சமாதியின் அருகிலேயே உள்ளது. லிங்கத்தின் ஆவுடையார் சற்று வித்தியாசமாக காணப்படுகிறது (**பொழிப்புரை** -http://2.bp.blogspot.com/-aCPKI4P09QE/VQEmrD69SNI/AAAAAAAA8iQ/TF6a5rCQp2s/s1600/Sithar.jpg).

22.ஸ்ரீ குரு சுவாமி அம்மையார், கண்டமங்கலம்

புதுவை-விழுப்புரம் தேசிய நெடுஞ்சாலையில் உள்ள கண்டமங்கலத்தில் இந்த அம்மையாரின் ஜீவ சமாதி அமைந்துள்ளது. கண்டமங்கலத்தில் பிரதான சாலையிலேயே உள்ள சமரச சுத்த சன்மார்க்க நிலைய வளாகத்தில் இந்த சமாதி திருக்கோயில் இருக்கிறது. புதுவை மக்களுக்கும், எண்ணற்ற வெளியூர் பக்தர்களுக்கும் அருள் பாலித்து வாழ்ந்து வந்த பெண் சித்தரின் திருநாமம் - ஸ்ரீகுருசாமி அம்மையார்! இந்த வழியே பயணப்படும் ஏராளமான பக்தர்கள், சமாதித் திருக்கோயிலைத் தரிசித்துப் பலன் பெற்று வருகிறார்கள். 1890-ல் இருந்து 1895 வரை இந்தப் பகுதியில் குருசாமி வசித்திருக்கலாம் என்று நம்பப்படுகிறது. குருசாமி அம்மையாரின் ஜீவ சமாதி, சுதந்திர காலத்துக்கு முன் - அதாவது 1947-க்கு முன் முறையான பராமரிப்பு இல்லாமல் இருந்து வந்ததாம். மேலே சொன்னபடி இரண்டு மாநிலத்துக்கும் இது எல்லையாக அமைந்தமையால், இந்த ஜீவ சமாதி அமைந்துள்ள இடத்துக்கு அருகே புதுவை எல்லையில் பிரெஞ்சுப் படையும், தமிழக எல்லையில் பிரிட்டிஷ் படையும் தனது வீரர்களை நிறுத்திக் காவல் காத்து வந்ததாம்.



எனவே, இரண்டு படைகளும் நிரந்தர முகாமிட்டிருக்கும் இடத்துக்கு அருகே உள்ள குருசாமி அம்மையார் ஜீவ சமாதி எவருக்கும் புலப்படவில்லை. இந்தப் பகுதி வழியாகப் பயணிப்போர் சற்று ஓய்வு எடுக்கலாம் என்று இங்கே அமர்ந்தாலும், அவர்களை விரட்டி விடுவார்கள் இரண்டு படையினரும். காரணம் -போராட்டக்காரர்களாக இருக்குமோ என்கிற சந்தேகத்தில் எவரையும் இதன் அருகே நெருங்க விட மாட்டார்களாம்.

தமிழகப் பகுதிக்கு ஒரு வழியாக சுதந்திரம் கிடைத்த பின்னும், பிரெஞ்சுக் குடியரசின் ஒரு பகுதியாகவே புதுவைப் பிரதேசம் தொடர்ந்து வந்தது. எனவே, குருசாமி அம்மையாரின் ஜீவ சமாதியை நிம்மதியாகத் தரிசிக்க வரும் பக்தர்களை, பிரெஞ்சுப் படைகள் சந்தேகக் கண் கொண்டே பார்க்க ஆரம்பித்தது. எங்கே, தமிழகம் மாதிரி தங்களது கட்டுப்பாட்டில் உள்ள புதுவைப் பிரதேசத்திலும் ஏதேனும் கலகம் விளைவித்து விடுவார்களோ என்று பிரெஞ்சுப் படை பயந்தது. காலம் உருண்டோட... எல்லாப் படைகளும் தொலைந்தொழிந்த பின்னர்தான் இந்த ஜீவ சமாதி, ஒரு வெளிச்சத்துக்கு வந்தது என்று சொல்லலாம்.

குருசாமி அம்மையாரின் ஜீவ சமாதி, தஞ்சை மாவட்டம் அம்மாப்பேட்டையில் பிறந்த நடராஜ சுவாமிகள் எனும் ஆன்மிக அடியாரால் கண்டுபிடிக்கப்பட்டது. இளம் வயதிலேயே துறவறம் பூண்ட நடராஜர், யாத்திரையாகப் புறப்பட்டு பல திருத்தலங்களைத் தரிசித்து வந்து கொண்டிருந்தார். அப்படி வந்தவர் புதுவையை அடைந்து சித்தானந்த சுவாமி கோயிலில் தவத்தில் ஆழ்ந்தார். அதுவரை நிரந்தரமாக எங்கும் தங்காமல் யாத்திரையாகப் பயணப்பட்டுக் கொண்டே இருந்த நடராஜரை, ஓர் அசரீரிக் குரல் தடுத்தாட்கொண்டது. குருசாமி கோயிலுக்குப் போ. அங்கே உனக்குப் பணிகள் காத்திருக்கின்றன என்பதே அந்த அசரீரி. இதன்பின் அவரது உள்ளுணர்வுக்குக் கிடைத்த குறிப்புகளைக் கொண்டு விழுப்புரம் சாலையில் அரியூர் பகுதி வந்ததும், ஏதோ ஒரு குறிப்பு கிடைக்க... அங்கே புதர் மண்டிய ஓர் இடத்தில் அமர்ந்து யோகத்தில் ஆழ்ந்தார். ஆம்! அந்தப் புதருக்குள்தான் குருசாமி அம்மையாரின் ஜீவ சமாதி புதையுண்டு கிடந்தது. தியானத்தின் போது நடராஜருக்கு குருசாமி அம்மையார் காட்சி கொடுத்து, நான் இங்கேதான் குடி கொண்டிருக்கிறேன் என்று சொல்ல... சட்டென்று தியானம் கலைந்து எழுந்தார் நடராஜர். பரபரவென்று அந்த முள் புதரை அகற்றினார். சமாதியைக் கண்டுபிடித்தார். பிரெஞ்சு மற்றும் பிரிட்டிஷ் படையினரின் எதிர்ப்பை எல்லாம் சமாளித்து, அந்த ஜீவ சமாதிக்குப் புத்துயிர் தந்தார் நடராஜர்.


நடராஜரின் இந்தத் திருப்பணிகளுக்கு உள்ளூர்க்காரர்கள் சிலரும் உதவ முன்வந்தனர். அதன் பின், குருசாமி அம்மையாரின் திருவுருவப் படத்தைப் பாதுகாத்து வரும் ஒரு அன்பரை மங்கலம்பேட்டையில் கண்டுபிடித்து, அதை வணங்கினார். படத்தில் உள்ள உருவத்தைக் கொண்டு அம்மையாருக்கு ஒரு திருமேனி வடிக்கச் செய்தார். அந்தத் திருமேனியே இன்று நாம் தரிசிப்பது! வழிபாட்டையும் அன்னதானத்தையும் அந்த ஜீவ சமாதியில் துவங்கி வைத்தார். குருசாமி அம்மையாருக்கு செல்வந்தர்கள் கொடுத்த சொத்துக்களைக் கஷ்டப்பட்டுக் கண்டறிந்து அவற்றைக் கொண்டு கல்வி உட்பட பல திருப்பணிகளைச் செய்தார் நடராஜர். 1970-ஆம் ஆண்டு நடராஜ சுவாமிகள் மறைந்து விடவே, அவரது சீடரான சீதாராம் என்பவர் இந்தப் பணிகளைத் தொடர்ந்து நடத்தினார். இந்த இரு அருளாளர்களின் பெருமுயற்சியால் தான், குருசாமி அம்மையாரின் ஜீவ சமாதி பலராலும் அறியப்படும் நிலைக்கு வந்தது என்றே சொல்லலாம். நடராஜ சுவாமிகள், சீதாராம் சுவாமிகள் ஆகிய இருவரின் சமாதிகளும் அம்மையாரின் சமாதி அமைந்துள்ள இடத்துக்கு அருகே அமைந்துள்ளன (எழுத்துக்கள் http://temple.dinamalar.com/New.php?id=1496 சொந்தமானது).

23. ஸ்ரீ அழகப்பர் சுவாமிகள் ஆலயம், தென்னம்பாக்கம்.

சுமார் 200 ஆண்டுகளுக்கு முன், புதுவை வில்லியனூர் அருகிலுள்ள தென்னம்பாக்கம் என்ற சிற்றூரில், ஒரு சித்தர், ஆத்ம சாதனை புரிந்து வெற்றி கண்டு-அமைதியாக உலவி வந்தார். அவருடைய காலம் கி.பி. 1800 லிருந்து கி.பி. 1840 வரை இருக்கலாம் என்று கூறப்படுகிறது. அவ்வூர் மக்கள் அவரை அழகர் சுவாமிகள் என்று அழைத்தார்கள். சுவாமிகளின் பிறப்பிடம் எது, அவர் எங்கிருந்து வந்தார், அவரின் தாய் தந்தையர் யார் என்பது யாருக்கும் தெரியாது.



தென்னம்பாக்கம், அழகிய சிற்றூர்.அவ்வூரிலிருந்து ஒரு கி.மீ தொலைவில் ஐயனார் கோவில் ஒன்று இருந்தது.அதைச் சுற்றி வில்வமரங்களும் ஏனைய மரங்களும் அடங்கிய பெருங்காடாக இருந்தது. சுவாமிகள், அந்த ஐயனார் கோவில் அருகிலுள்ள புதர்களிடையே அமர்ந்து தவம் செய்வார்.மௌனமாக அங்குமிங்கும் அமைதியாக உலாவுவார்.மண்ணைப் பார்ப்பதை விட்டு விண்ணைப் பார்ப்பதிலேயே கவனமாக இருப்பார்.சில சமயம் கோவில் அருகிலுள்ள கிணற்றில் இறங்கி- நீரினடியில் சிவத்தியானம் செய்வார். எப்பொழுதும் பகலிலும் இரவிலும் இந்த ஐயனார் கோவில் பெரிய ஆலமரத்தடியில் படுத்து இருப்பார். சில சமயங்களில் அவர் மேல் பாம்பு சுற்றிக் கொண்டு இருக்குமாம். பிறகு போய் விடுமாம்.அங்கு வரும் மக்களுக்கு உள்ள இடையூறுகளை நீக்கி அருளினார். பாம்பு கடித்தவர்களை மந்திரித்தார். நோய்நொடிகளை தீர்த்து வைத்தார். பேய் பிசாசு பிடித்தவர்களை மந்திரித்து குணப்படுத்தினார். பயிர்களுக்கு வரும் நோயை தீர்த்து வைத்தார்.



ஊரார் வீட்டுக்கு கூப்பிட்டால் இதுதான் என் இருப்பிடம், வேறு இடம் போக மாட்டேன் என்று சொல்லுவார். பல சித்து புருஷர்களோடு ஒப்பிடும்படி, பல சித்துக்கள் செய்து பேராற்றலோடு விளங்கினார். சித்தருக்கு 70 வயது திட்டத்தில் வருஷம் பிறந்த முதல் விசேஷத் திங்களன்று காலையில் ஊர் மக்கள் அனைவரையும் கூப்பிட்டார். "உங்கள் ஷேமத்திற்காக நான் ஆணடவனை வேண்டிக் கொண்டே இருக்கிறேன்.இந்த முதல் சோமவார பூஜையை விசேஷமாக செய்வோம்" என்று சொன்னார்.

பின்னர், அங்கிருந்த ஏற்றம் இறைத்துக் கொண்டிருந்த, நீர் நிறைந்த கிணற்றில் இறங்கி மூழ்கினார். சுவாமிகள் தியானத்திற்காக செல்லுகின்றார் என்று மக்கள் நினைத்தனர்.வெகு நேரமாகியும் வெளியே வரவில்லை.பக்தர்கள் பயந்தனர்.சிலர் உள்ளே இறங்கி தேடிப் பார்த்தனர். சுவாமிகளின் உருவம் அவர்கள் கைகளுக்கு கிடைக்கவில்லை. சுவாமிகள் அங்கில்லை.இன்னும் சிலர் இறங்கித் தேடிப் பார்த்தும் சுவாமிகள் கிடைக்கவில்லை.சுவாமியவர்கள் அருள்ஜோதி ஆகிவிட்டார்கள்.

அன்றிலிருந்து அவ்வூர் மக்கள் சுவாமிகள் இறங்கிய கிணற்றை சுவாமிகளின் சமாதியாக பாவித்து வணங்கி வருகின்றனர். சித்தர் சென்றிரங்கிய கிணறு மூடப்பட்டுத் தூய அமைப்பில் விளங்குகிறது.கிணற்றின் மேல்தான் எல்லா அபிஷேகமும் நடக்கின்றது (எழுத்துக்கள் http://jnanabhoomi.blogspot.in சொந்தமானது).

24. திரு சிவ பிரகாச சுவாமிகள், நல்லாத்தூர்.

சிவப்பிரகாச சுவாமிகள், காஞ்சிபுரத்தில் இறைவன் திருவருளால் பிறந்தார். சிறுவயதிலேயே தந்தையை பறிகொடுத்துவிட்டதால் தனது தமையன் வேலாயுதம், கருணைப்பிரகாசம், தமக்கை ஞானாம்பிகை ஆகியோருடன் திருவண்ணாமலைக்கு வந்து சேர்ந்தார். தனது தந்தையின் குருவான குருதேவரை தரிசித்து. அவருடனே தங்கியிருந்து கல்வி கற்றார்.சிவஞானத்தில் பெருநிலை அடையப்பெற்ற குருதேவரிடம் தீட்சை பெற்றார். சதா சிவசிந்தனையிற் திளைத்திருந்தார், சுவாமிகள். திருவண்ணாமலை கிரிவலத்தின் பெருமையை தன் உள்ளுணர்வால் உணர்ந்து புறப்பட்டார்.

ஒவ்வொரு முறை வலம் வரும் பொழுதும் அருணாச்சலேஸ்வரர் மேல் பாடல் பாடி அன்றைய தினத்தில் 100 பாடல்கள் இயற்றினார். அதற்கு "சோண சைலமாலை" என்று பெயர். சுவாமிகள் மேலும் ஆழ்ந்த கல்வி பயில வேண்டும் என்ற ஆசையினால் தமது சகோதரர்களுடன் தென்னகப் பிரயாணம் தொடங்கினார். திருச்சிக்கருகில் உள்ள பெரம்பலூரில் இரண்டு ஆண்டுகள் தங்கியிருந்து சிவபூஜையை செய்து வந்தார். அங்கிருந்து திருநெல்வேலி வந்து தாமிரபரணி ஆற்றங்கரையருகில் உள்ள சிந்துபூத்துறைக்கு வந்து சேர்ந்தார்.அவ்வூரிலுள்ள தர்மபுர ஆதினத்து கட்டளை தம்பிரான் வெள்ளியம்பல சுவாமிகளுக்கு சீடனாக இருந்து கல்வி கற்க விரும்பினார். வெள்ளியம்பலவாணர் தருமை ஆதீனம் நான்காம் பட்டத்தில் விளங்கிய குருமகா சந்நிதானம் ஸ்ரீலஸ்ரீ மாசிலாமணி தேசிக பரமாச்சாரியாரிடம் சிவதீட்சை பெற்றவர், காசிக்கு சென்று

குமரகுருபரரிடம் கல்வி பயின்றவர். அத்தகைய இலக்கண இலக்கிய செம்மலிடம் மாணாக்கன் ஆவதைப் பெரும் பேறாகக் கருதினார் சிவப்பிரகாச சுவாமிகள். சிவப்பிரகாசரின் தமிழார்வத்தை அறிந்த முனிவர் அவரின் ஆற்றலை அறிய விரும்பி "கு" என்று தொடங்கி "கு" என்று முடித்து இடையே ஊருடையான் என்று வருமாறு நேரிசைவெண்பா ஒன்று பாடுமாறு ஆணையிட்டார். "**குடக்கோடு வானெயிறு கொண்டாற்குக் கேழல் முடக்கோடு முன்னமணி வாற்கு-வடக்கோடு தேருடையான் றெவ்வுக்குத் தில்லைதோன் மேற்கொள்ளல் ஊருடையான் என்னு முலகு**"

சுவாமிகளும் தயங்காமல் உடனே பாடிக் காட்டினார். வெண்பாவைக் கேட்டவுடன் சிவப்பிரகாசரின் ஆற்றலைக் கண்டு வெள்ளியம்பல சுவாமிகள் மிகுந்த வியப்புற்றார். அவரை அப்படியே ஆரத் தழுவிகொண்டார். "இத்தகைய ஆற்றல் படைத்த உமக்கா தமிழ் சொல்லித்தர வேண்டும்" என்று கேட்டார். வெள்ளியம்பல சுவாமிகள், சிவப்பிரகாசரை தன்னுடன் இருத்திக்கொண்டு சுவாமிகளின் சகோதரர்களாகிய வேலாயுத சுவாமிகள், கருணைப்பிரகாச சுவாமிகள் ஆகிய இருவருக்கும் பதினைந்து நாட்களில் ஐந்திலக்கணங்களையும் கற்றுக் கொடுத்தார்.



சிவப்பிரகாசரின் எண்ணம் நிறைவேறியது. மகிழ்ச்சியில் மலர்ந்தார். பெரம்பலூரில் தனக்கு காணிக்கையாக கொடுத்த முந்நூறு பொற்காசுகளை தனது குருவின் காலடியில் சமர்ப்பித்தார். வெள்ளியம்பல சுவாமிகளோ," இவை எமக்குவேண்டா, அதற்குப் பதிலாக திருச்செந்தூரில் எம்மை இகழ்ந்து பேசுதலையே இயல்பாக கொண்டு திரியும் ஒரு தமிழ்ப்புலவனின் அகங்காரத்தை ஒடுக்கி எம் கால்களில் விழச்செய்ய வேண்டும்" என்றார்.

குருவின் அவாவை நிறைவேற்றும் பொருட்டு திருச்செந்தூர் புறப்பட்டார். கோவிலினுள் எழுந்தருளியிருக்கும் முருகப் பெருமானை தரிசித்து விட்டு வலம் வந்தார். அப்பொழுது முனிவர் சொன்ன அப்புலவனைக் கண்டார். புலவனும், சுவாமிகளைக் கண்டு இவர் வெள்ளியம்பலசுவாமிகளிடமிருந்து வந்தவர் என்பதையறிந்து வசை மாறிபொழிந்தான். இருவருக்கும் விவாதம் முற்றியது. புலவன் சுவாமிகளை பந்தயத்திற்கு அழைத்தான். இருவரும் நீரோட்டகயமகம் பாடவேண்டும் என்றும் யார் முதலில் முப்பது பாடலை பாடி முடிக்கிறார்களோ அவரே ஜெயித்தவர் தோற்பவர் மற்றவர்க்கு அடிமையாக வேண்டும் என்றான்.
சிவப்பிரகாச சுவாமிகளும் சிறிதும் தயங்காது பாடி முடித்தார். ஆனால் புலவனால் ஒரு பாடல் கூட பாட முடியவில்லை வெட்கித்தலைகுனிந்து சுவாமிகளிடம் சரணடைந்தான். அதற்குச் சுவாமிகள் அடியேன் வெள்ளியம்பல சுவாமிகளின் அடிமை நீர் அவருக்கே அடிமையாதல் முறை என்று கூறி தம்குருநாதரிடம் அழைத்துச் சென்று அவருக்கேஅடிமையாக்கினார்.

வெள்ளியம்பல சுவாமிகள் அகங்காரம் கொண்ட புலவனின் அகந்தையை அடக்கி அவனுடைய கவனத்தைபரம் பொருளிடத்தே செலுத்த வைத்து "நல்வாழ்வு வாழ்ந்து வா" என்று கூறி அனுப்பி வைத்தார். குருநாதரிடம் பிரியாவிடை பெற்று தமது இளவல்களுடன் துறைமங்கலம் வந்து, பின்னர் அங்கிருந்து வாலிகண்டபுரத்தின் வடமேற்கு திசையிலுள்ள திருவெங்கையிலே சில காலம் தங்கி சிவபூஜை செய்துவந்தார். வள்ளல் அண்ணாமலை ரெட்டியார் கட்டி தந்த மடத்தில் தங்கியிருந்தவாறே திருவெங்கைக் கோவை, திருவெங்கைக்கலம்பகம், திருவெங்கையுலா, திருவெங்கை அலங்காரம் என்னும் நான்கு நூல்களைத் தந்தருளினார்.சிவப்பிரகாச சுவாமிகள், தமது உடன்பிறந்தவர்களுக்கு திருமணம் செய்து வைத்து அண்ணாமலை ரெட்டியாருடன் புனித பயணம் புறப்பட்டார்.

சிதம்பரத்திற்கு வந்து, அங்கு ஆத்ம சாதனையில் தீவிரமாக இறங்கினார். அங்கு சிவப்பிரகாச விசாகம், தருக்க பரிபாஷை, சதமணிமாலை, நான்மணி மாலை முதலிய நூலகளை செய்தருளினார். அங்கிருந்து திருக்காட்டுப்பள்ளிக்கு வந்து சிவபெருமானை தரிசனம் செய்து -சில காலம் தங்கியிருந்து விட்டு-பின்னர் காஞ்சிபுரத்திற்கு புறப்பட்டார்கள். வழியில் சாந்தலிங்க சுவாமிகளை கண்டு அளவளாவி மகிழ்ந்து,

அவருடன் சிவஞான பாலய சுவாமிகளை தரிசிக்க புதுவை வந்து, அங்கிருந்து பிரம்மபுரம் வந்து சேர்ந்தனர். சாந்தலிங்க சுவாமிகள், சிவஞான பாலைய சுவாமிகளின் பேராற்றலை, பெருமைகளை வானளாவ புகழ்ந்து கூறி, அவரைப் பற்றி ஒரு பா பாடுங்களேன் என்றார். அதற்கு சிவப்பிரகாச சுவாமிகள் இறைவனைத் துதிக்கும் நாவால் மனிதனை துதியேன் என்று கடுமையாக கூறி விட்டார்.

இருவரும் அருகிலுள்ள புத்துப்பட்டு ஐயனார் கோவிலின் பின்புறம் அன்றிரவு தங்கினர். சிவப்பிரகாச சுவாமிகளின் கனவில் முருகப் பெருமான் மயில் வாகனத்தோடு காட்சியளித்தார். நிறைய பூக்களை முருகப்பெருமான் சுவாமிகளிடம் கொடுத்து இவற்றை ஆரமாக தொடுத்து எமக்குச் சூட்டுவாய் என்றருளினார். காலையில் கண் விழித்ததும் சாந்தலிங்க சுவாமிகளிடம் கனவில் முருகப் பெருமான் வந்ததை தெரிவித்தார். சாந்தலிங்க சுவாமிகள், சிவஞான பலைய சுவாமிகளுக்கு, முருகப் பெருமான் குரு.அவர் மீது பேரன்பு கொண்டு பெரும் பூஜை செய்து வருகிறார் தேசிகர். சிவஞான பாலைய சுவாமிகளின் பெருமையை உணர்த்துவதற்காகவே முருகபெருமான் சிவப்பிரகாச சுவாமிகளின் கனவில் வந்து உணர்த்தியுள்ளார் என்று விளக்கினார்.மறுநாள் சிவஞான பாலைய சுவாமிகளை இருவரும் சந்தித்தனர். தாலாட்டு, நெஞ்சு விடு தூது என்ற இரு பிரபந்தங்களைப் பாடி தேசிகர் சன்னிதானத்தில் அரங்கேற்றினார் சிவப்பிரகாச சுவாமிகள்.



சிவஞான பாலைய சுவாமிகளும், சிவப்பிரகாச சுவாமிகளுக்கு ஞானாபதேசம் செய்தார். இருவரும் குருவின் சீடர்களானார்கள். சிவஞான பாலைய சுவாமிகளின் சொற்படியே தன் தமக்கையை சாந்தலிங்க சுவாமிகளுக்கு திருமணம் செய்து கொடுத்தார். தேசிகரிடம் விடைபெற்று, காஞ்சிபுரத்திற்கு வந்து கன்னட மொழியில் எழுதப்பட்ட விவேக சிந்தாமணி என்னும் நூலின் ஒரு பகுதியை தமிழில் வேதாந்த சூடாமணி என்று மொழிபெயர்த்தார். மேலும் சித்தாந்த சிகாமணி, பிரபுலிங்கலீலை என்ற நூல்களை எழுதினார். திருப்பள்ளியெழுச்சி, பிள்ளைத்தமிழ் என்ற இரண்டு நூல்களை தன் ஞானாசிரியர் மேல் பாடினார். காஞ்சிபுரத்தை விட்டு புறப்பட்டு கூவம் என்னும் சிவத்தலத்தை அடைந்து திருக்கூவப்புராணம் பாடி அருளினார்.

அங்கிருந்து புறப்பட்டு பொம்மையாபாளையத்திற்கு வந்து தன் ஞானாசிரியரை தரிசித்து லிங்கதத்துவம், அனுபவம், ஈசனின் உறைவிடம் அவத்தைகள் போன்ற நுணுக்கமான தத்துவ விஷயங்களை தெரிந்து கொண்டார். பின்னர் விருத்தாசலம் புறப்பட்டார். சிவஞான பாலைய சுவாமிகள் இறைவனோடு கலந்த செய்தியை கேள்விப்பட்டு மறுபடி பிரம்மபுரத்திற்கு வந்தடைந்தார். குருவின் சந்நிதானத்தில் வீழ்ந்து, அழுது புலம்பினார். தம் குருவின் மீதிருந்த அளவற்ற அன்பினால் பலமுறை வீழ்ந்து வீழ்ந்து வணங்கினார். பொம்மையார்பாளைய கடலோரத்தில் அமர்ந்து மணலிலே "நன்னெறி" வெண்பா நாற்பதையும் தன் விரலால் எழுத, அங்குள்ளோர் அதை எழுதிக் கொண்டனர். காலம் வேகமாக சென்றது. பிரம்மபுரத்திலிருந்து புறப்பட்டு புதுவை வந்து சிவதலங்களை வணங்கி விட்டு, நல்லாத்தூர் வந்து சேர்ந்தார்.

அது ஒரு சிற்றூர்.எங்கு பார்த்தாலும் நுணா மரங்களும், கள்ளிக்காடுகளுமாக இருந்தது. அவ்வூரில் ஒரு சிவன் கோவிலும் இருந்தது. அக்கோயிலின் அருகே உள்ள நுணா மரத்தின் கீழ் அமர்ந்து தன் தவத்தை மேற்கொண்டார். அதிகாலையில் எழுந்து நல்லாற்றிலிருந்து புறப்பட்டு வில்லியனூர் அருகே ஓடும் அற்றில் நீராடுவார்.அங்குள்ள வில்வ இலைகளை சிவபெருமான் பூஜைக்காக பறித்துக் கொண்டு, நல்லாற்றூருக்கு அதிகாலையிலேயே சென்று விடுவார்.

அங்கு இவ்வாறு இருக்கும் பொழுது, சிவஞான மகிமையும் அபிஷேக மாலையும் நெடுங்கழி நெடிலும், குறுங்கழி நெடிலும், நிரஞ்சன மாலையும், கைத்தலமாலையும் சீகாளத்திப்புராணத்தில் கண்ணப்பச் சருக்கமும், நக்கீரச்சருக்கமும் எழுதினார். பல ஆண்டுகள் ஆழ்ந்த தவத்தில் ஈடுபட்டிருந்தார்.தவம் முடிந்தது. தவ சித்தி பெற்றார்.சுவாமிகளின் பூஜைகள் பலிக்கத் தொடங்கின. அவருக்கு முப்பத்திரண்டு

வயது வந்தது. தாம் சிவமாகும் காலம் வந்ததை உணர்ந்தார். புரட்டாசி மாதம் பௌர்னமி திதியில் பரம்பொருளோடு ஐக்கியமானார்.

எங்கு சுவாமிகள் சித்தி அடைந்தாரோ அங்கேயே சுவாமிகளை சமாதி வைப்பதற்காக அங்குள்ள நுணா மரம் வெட்டப் பட்டது. அந்த நுணா மரத்தின் கீழ் தான் சுவாமிகள் தவம் செய்வது வழக்கம். வெட்டப் பட்ட நுணா மரத்தை அங்குள்ள ஒரு வீட்டில் கொண்டு போய் போட்டார்கள். அக்கணமே அந்நுணா மரம் எரிந்து சாம்பலாகியது. ஆனால் வீட்டிலிருந்த வேறு எந்தவொரு பொருளையும் அந்நெருப்பு தீண்டவில்லை.சுவாமிகளின் காலம் 17-ம் நூற்றாண்டாகும். சுவாமிகள் வாழ்ந்தது 32 ஆண்டுகள்.சுவாமிகளின் நூல்களிலே ஆழ்ந்த சைவ சித்தாந்தக் கருத்துக்கள்,தெளிவான உயிர்நிலைத் தத்துவங்கள், மெய்ப் பொருளைக்காட்டுகின்ற விரிவான தர்க்க பாஷை யாவும் மலை போல் குவிந்துள்ளன.முப்பத்திரண்டு வயதில் முப்பத்திரண்டு தெய்வீகத் தத்துவங்களை செந்தமிழில் தந்தருளியவர் ஓம் ஸ்ரீ சிவப்பிரகாச சுவாமிகள் (எழுத்துக்கள் http://sathyasenthil77.blogspot.in/2012/10/blog-post_4470.html சொந்தமானது).

25. மகான் படேசாயுபு சுவாமிகள், கண்டமங்கலம்.

விழுப்புரதிலிருந்து புதுவை செல்லும் 20 கிலோமீட்டர் தொலைவில் கண்டமங்கலம் ரயில்வே கேட் உள்ளது. இதன் இடது புறத்தில் 2 கீ.மீ தொலைவில் சின்னபாபு சமுத்திரம் என்னும் சிற்றூர் உள்ளது. இங்கு மஹா சித்த புருஷரான ஸ்ரீ படே சாஹிப் சுவாமிகளின் ஜீவ சமாதி அமைந்துள்ளது. அனைத்து மக்களுக்கும் தன் ஜீவ சமாதியில் இருந்து அருள் வழங்கி கொண்டிருக்கும் அற்புத ஆற்றல் படைத்த சித்தர் இவர்.

எத்தனையோ மகான்கள் இம்மண்ணில் அவதரித்து மக்களின் நலன் ஒன்றையே தமது குறிக்கோளாகக் கொண்டு உழைத்திருக்கின்றனர். தம்மை நாடி வரும் மக்களின் வல்வினைகளைப் போக்கி வாழ்வு சிறக்க வகை செய்திருக்கின்றனர். அப்படிப்பட்ட மகான்களில் ஒருவர் சிவ ஸ்ரீ படே சாகிப். பிறப்பால் இஸ்லாமியராகக் கருதப்படும் இம்மகானின் புனித வராலாறு மதம் கடந்து மனிதம் போற்றுவதாய் உள்ளது.


நதிமூலம் ரிஷிமூலம் பார்க்கக் கூடாது என்பார்கள். அது போல இம்மகான் எங்கு, எப்போது தோன்றினார் என்பது குறித்து சரிவர அறிய இயலவில்லை. ஆனால் பல வெளிநாடுகளில் வசித்து பின்னர் இந்தியா நோக்கி, குறிப்பாக தமிழகத்தை நோக்கி வந்து வாழ்க்கை நடத்தியவர் என்பது தெரிகிறது. தமிழகத்தில் சில காலம் வசித்தவர் பின்னர் புதுச்சேரிக்குச் சென்று வசித்தார்.

நடுத்தர உயரம். சிவந்த நிறம். தலையில் ஒரு குல்லா. இடுப்பில் ஒரு அரையாடை. அருள் பொங்கும் முகம். கருணை ததும்பும் விழிகள். சதா ஏதேனும் மந்திரங்களை முணுமுணுத்துக் கொண்டிருக்கும் வாய் என அவரது தோற்றம் மக்களுக்கு வியப்பைத் தந்தது. மகானோ மகா மௌனியாய் விளங்கினார். யாரிடமும் எதுவும் பேசமாட்டார். அவரது விழி நோக்கமே அவரை நாடி வருபவர்களுக்கு அரு மருந்தாய் விளங்கியது. தம்மை நாடி வருபவர்களின் நோய் நொடிகளைத் தீர்ப்பதில் மகான் தன்னிகரற்று விளங்கினார். விபூதி கொடுத்தே பலரது நோய்களைக் குணமாக்கினார்.

சின்னபாபு சமுத்திரத்தில் இருக்கும் மகான் அவ்வப்போது அருகில் உள்ள திருக்கனூருக்குச் செல்வார். சில சமயங்களில் மகான் எங்கு இருக்கிறார், என்ன செய்து கொண்டிருக்கிறார் என்பது கூட யாருக்கும் தெரியாது. திருக்கனூரில் இருக்க மாட்டார். சின்னபாபு சமுத்திரத்திலும் இருக்க மாட்டார். சூட்சும உடலில் உலவிக் கொண்டிருப்பார். பல்வேறு சித்துக்கள் கைவரப் பெற்ற இவர், ஒரே சமயத்தில் பல்வேறு இடங்களில் காட்சி அளித்துள்ளார்.

ஒரு பெரிய ஆலமரத்தின் அடியில் அமர்ந்திருப்பார். அருகில் ஒரு மண் கலயமும், சிறு பானை மற்றும் கொட்டாங்குச்சிகளும் இருக்கும். அதில் சில பச்சிலைகளும், புனித நீரும் இருக்கும். தம்மை நாடி வருபவரின் குறைகளை செவிமடுத்துக் கேட்பார். சிலரை அருகே உள்ள மகிழ மரத்தை அப்பிரத்ட்சணமாகச் சுற்றி வரும் படி சாடையாகக் கூறுவார். அவ்வாறு அவர்கள் சுற்றி வந்ததும் அவர்களின் கண்களையே உற்றுப் பார்ப்பார். சிலர் அந்த கருணை விழிகளின் தீட்சண்யம் தாங்காது மயங்கி விழுவர். சிறிது நேரத்தில் விழித்து எழுந்ததும் தமது நோய் முற்றிலுமாக நீங்கி இருப்பதை அறிந்து மகானை வணங்கி மகிழ்வர். சிலர் மகானை வணங்கி விபூதிப் பிரசாதம் பெற்று அணிந்ததுமே தமது நோய் நீங்கியதை அறிந்து மகானைத்

தொழுவர். மற்றும் சிலருக்கு மகான் தன் கையால் ஒரு சிறு கொட்டாங்குச்சியில் நீரை அளிப்பார். அதை அருந்தியதுமே அவர்களைப் பீடித்திருந்த நோய்கள் விலகி விடும். குறைகள் அகன்று விடும். சிலருக்கு தமது கைகளால் தீண்டி ஆசிர்வதிப்பார். சிலருக்கு தாம் இமயமலைக் காடுகளில் சுற்றித் திரிந்த போது கண்டறிந்த பச்சிலைகளை அளித்து நோய் தீர்ப்பார். இவ்வாறு பலதரப்பட்ட மக்களின் நோயினை நீக்கும் ஒரு மகாபுருஷராக மகான் சிவஸ்ரீ படே சாகிப் விளங்கி வந்தார்.



'சாஹிப்' என்றால் உயர்ந்தவர் என்பது பொருள். 'படே' என்றால் பெரிய என்பது பொருள். தன் பெயருக்கேற்றவாறி மிகப் பெரிய சித்தயோகியாக, தவ புருஷராக விளங்கி வந்தார் சிவ ஸ்ரீ படே சாஹிப். சிவ ஸ்ரீ என்னும் அடைமொழிக்கேற்ப, இமயமலையில் தாம் தவம் செய்து கொண்டிருந்த காலத்தில் பல ஆண்டுகளாக, பல அடிகள் ஆழத்தில் புதைந்திருந்த உளி படாத "நிஷ்டதார்யம்" என்னும் கல்லை தனது ஆழ்நிலை தியானத்தின் மூலம் கண்டறிந்து, அதனை இறையருளால் வெளிக் கொணர்ந்து அழகிய லிங்கமாக உருவாக்கி, தம்மை நாடி வரும் மக்கள் வழிபடுவதற்காக, தாம் வசித்த இடத்திற்கு அருகிலேயே அருணாசலேஸ்வரர் ஆலயமாகப் பிரதிஷ்டை செய்தார். ஒருமுறை கட்டிலோடு ஒரு சிறுவனை நான்கு அன்பர்கள் வேகவேகமாக தூக்கிக் கொண்டு வந்தனர். மகானின் அருகே வந்ததும் கட்டிலை இறக்க முற்பட்டனர். அவ்வளவுதான் மகான் மிகுந்த சீற்றத்துடன் அருகில் உள்ள ஒரு கம்பினை எடுத்து வந்தவர்களை விரட்டத் தொடங்கினார். அவர்களும் பயந்து போய் கட்டிலை அப்படியே போட்டு விட்டு ஓட்டம் பிடித்தனர். கட்டிலில் படுத்திருந்த சிறுவனும் பயந்து போய் மகானிடமிருந்து தன்னைக் காப்பாற்றிக் கொள்ள எழுந்து வேகமாக ஓட ஆரம்பித்தான். மகானும் வேக வேகமாக அவனைத் துரத்த, அவனும் வேக வேகமாக ஓட ஆரம்பித்தான். உடனே மகான் அமைதியாக அருகில் உள்ள மரத்தடியில் அமர்ந்து விட்டார்.

மகான் ஏன் இப்படிச் செய்தார் என்று புரியாமல் ஓடிக் கொண்டே திரும்பிப் பார்த்தவர்கள், தங்களைத் தொடர்ந்து கட்டிலில் தூக்கி வந்த சிறுவனும் ஓடி வருவது கண்டு ஆச்சர்யம் கொண்டனர். அளவற்ற மகிழ்ச்சி அடைந்தனர். காரணம், பிறந்தது முதல் இதுநாள் வரை நடக்கவே நடக்காத, கால்கள் செயலிழந்த சிறுவன் அவன். அவனைக் குணப்படுத்தவே அவர்கள் மகானிடம் அவனைத் தூக்கிக் கொண்டு வந்தனர். தங்களிடம் கோபப்படுவது போல் நடித்து சிறுவனின் குறையைப் போக்கிய மகானின் கால்களில் வீழ்ந்து அனைவரும் வணங்கினர் மகானோ ஏதும் அறியாதவர் போல் எங்கேயோ பார்த்துக் கொண்டு மரத்தடியில் அமைதியாக வீற்றிருந்தார்.

இவ்வாறு பற்பல அற்புதங்களை நிகழ்த்தி மக்களுக்கு பல்வேறு நன்மைகள் புரிந்த மகானின் ஜீவ சமாதி விழுப்புரம் - பாண்டிச்சேரி சாலையில் சின்னபாபு சமுத்திரம் அருகே அமைந்துள்ளது. வியாழக்கிழமை தோறும் இந்து, இஸ்லாமிய மக்கள் இங்கே திரளாக வந்து வழிபடுகின்றனர். மனநோய், செய்வினை, ஏவல் கோளாறுகள் போன்றவை நீங்கும் தலம் என ஆலய அறிவிப்பு தெரிவிக்கின்றறது. இது இந்துசமய அறநிலையத் துறையின் கட்டுப்பாட்டில் உள்ள சமாதி ஆலயம் என்பது குறிப்பிடத்தக்கது. அவர் ஜீவ சமாதி ஆனது கி.பி. 1868-ஆம் வருடம் பிப்ரவரி மாதம் 12-ஆம் தேதி என்கிற குறிப்பு இருக்கிறது. (எழுத்துக்கள் https://ramanans.wordpress.com/2014/10/20/%E0%AE%9A%E0%AE%BF%E0%AE%A4%E0%AF%8D%E0%AE%A4%E0%AE%AF%E0%AF%8B%E0%AE%95%E0%AE%BF-%E0%AE%9A%E0%AE%BF%E0%AE%B5%E0%AE%B8%E0%AF%8D%E0%AE%B0%E0%AF%80-%E0%AE%AA%E0%AE%9F%E0%AF%87-%E0%AE%9A%E0%AE%BE/ சொந்தமானது).

26.ஸ்ரீ அம்பலத்தாடி சுவாமிகள் (சமாதி - விபூதி லிங்கம்), ஏம்பலம்.

தமிழ்நாட்டில் அப்பர் சுவாமிகள் போல் உழவாரம் மூலம் சைவம் வளர்த்த எழு சித்தர்கள் இருந்தனர். அவர்கள் 1) நல்லம்பல அப்பார் 2) சிற்றம்பல அப்பார் 3) பேரம்பல அப்பார் 4) திருவம்பல அப்பார் 5) பொன்னம்பல அப்பார் 6) அம்பலத்தாடும் அப்பார் 7) ஆடிய பாத அப்பார். ஒரு நாள் சிவபெருமான் இவர்கள்

கனவில் தோன்றி " சிதம்பரத்தில் ஸ்ரீ பாத பூஜை அம்பலத்தாடும் சுவாமிகள் இருக்கிறார்கள்; நீங்கள் சென்று அவரிடம் சிவ தீட்சை பெற்று சிவ நீறி பரப்பி என்றும் பிறவா நிலையை பெறுக" என்று கூறி மறைந்தார்.



சிவபெருமான் கூறியது போல, ஸ்ரீ பாத பூஜை அம்பலத்தாடும் சுவாமிகள் சந்தித்து, தொழுது நின்றனர். அவர்களுக்கு அனுஷ்டானம் செய்து, சிவலிங்க தாரணமும் செய்து இஷ்ட லிங்கமொன்றை எழுந்தருள செய்தார். அவர்கள் சுவாமிகளுக்கு சீடர்கள் ஆகி தொண்டு செய்து வந்தனர். சில காலங்களுக்கு பிறகு ஈசன் கட்டளை படி, நாட்டின் பல பகுதிகளுக்கு செல்ல தீர்மானித்தனர்.

- நல்லம்பல அப்பார் - ஷட் ஸ்தல ஞானம் பெற்றவர். ஸ்ரீசைலத்தில் தொண்டு செய்து அங்கேயே சமாதி அடைந்தார். இவரது சமாதி ஸ்ரீ சைலம் சிவாலயத்தில் நல்லம்பல அப்பார் குகை என்ற பெயருடன் விளங்கி வருகிறது.
- சிற்றம்பல அப்பார் - இவர் பல வெளிநாடுகளுக்கு சென்று கடைசியில் புதுவை திருபுவனை என்னும் ஊரில் சிவ பணி செய்து சமாதி அடைந்தார். இங்கு அவர் பல்லி வடிவில் இருந்து மக்களுக்கு நிமித்தம் கூறுவதாகவும், அது பலிப்பதாகவும் நம்பப்படுகிறது.
- பேரம்பல அப்பார் - பல இடங்களில் சிவ சேவை செய்து கடைசியாக நாகப்பட்டினம் வந்து சேர்ந்தார். அங்கே பல பல அற்புதங்கள் செய்து ஜீவ சமாதி அடைந்தார். அவருடைய சமாதி நகையில் பேரம்பல அப்பார் சன்னதி என்று பெயருடன் விளங்குகிறது.
- திருவம்பல அப்பார் & பொன்னம்பல அப்பார் - இருவரும் ஒன்றாக பல இடங்களுக்கு சென்று தங்கள் சிவ தொண்டினை செய்து வந்தனர். புதுச்சேரி அடுத்துள்ள திருவகிந்தபுரதிற்கு வந்து சேவை செய்து பரிபூரண நிலை அடைந்தனர். இவர்கள் சமாதி அப்பார் சன்னதி என்றும், உப்பு மடம் என்றும் வழங்கப்பட்டு வருகிறது.
- அம்பலத்தாடும் அப்பார் & ஆடியபாத அப்பார் - இவர்கள் இருவரும் ஒன்றாக பல இடங்களுக்கு சென்று சிவ தொண்டு புரிந்து கடைசியில் புதுவை எம்பலம் வந்து சேர்ந்தனர். இப்பகுதியை ஆண்ட மன்னன், ஆட்சியை தன் அமைச்சர்களிடம் விட்டு விட்டு காசிக்கு போய் இறைவனை தரிசிக்க விரும்பினான். அவன் கனவில் தோன்றிய இறைவன் " உன்னை போன்று இருவர் காசி செல்லும் நோக்கத்துடன் இங்கு வருவர், அவர்களுக்கு மடம் அமைத்து தொண்டு புரிந்து வா, காசி சென்று வந்த புண்ணியம் கிட்டும் " என்றார். அதே போன்று மன்னன் செய்து தொண்டு புரிந்து வந்தான்.

மடம் கட்டும் வேலை ஆட்களுக்கு வீபூதியை கூலியாக கொடுத்து வந்துள்ளனர். அவர்கள் அதை வீட்டிற்கு எடுத்து சென்று பார்க்கும் பொழுது, அது அவர்களுக்கு ஏற்ற ஊதியமாக மாறி இருக்கும். சித்தர்கள் இங்கேயே தங்கி மக்களுக்கும், மகேசனுக்கும் தொண்டு புரிந்து வந்தனர். பல வருடங்களுக்கு பிறகு, ஆடிய பாத சித்தர் பரிபூரண சமாதி நிலையை அடைந்தார். அவரது விருப்பப்படி எம்பலம் மேற்கே உள்ள அரசமரத்தடியில் அமைக்க ஏற்பாடு செய்த பொது, அங்கு அய்யனார் கோயில் இருப்பது கண்டு சமாதி காரியங்களை நிறுத்தினர்.

அம்பலத்தாடும் அப்பார் கனவில் தோன்றிய ஆடியபாத அப்பார், “எனது சமாதி இறைவனால் கட்டப்பட்டது, நாம் இருவரும் அவரின் மைந்தர்கள்! அப்படி இருக்க ஏன் தயக்கம்? இங்கேயே சமாதி அமையுங்கள்" என்றார். அவ்வாரே அவரது சமாதி அமைக்கபட்டது. அம்பலத்தாடும் அப்பார் மட்டும் மேலும் சில காலம் தொண்டு செய்து வந்தார். தான் சமாதி அடையும் நாள் நெருங்குவதை உணர்த்த சித்தர், 18 நாட்கள் பூஜை செய்து பக்தர்களை அழைத்து குரு பூஜை செய்யும் முறை பற்றியும், பூஜை அன்று நடு பகலில் மகேஸ்வர பூஜை சிறப்பாக நடைபெறும் என்று கூறி நிஷ்டையில் அமர்ந்தார். அத்தருணத்தில் ஒரு அதிசயம் நிகழ்ந்தது. அவர் சமாதி அடையும் நேரத்தில் சிதம்பரத்தில் உள்ள குருவின் பாதத்தில் இந்த அம்பலத்தாடும் அப்பார் சித்தர் வணங்கி அவருடன் ஒன்றிய அற்புதத்தை மக்கள் அனைவரும் பார்த்து வியந்தனர். குருநாதர், விபூதியை மந்திரித்து கொடுத்து அனுப்பினர். அந்த விபூதியியே லிங்கமாக பிரதிஷ்டை செய்து சமாதியை கட்டினார்கள். அவர் சமாதி அடைந்த புரட்டாசி மாசம் 15ஆம் தேதி குரு பூசையும் மகேஷ்வர பூசையும்

விமர்சையாக நடந்து வருகிறது. இந்த சமாதியில் இருந்து சிதம்பரத்திற்கு ஒரு சுரங்க பாதை செல்கிறது என்றும் அங்கிருந்து குருவானவர் குரு பூசை அன்று வந்து செல்கிறார் என்றும் கூற படுகிறது. இன்று அவை அனைத்தும் அழிந்து போய்விட்டது - சமாதி மட்டும் இருகின்றது (**பொழிப்புரை** - புத்தகம் -ஸ்ரீ இந்து பப்ளிகேஷன்ஸ் வெளியிட்டில் கானமஞ்சரி சம்பத்குமார் அவர்கள் எழுதிய "சித்தமெல்லாம் நிறைந்த சித்தர்கள்").

27. குண்டலினி சித்தர், அருள்மிகு சந்திரமவுலீஸ்வரர் திருக்கோயில், திருவக்கரை.



மயிலத்தை அடுத்த திருவக்கரை வக்கிரகாளி கோவிலில் சந்திரமவுலீஸ்வரர் சன்னதியின் இடப்புறம் ஜீவசமாதி அமைந்திருக்கிறது. குண்டலினி சித்தர் சமாதி அடைந்த இடத்தில் ஒரு லிங்கம் இருக்கிறது. இவரை பற்றிய தகவல் எதுவும் கிடைக்கவில்லை. கிடைத்தால் esanoruvanae@gmail.com அனுப்பி வைக்கவும்.

28. ஸ்ரீ சிவஞான பால சித்தர் சுவாமிகள், மைலம்.


திருக்கயிலையில் சிவபெருமானுக்கு மேற்குத் திசைக் காவலராக விளங்கிய பூதகணங்களுள் ஒருவர் சங்குகன்னர் என்பவர் ஆவார். ஒருமுறை அவர் செய்த ஒரு தவறுக்காக சிவபெருமான் அவரை சபித்து விட்டார். அதனால் மனம் வருந்தி சிவபெருமானிடம் மன்னிப்புக் கேட்ட சங்குகன்னர் தனக்கு சாப விமோசனம் கிடைக்க தக்க வழி கூறுமாறு சிவபெருமானிடமே கேட்டார். அதற்கு அவர் 'தென்னாட்டில் வீரசைவ நெறியை வளர்த்து சித்தர் பெருமைகளை பரப்பி வந்தால் உமக்கு சாப விமோசனம் கிடைக்கும்!' என்று சிவபெருமான் அருள் புரிந்தார். அதற்கு சங்குகன்னர் சம்மதித்தாலும் சிவபெருமானிடம் இன்னொரு வேண்டுகோளையும் வைத்தார். அது என்ன என்றால் 'கைலாய மலையின் தென் புறப்பகுதிக்கு காவலாக இருந்து கொண்டு சிவபெருமானின் அருகிலேயே எப்படி தான் அத்தனை நாளும் இருந்தேனோ அதே போன்ற நெருக்கமான நிலை தான் பூமிக்குச் சென்றாலும் கிடைக்க வேண்டும். அங்கும் சிவபெருமானுடன் தனக்கு நெருக்கமான உறவு இருக்க வேண்டும்' என வேண்டிக் கொண்டார். அவரது வேண்டுகோளை ஏற்றுக் கொண்ட சிவபெருமானும் தக்க நேரத்தில் தன்னுடைய குடும்பத்தினரான முருகனின் மூலம் சங்குகன்னர் விரும்பியது நிறைவேறும் என்றும் அந்த நேரம் வரும்போது முருகப் பெருமான் அவர் முன் தோன்றி அவருக்கு அருள் புரியும்போது சங்குகன்னர் சிவயோக சமாதியை அடைந்து சிவலிங்கமாகி தன்னுடன் ஐக்கியம் ஆகிவிடுவார் என்றும் கூறி அருள் புரிந்தார்.

ஒரு தாயின் வயிற்றில் கருவாகி பிறக்க விரும்பாமல் நேரடியாக பூமியில் அவதரிக்க முடிவு செய்தார். அதன்படி அவர் வீர சைவர்கள் பெரும்பாலும் அணியும் ஆன்மீக சின்னமான இஷ்ட லிங்கம் ஒன்றை கழுத்தில் அணிந்து கொண்டு, ருத்திராக்ஷமும் போட்டுக் கொண்டு, நெற்றியில் திருநீறு பூசி, காதுகளில் குண்டலங்கள் மினுமினுக்க, ஜடா முடியுடன் சிவப்பழமாக புதுச்சேரி கடற்கரைக்குச் சென்று அங்கு தன்னை பலரும் காணும் வகையில் பத்து வயது சிறுவன் உருவத்தில் கடற்கரையில் நின்று கொண்டார். சுருங்கக் கூறினால் கைலாய மலையில் இருந்து வந்திறங்கி மானிட உருவில் அங்கே ஒரு அவதார தோற்றம் தந்தார். அவரை பார்த்தவர்கள் எங்கிருந்தோ அங்கு வந்துள்ள ஒரு சித்த புருஷராகவே அவரைக் கருதினார்கள். அவர் ஒரு சிவகணம் என்பது யாருக்கும் தெரியாது.

அங்கு வந்து இறங்கியவர் ஊருக்குள் சென்றார். அவர்களை தெய்வீக அம்சம் நிறைந்தவர்களாகப் பார்த்து அவர்களுடைய ஆசிகளைப் பெறுவதையே முக்கிய நோக்கமாகக் கொண்டு இருப்பார்கள். இப்படியாக கடற்கரைப் பகுதியில் வந்து தோற்றம் தந்தவர் ஊருக்குள் சென்று அங்கு இடமிடமாக தங்கி இருந்தவாறு சிவபெருமான் தனக்கு ஆணையிட்டது போலவே சிவநெறியை போதித்து வளர்க்கலானார். சென்ற இடங்களில் எல்லாம் அகமநெறி முறைகளை விளக்கினார். இடையிடையே பல ஆச்சர்யப்படும் அளவிலான சித்துக்களையும் அவ்வப்போது செய்து காட்டியவண்ணமும் இருந்தார். பத்து வயது நிரம்பிய பாலகனாக

சங்குகன்னர் காட்சியளித்ததால், மக்கள் அவரை பால சித்தர் என்றும், மக்களுக்கு சிவஞானத்தை போதித்து சிவஞான அறிவை வளர்த்து வந்ததினால் அவரை சிவஞான பால சித்தர் என்றும் பாலய சித்தர் என்றும் அழைத்தனர். சூரபத்ம யுத்தம் நடைபெற்றபோது சூரபத்மன் முருகப் பெருமானால் இரண்டாக பிளக்கப்பட்டு மரணம் அடைந்தான். மரணம் அடையும் தருவாயில் முருகனிடம் அவன் 'நான் உமக்கு மயில் வாகனமாக அமைய வேண்டும்' என வேண்டிக் கொண்டான். ஆகவே அவனிடம் நீ பொம்மபுரத்துக்கு மேற்கே உள்ள மயிலத்தில் மயில் உருவத்தில் ஒரு மலையாக இருந்தபடி என்னை நினைத்து தவம் புரிந்தால் உன்னை என்னுடைய மயில் வாகனமாக மாற்றிக் கொள்வேன் என்று முருகன் உறுதி கொடுத்தார். ஆகவே சூரபத்மனின் ஆத்மாவும் மயிலத்துக்குச் சென்று அங்கு மயில் உருவில் ஒரு மலையாக மாறி இருந்தபடி முருகனை வேண்டிக் கொண்டு கடும் தவத்தில் இருந்தது. சூரபத்மனின் கடும் தவத்தைக் கண்டு மனம் மகிழ்ந்த முருகனும் அவனை தனது மயில் வாஹனமாக ஏற்றுக் கொண்டார். அப்போது அவனுக்கு தோற்றம் தந்த முருகனிடம் சூரபத்மன் தான் மயிலாக இருந்த மலையில் முருகன் தனது மனைவிகளோடு நிலையாக இருக்க வேண்டும் என இன்னொரு வேண்டுகோளை வைக்க, முருகனும் தக்க நேரத்தில் அவனுடைய ஆசையை நிறைவேற்றுவதாக உறுதி அளித்து இருந்தார்.

காலம் கடந்தது. அப்போது முருகனின் வாக்கு பலிதம் ஆகும் நேரமும் வந்தது. ஆனால் அதே சமயத்தில் அந்த காரியமும் சிவகணமான சங்குகன்னர் பூமியிலே சிவஞான பாலசித்தராக அவதரிக்கும் நேரத்தில் நடக்க வேண்டும் என்பதை உணர்ந்திருந்த நாரதர் உடனடியாகக் கிளம்பி பால சித்தரிடம் சென்றார். பாலசித்தர் முன் தோன்றிய நாரதரும் பாலசித்தருக்கு சூரபத்ம யுத்தம் குறித்த கதையினை விவரமாகக் கூறிய பின்னர் மயிலத்தில் சூரபத்மன் மயில் உருவில் இருந்த மலை மீது சென்று அங்கு தவம் இருந்தால் சாபம் நீங்கி சிவனருள் பெற முடியும் என்று கூறி விட்டு அங்கிருந்துக் கிளம்பிச் சென்றார்.



அதைக் கேட்ட சிவஞான பாலசித்தரும் சிவபெருமான் தனக்குக் கொடுத்திருந்த அருள்வாக்கை பெற்றிடும் நேரம் வந்துவிட்டதை உணர்ந்து கொண்டு, உடனடியாக மயிலம் மலைக்கு அருகில் சென்று அங்கிருந்த சுனைகளில் நீராடிய பின்னர் பத்மாசனத்தில் அமர்ந்து கொண்டு சுமார் முப்பத்தி ஐந்து வருடங்கள் தவத்தில் இருந்தார். அவ்வளவு காலம் தவம் புரிந்தும் முருகப் பெருமான் தமக்கு அருள் புரியவில்லை என்பதினால் தவத்தை மேலும் கடுமையாக்கும் விதத்தில் பஞ்சாக்கினி எனும் நெருப்பு குண்டத்தில் இருந்தபடி தவம் இருந்தார். அப்போதும் முருகனின் அருள் அவருக்குக் கிடைக்கவில்லை. அதற்கு வேறு காரணம் இருந்ததை அவர் உணர்ந்திருக்கவில்லை. ஆகவே இனி முருகனை வேண்டுவதை விட அவரது மனைவிகளை வேண்டிக் கொண்டு தவம் இருக்கலாம் என முடிவு செய்த சிவஞான பாலசித்தர் அந்த தேவியர் இருவரையும் வேண்டி கடுமையான தவம் புரிந்தார். அவரது தவத்தின் நேர்மையைக் கண்ட முருகனின் மனைவிகளான தெய்வானை மற்றும் வள்ளி என்ற இருவரும் முருகனிடம் சென்று பால சித்தருக்கு அருள் புரியுமாறு வேண்டிக் கொண்டார்கள். முருகப் பெருமான் சங்குகன்னன் ஒரு சிவ அபராதி எனச் சொல்லி, அவருக்கு தரிசனம் தர மறுத்தார். அதற்கும் ஒரு காரணம் இருந்தது.

முருகனோ தன்னுடைய மனைவிகள் இருவரும் இந்த விஷயத்தில் தலையிடுவதை விரும்பாதது போல பாசாங்கு செய்து விட்டு அவர்களை தன் விருப்பத்துக்கு மாறாக அவர்கள் தம்மை நிர்பந்திப்பதினால் அவர்களுடன் வாழ்வதற்கு விருப்பம் இல்லை என்றும், ஆகவே இனி தன்னை விட்டு விலகிப் போய் விடுமாறு கோபத்துடன் கூறினார். அப்போதுதான் அவர் சிவஞான பாலசித்தரின் சாப விமோசனத்துக்கான நடவடிக்கைகளை விதிப்படி எடுக்க முடியும் என்பதே அதற்கான உண்மையான காரணம். முருகன் தன்னை விட்டு விலகிச் சென்று விடுமாறு தெய்வானை மற்றும் வள்ளியிடம் கூறியதும் அவர்களும் பதிலுக்கு கோபமடைந்தார்கள். ஒரு பக்தரின் உண்மையான தவத்திற்கு மதிப்புத் தராமல் பாராமுகமாக முருகன் இருந்ததை அவர்களால் ஏற்க முடியவில்லை. ஆகவே அவர்கள் கோபத்துடன் அங்கிருந்து கிளம்பி மானிட உருவெடுத்து தம்மை வேண்டிக் கொண்டிருந்த பாலசித்தரிடம் சென்று விட்டார்கள். அவரிடம் தாம் தேவலோகத்தை சேர்ந்தவர்கள் என்றும் தம் இருவரையும் அவருடைய மகள்களாக ஏற்றுக் கொண்டு தம்மை பாதுகாத்து வர வேண்டும் என்று வேண்டினார்கள். ஆனால் உண்மையில் தாம் யார் என்று கூறவில்லை. வந்துள்ளவர்கள் தெய்வ கன்னிகைகள் என்ற அளவில் அறிந்து

கொண்டார் சிவஞான பாலசித்தர். ஆனால் அவர்கள் வள்ளி மற்றும் தெய்வானை என்பதை அவரால் அறிந்து கொள்ள முடியவில்லை என்பதும் விதியின் விளைவாகவே இருந்தது.

அது போலவே தன் மூலம் சாபம் விலகிய சிவஞான பாலசித்தரையும் இன்னும் ஐநூற்றாண்டு காலம் அங்கேயே தங்கி இருந்து கொண்டு வீர சைவ சித்த நெறியையும் பக்தி மார்கத்தையும் பரப்பிக் கொண்டும், சித்த முனிவர்களுக்கு வழிகாட்டிக் கொண்டும் இருக்குமாறு அருள் புரிந்தப் பின்னர் தமது மனைவிகளான தெய்வானை மற்றும் வள்ளியுடன் முருகப் பெருமான் அங்கிருந்து கிளம்பிச் சென்றார். சிவஞான பாலசித்தரும் அங்கு பல காலம் தங்கி இருந்து வீர சைவ நெறியை பரப்பி வந்த காலத்தில் அவருக்கு பக்தர்கள் குவிந்தார்கள். அவர்களில் 'அம்மவை' என்ற பெண்மணியும் அவரது கணவரும் அடக்கம். அந்த தம்பதியினருக்கு திருமணம் ஆகி பல காலம் வரை புத்திர பாக்கியமே இன்றி வருந்தி வந்தார்கள். 'அம்மவை'க்குத் தனக்கு குழந்தையில்லையே எனற ஏக்கம் கொழுந்து விட்டு எரிந்து கொண்டிருந்தது. அதனால் மன நிம்மதியாவது பெறலாம் என்றெண்ணி சிவஞான பாலசித்தரிடம் வந்து அவருக்கு தொண்டு புரியலானார்கள். சிவஞான பாலசித்தர், மற்ற மானிடர்களைப் போல சாதாரண உணவை உண்ணவில்லை. மாறாக தினமும் காலையில் கறந்து வந்த சதுர கள்ளிப் பாலை உணவாக அருந்துவார். தினமும் 'அம்மவை' சதுரக் கள்ளிப் பாலை எடுத்து வருவார். சிவஞான பாலசித்தர் அதை மட்டுமே பருகி வந்து கொண்டு இருந்தார். அத்தோடு சிறிது ஆவாரம் பூ கிடைத்தால் அதையும் சாப்பிடுவார். அவற்றைத் தவிர வேறு எதையும் உண்டதில்லை. சிவஞான பாலசித்தர் தம் வாழ்நாள் முழுவதும் பாலையே பருகினார் என்பதும், மக்களின் குறைகளை தன் திருநீறு ஒன்றினாலேயே குணப்படுத்தினார்!

உண்மையில் சதுரக் கள்ளி என்பது ஒருவித கள்ளிச் செடி. அதன் தன்மை எப்படிப்பட்டது என்றால் அதனுடைய பாலை ஈர அரிசியுடன் கலந்து வைத்தால் அரிசி வெந்து சாதமாகிவிடும். ஆனால் இது உண்பதற்கு உரியது அல்ல. அத்தனை வீரியம் கொண்டது அந்த செடியின் பால் என்றாலும் அது பல மருத்துவக் குணங்களைக் கொண்டது. சதுரக் கள்ளிப் பாலை நீருடன் கலந்து திரியிட்டுக் கொளுத்தினால் விளக்கு எரியும் என்று சித்தர்கள் கூறுவது உண்டாம்.

எபோபோதும் போல ஒரு நாள் பாலைக் கறந்து சிவஞான பாலசித்தரின் எதிரில் வைத்துவிட்டு சோகமாக நின்றிருந்தார்கள் 'அம்மவை' தம்பதியினர். அம்மையின் மன எண்ண ஓட்டத்தை அறிந்து கொண்ட சிவஞான பாலசித்தர் தான் குடித்த பாலின் மிச்சத்தை அவளிடம் கொடுத்து அதை குடிக்கச் சொன்னார். 'அம்மை'யும் மறுப்பேதும் கூறாமல் அந்த பாலை சிவஞான பாலசித்தர் கொடுத்த பிரசாதமாக ஏற்றுக் கொண்டு அதை ஆனந்தத்தோடு குடித்தார்கள். ஆச்சர்யமாக அடுத்த சில தினங்களிலேயே அந்த அம்மையார் கர்பமடைந்தார்கள். பத்து மாதத்தில் குழந்தையும் பிறந்தது. அந்தக் குழந்தை சிவஞான பாலசித்தர் கொடுத்த பாலை உண்டு பிறந்ததால் சிவஞான பாலைய ஸ்வாமிகள் என்று பெயர் பெற்றது.


சிவஞான பாலசித்தர் தினமும் 'அம்மை' கொண்டு வந்த பாலை அருந்தும் பொழுது அவள் கையில் வைத்துக் கொண்டு இருக்கும் அந்தக் குழந்தையைப் பார்ப்பார். அதை பார்த்துக் கொண்டு இருக்கும்போதே சூட்சமமாக தம் சிவஞான சக்தியை அந்தக் குழந்தைக்கு செலுத்துவார். தினமும் குழந்தையும் ஸ்வாமிகளை பார்த்துக் கொண்டே இருந்ததினால் அதற்கு அவருடைய சக்தி கிடைத்து வந்தது. அதனால் குழந்தை ஆன்மீக எண்ணம் கொண்டு தெய்வீகத்தில் வளர்ந்தது. ஒரு நாள் சிவஞான பாலசித்தர் அந்தக் குழந்தையின் பெற்றோர்களிடம் கூறினார் 'இந்தக் குழந்தையும் நான் கொடுத்த சதுரக் கள்ளிப் பாலின் மகிமையினாலேயே பிறந்த காரணத்தினால் என்னுடைய சீடப் பரம்பரையோடு சிவஞான பாலய தேசிகன் என பெயர் பெற்று வாழ்ந்து வரும்'.

அந்தக் குழந்தை வளர்ந்து பாலகனான பின் அவருக்கு சிவஞான பாலசித்தர் ஞானாபதேசம் செய்து ஆச்சார்ய பீடத்தையும் ஏற்படுத்தினார். அதன் பின்னர் அங்கிருந்து கிளம்பி பிரம்மபுரத்திற்கு வந்து அங்கேயே சிறிது காலம் தங்கி இருந்து தம்மிடம் வந்து கொண்டிருந்த பக்தர்களின் குறைகளை போக்கினார். அதன் பின்னர் தான் சமாதி அடைய வேண்டிய காலம் கனிந்து வந்ததை உணர்ந்து கொண்டவர் மீண்டும் மயூராசலம் சென்றார். அங்கு தங்கி இருந்து சிவஞான யோகத்தில் ஆழ்ந்திருந்தபடி தான் சமாதி அடைய வேண்டிய நிலைக்கான முருகப்பெருமானின் கட்டளையை எதிர்நோக்கிக் காத்திருந்தார். அவர் எண்ணியது போலவே அங்கிருந்தவருக்கு வெகு விரைவில் முருகப் பெருமானின் கட்டளைக் கிடைக்க மயிலம் மலையில் முருகப்பெருமான் வீற்றுள்ள சன்னிதானத்தின் தென்பகுதியில் இருந்த குகை ஒன்றில் ஆத்ம சமாதி

அடைந்தார். அங்கு அமர்ந்திருந்தவர் அப்படியே வீபுதி லிங்க வடிவாகி விட்டதாக கூறுகிறார்கள். சிவஞான பால சித்தர் ஸ்வாமிகள் மொத்தம் 500 ஆண்டுகள் பூவுலகில் வாழ்ந்திருந்தார் என்று நம்புகிறார்கள். விழுப்புரம் மாவட்டத்தில் உள்ள மயிலத்தில் உள்ள அவருடைய சமாதி பாண்டிச்சேரி சமாதிகளில் மேன்மையானது. அவர் அருளை பெறுபவர்கள் பல நன்மைகளை அடைவதாக நம்புகிறார்கள் (எழுத்துக்கள் http://santhipriyaspages.blogspot.in/2013/10/bommapura-adeenam-5.html சொந்தமானது).

29. மகான் லக்ஷ்மண சுவாமிகள், காலாப்பட்டு அடுத்து கிழ்புதுப்பட்டு.

புதுவை, வழுதாவூர் சாலையிலுள்ள சண்முகாபுரம் என்ற ஊரில் பரமசிவன் என்பவர்க்கு மகனாக பிறந்தார் ஸ்ரீ லஷ்மண சுவாமிகள். நல்ல உயரம்-கருப்பு நிறம்-கட்டான தேகம்.சுறுசுறுப்பான உடல்.திருமண வயது வந்தவுடன் முனியம்மாள் என்ற மங்கை நல்லாளை மணந்து இல்லறத்தை நல்லறமாக நடத்தி வந்தார். சிறு வயது முதலே அம்பாளின் மேல் ஈடுபாடு கொண்ட சுவாமிகள், திருமணமானவுடன் வாழ்க்கையில் கசப்பு ஏற்பட்டு, அம்பாளின் பாதங்களை தஞ்சம் புகுந்தார். அவரின் பெற்றோர் அவருக்கு எவ்வளவோ எடுத்துரைத்தும் அவருக்கு இல்லறத்தின் மேல் நாட்டம் கொள்ளவில்லை. அம்பாளின் தீவிர பக்தரானார். வீட்டை மறந்து, தாய்-தந்தையரை மறந்து, மனைவியையும் மறந்து மீனாட்சிபேட்டை அம்பாள் கோவிலே சகலமும் என்றிருந்தார். யாராவது கொண்டு வந்து தரும் உணவை மட்டுமே உட்கொண்டு வாழ்ந்தார். சுற்றத்தாரின் தொந்திரவினை தாங்க மாட்டாமல் அங்கிருந்து அகன்று, மரக்காணம் செல்லும் சாலையில் உள்ள புத்துப்பட்டு என்னும் ஊரில் உள்ள ஐய்யனார் கோவிலில் வந்து குடியேறினார். தன் மேலாடையாக ஒரு சாக்கு துணியை போற்றிக்கொண்டு- தெருவில் சுற்றிக் கொண்டிருப்பார். அதனால் அவரை "சாக்கு சாமியார்" என்று அழைப்பதும் உண்டு. நாயுடன் பேசுவார்-அவராகவே பேசிக் கொள்வார். அம்பாளின் நாமங்களையே உச்சரித்துக் கொண்டு இருப்பார்.வானத்தில் கோடு போடுவது போல் ஏதாவது செய்கை காண்பித்துக் கொண்டிருப்பார். யாராவது காசு கொடுத்தால் வாங்க மாட்டார். அப்படியே வாங்கினாலும் ஒரு காசை மட்டும்வாங்கிக் கொண்டு அதை அப்படியும், இப்படியுமாக திருப்பி திருப்பி பார்த்து விட்டு தூக்கி போட்டு விடுவார். இவர் கடைவீதியில் சென்றால், கடைக்காரர்கள் தம் கடையில் சுவாமிகளின் கால் படாதாஎன்று ஏங்குவார்கள். சுவாமிகளின் கால் பட்ட இடம் ஒஹோ என்று விளங்குமாம். திடீரென்று ஏதாவது ஒரு கடையினுள் அவராகவே நுழைவார்-கல்லாவை திறந்து அவராகவே காசு எடுத்துக் கொள்வார். இல்லையென்றால் கல்லாவில் உள்ள ஒரே ஒரு காசை மட்டும் எடுத்து தெருவில் வீசி விட்டுச சென்று விடுவார். அப்படிச் செய்தால் அந்த கடைக்காரருக்கு நல்ல வியாபாரம் நடக்குமாம்.



பக்தர்களின் குறைகளை கூர்ந்து கேட்பார்.அதற்கு பரிகாரம் கூறுவார். அவர் சொல்படி கேட்டு நடப்பவர்களுக்கு அக்குறை விரைவில் தீர்ந்து போகும் என்பதை மக்கள் கண்டனர்- திடமாக நம்பினர். சுவாமிகள், அம்பிகையின் மேல் தீராத ஈடுபாடு கொண்டிருப்பதை கண்ட மக்கள்-அவரை கடவுளின் அவதாரமாகவே கருதினர்.ஐய்யனார் கோவிலில் சுவாமிகள் படுத்து உறங்கிக் கொண்டிருப்பார். இரவு வேளைகளில், திடீரென்று பக்தர்கள் யாராவது விழித்துக் கொண்டு பார்த்தால் அவர் தலை வேறு- உடல் வேறாக தனித்தனியாக கிடக்குமாம்.மறு நாள் காலையில் சுவாமிகள் நன்றாக நடந்து செல்வதை மக்கள் ஆச்சரியத்துடன் பார்த்திருக்கிறார்களாம். சுவாமிகள் பஸ் போகும் பாதையில் திடீர் திடீர் என அமர்ந்து விடுவாராம். சுட்டெரிக்கும் வெய்யிலையும் கடும் மழையையும் பொருட்படுத்தாமல் மணிக் கணக்காக உட்கார்ந்திருப்பாராம். அது ஏன் என யாருக்குமே தெரியாதாம். சுவாமிகளின் பெருமையை அப்பகுதி மக்கள் முழுவதும் அறிந்திருந்தனர்.

தான் அம்பாளின் பாதத்தை அடையும் தருணம் நெருங்கி விட்டதை உணர்ந்த சுவாமிகள் புத்துப்பட்டு ஐய்யனார் கோவிலின் பின்புறம் இருந்த பத்மாசூரன் குளக்கரையின் அருகில் தியானத்தில் அமர்ந்து விட்டார். நாளடைவில் புற்று மண் வளர்ந்து -சுவாமிகள் புற்றாகவே மாறி விட்டார். சுவாமிகள், 1947-ம் ஆண்டு டிசம்பர் மாதம் 21-ந் தேதி சமாதியானார். சுவாமிகளின் புற்றின் அருகில் ஒரு பெரிய வேப்ப மரம் வளர்ந்து நிழல் தந்து வருகிறது. அதை, திருடன் ஒருவன் வெட்ட முயன்றபோது-"வெட்டாதே" என்று அசரீரி எழுந்தது. அதை பொருட்படுத்தாத அக்கயவன் அம்மரத்தை வெட்டியதால்-அங்கேயே விழுந்து விட்டான். இரவு முழுதும் அவனால் எழுந்திருக்க முடியாமல் படுத்துக் கிடந்தான். மறு நாள் அவ்வழியே

சென்றவழிப்போக்கர்கள் அவன் நிலையைக் கண்டு-அவனை தூக்கிக் கொண்டு போய் அவன் வீட்டில் சேர்த்தனர். வீட்டிற்கு சென்ற சிறிது நேரத்தில் அவனுடைய உயிர் பிரிந்தது. வெட்டிய மரத்தின் துண்டுகள் ஐய்யனார் கோவில் கும்பாபிஷேகத்தின் போது பயன்படுத்தப்பட்டது (எழுத்துக்கள் http://pudhuvaisithargal.blogspot.in சொந்தமானது).

30. மௌலா சாஹிப் மெய்ஞானி சுவாமிகள்,

கி.பி.17ஆம் நூற்றாண்டில் தமிழ்நாட்டில் ஆற்காடு என்னும் ஊரில் வெள்ளாளர் குலத்தில் மிகச் செல்வச் சிறப்புமிக்க வணிகர் குடும்பத்தில் பிறந்தவர் இந்த மெய்ஞானி. இவர், செல்வத்தைச் சிறிதும் மதியாதவராய் இளமையிலேயே, ஆன்மீகத்தில் தாகம் உடையவராய்த் திகழ்ந்தார். இவர் முழுமையான இறை உணர்வினால் ஆளப்பட்டு வந்தார். பகலெல்லாம் நோன்பு வைத்துக் கொண்டும், இரவில் இறைவனின் உள்நிலையில் வணங்கிக் கொண்டும் இருப்பதையே தம் தொழிலாகக் கொண்டொழுகினார். தான் செய்யும் ஒவ்வொரு செயலையும் இறைவனுக்கு அர்ப்பணிப்பதில் மகிழ்ச்சி கொண்டார். இவரிடம் பல சீடர்கள் இருந்ததாகத் தெரிய வருகிறது. இவர் ஒரு நாள் எல்லாவற்றையும் விட்டுவிட்டு புதுச்சேரிக்கு வந்தார். பல ஆண்டுகள் புஸ்ஸி வீதி (லால்பகதூர் சாஸ்திரி வீதி) லா காலேஜ் (சட்டக்கல்லூரி) தற்போது உள்ள இடத்தில் தங்கி இறைப்பிரச்சாரம் செய்து வந்தார். திடீரென்று ஒருநாள் இவர் காணப்படவில்லை. எங்கே சென்றார்? என்ன ஆனார்? யாருக்கும் எதுவும் புரியவில்லை. இவர் காணப்படாததற்கு சீடர்கள் மனம் கலங்கினர்.

இந்நிலையில் இவர் தரை மார்க்கமாகவோ அல்லது கடல் மார்க்கமாகவோ லட்சத்தீவுக்கு எப்படியோ சென்று இறைப்பணி செய்து கொண்டிருந்தார்களாம். அப்போது அத்தீவை ஆண்டுவந்த முஸ்லீம் மன்னர் ஒரு நாள் இவரது ஆன்மீக செயலைக் கேள்விப்பட்டு இவரை அழைத்துவந்து நாளடைவில் தம் நண்பராக்கிக் கொண்டார். மன்னர் ஆண்டவன் பணியில் தம்மை ஈடுபடுத்திக் கொண்டவராகையால் ஆன்மீகவாதியான மௌலாசாஹிப் அவர்களுடைய ஆன்மீகக் கருத்துகளாலும் வணக்க வழிபாடுகளாலும் கவரப்பட்ட அந்தப் பெரியவரை மன்னர் இஸ்லாத்தில் இணைத்துக் கொண்டார். அந்த நாளில் பிற மதங்களில் இருந்து இஸ்லாத்தில் சேருவோருக்கு மௌலா என்ற பெயரை இணைத்துக் கொள்வது வழக்கம். இதன்படி அப்பெரியாரின் பெயர் சையது அஹமது மௌலா சாஹிப் என்று மாற்றப்பட்டது. மற்றவர்கள் மௌலா சாஹிப் என்றே அழைத்து வந்தார்கள்.



இவர் லட்சத்தீவு மன்னருடன் இரண்டு முறை ஹஜ் பயணம் செய்து புனித காபாவை தரிசித்துள்ளார். இந்த நிலையில் சில ஆண்டுகள் இறைவன் பணியைச் செய்துவந்த இவர், மன்னரிடம் இறுதிக்காலத்தில் தன் வேண்டுதலை நிறைவேற்றி வைக்குமாறு கேட்டுக் கொண்டார்.அதாவது தான் மரணித்த பின்பு தனது உடலை கபனிட்டு பெட்டியில் வைத்து தன்னுடைய பெயரையும் தன்னுடைய வரலாற்றையும் அதில் எழுதிவைத்து கடலில் விட்டுவிடுமாறு கூறியுள்ளார். அதன்படியே மௌலா சாஹிபு இறந்தபின்பு அவரின் மையத்தை கபனிட்டு, ஒரு பெட்டி செய்து அதில் வைத்து கடலில் மன்னர் மிதக்க விட்டுவிட்டார்.

பலநாட்களுக்குப் பிறகு அந்தப் பெட்டி அந்த நாளைய வட ஆற்காட்டின் கட்டுப்பாட்டில் இருந்த புதுச்சேரி கடற்பகுதிக்கு மிதந்து வந்துள்ளது. கடல் அலையில் மிதந்துவந்த அந்தப் பெட்டி அங்கு மீன் பிடித்துக் கொண்டிருந்த மீனவர்களின் கைகளில் அகப்படாமல் செல்லவே அவர்கள் ஆச்சரியத்தில் மூழ்கினார்கள். அந்தப் பெட்டி (சுந்தன) முஸ்லீம் சமய முறைப்படி அமைக்கப்பட்டிருந்ததால் அதைக் கண்ணுற்ற மீனவர்கள் கடற்கரைக்கு வந்து அங்குள்ள முஸ்லிம் பெரியவர்களிடம் அதனைத் தெரியப்படுத்தினர். ஊர் முக்கியஸ்தர்கள் பலரும் படகில் சென்று அந்தப் பெட்டியை கரைக்குக் கொண்டுவந்து பார்த்ததில் அது ஒரு முஸ்லீம் சம்பிரதாயத்தின் பிரகாரம் இருந்ததால் யாரோ ஒரு முஸ்லீம் பெரியவரின் (சுந்தன) சவப்பெட்டியாக இருக்கலாம் என்று கருதி அதனை தற்போது 7-ஆம்நாள் திருச்சபை (*7th Day Adventist Church*) இருக்கக்கூடிய இடத்தில் முஸ்லிம்களால் நல்லடக்கம் செய்யப்பட்டார். அந்தக் காலத்தில் முஸ்லிம்களின் அடக்கஸ்தலம் இன்று 7-ஆம் நாள் திருச்சபை இருக்கும் இடமாகும் என்று புதுவை வரலாறு கூறுகிறது.

பல ஆண்டுகளுக்குப் பிறகு புதுச்சேரியில் பிரஞ்சுக்காரர்களின் குடியேற்றம் பெருகப் பெருக வெள்ளையர் பகுதியில் வாழ்ந்துவந்த முஸ்லிம்கள் இந்துக்களின் பகுதிக்குக் குடிபெயர வேண்டியதாயிற்று. கபர் தனித்து விடப்பட்டதால் அங்கிருந்த பெரியார் சமாதியை அப்படியே விட்டுவிட்டு வந்துவிட்டனர். கபர் தனித்து விடப்பட்டதால் அ:ுது பாழடைந்து போயிற்று. அது கபர் (கல்லறை) இடமாக இருந்ததால் பிரஞ்சுக்காரர்கள் அதனை எதற்கும் பயன்படுத்தாமல் விட்டுவிட்டார்கள். நாளடைவில் பொது ஜனங்கள் அவ்விடத்தில் அதனை கழிப்பிடமாகப் பயன்படுத்தத் தொடங்கினர். ஒரு மகானின் அடக்கஸ்தலத்தில் இவ்விதம் அசுத்தம் செய்யப்படுவது கண்டு முஸ்லிம் மக்கள் மனம் வருந்தினர்.

மௌலா சாஹிபுவின் தெய்வீக சக்திக்கு இது ஏற்றதாக இல்லாததால் ஒரு நாள் திடீரென்று ஊர் காஜியார், ஊர் நாட்டாண்மைக்காரர் ஆகியோர் கனவில் பெரியார் தோன்றி தம்மை அடக்கம் செய்யப்பட்டுள்ள இடத்தில் அசுத்தம் செய்வதை எடுத்துக்கூறி (*7th Day Adventist Church*) ஏழாம்நாள் திருச்சபை இடத்தில் இருப்பது தம் பூத உடலே என்று தெளிவுபடுத்தி தம்மை அந்த இடத்தை விட்டு அகற்றும்படி கூறியுள்ளார். இதனை யாரும் கண்டுகொள்ளவில்லை. இவ்வாறே பலமுறை அவர்களின் கனவில் தோன்றித் தன்னுடைய சமாதியை (கபரை) அங்கிருந்து பெயர்த்தெடுத்து தற்போதுள்ள பள்ளிவாசலுக்குப் பக்கத்தில் அடக்கம் செய்யுங்கள் என்று கூறினார். இதனை காஜியார், நாட்டாண்மைக்காரர்கள், ஊர் முஸ்லீம் ஜனங்கள் ஒன்று கூடி ஆலோசித்து இது சம்பந்தமாக கவர்னரை அணுகி விபரத்தைச் சொல்லலாம் என்று முடிவு செய்தார்கள்.

அதன்படி காஜியார், நாட்டாண்மைக்காரர்கள், ஊர் பிரமுகர்கள் அனைவரும் கவர்னரை நேரில் சந்தித்து ஏழாம் நாள் திருச்சபையுள்ள இடத்தில் முஸ்லிம் மஹான் ஒருவர் அடங்கியுள்ளார். அங்கு அசுத்தம் செய்யப்படுவதால் தன்னை அவ்விடத்திலிருந்து அப்புறப்படுத்தி வேறு இடத்திற்கு மாற்றி அடக்கம் செய்யும்படியாக தங்களின் கனவில் தோன்றிக் கூறியதை எடுத்துக் கூறினார்கள்.

கவர்னர், காஜியார் மற்றும் பெரியோர்கள் சொல்லியதைக் கேட்டு நகைத்தார். உடனே கவர்னரைக் காணச் சென்றிருந்த அனைவரும் தாங்கள் சொல்வது உண்மை இல்லை என்றால் கவர்னர் கூறும் தண்டனையையோ அல்லது அபராதத்தையோ தாங்கள் ஏற்கத் தயார் என்றார்கள். அதற்கு கவர்னர் இது சம்பந்தமாக மற்ற அதிகாரிகளுடன் தாம் கலந்து ஆலோசனை செய்தபிறகு தெரியப்படுத்துவதாகச் சொல்லி அனுப்பிவிட்டார்.


இந்த நிகழ்ச்சியைச் சாதாரணமாக எடுத்துக் கொண்ட கவர்னர் அதற்கு முக்கியத்துவம் தராமல் வாளாயிருந்துவிட்டார். அப்போதைய கவர்னராக இருந்து வந்தவர் (*Francis Martin*). ஒரு நாள் கவர்னர் கனவில் மஹான் தோன்றி அவரை அச்சுறுத்தி முஸ்லிம்களின் கோரிக்கையை நிறைவேற்றுமாறு தெரிவித்தார். அவரும் அவருடைய கோரிக்கையை நிறைவேற்றுவதாகக் கூறினார் என்று கூறப்படுகிறது. ஒருநாள் திடீரென்று கவர்னர் அவர்கள் ஊர் காஜியார், நாட்டாண்மைக்காரர்களை அழைத்துவருமாறு அதிகாரிகளை அனுப்பினார். எல்லோரும் அழைப்பை ஏற்று கவர்னரைச் சந்தித்தனர். அப்போது கவர்னர் தாம் கனவில் கண்ட அதிசயத்தை விளக்கிக் கூறியதுடன், உடனே இதற்கு வேண்டிய ஏற்பாடுகளை நாம் செய்வோம் என்று உறுதியளித்தார். கவர்னரைக் காணச்சென்றிருந்த அனைவரும் நல்ல பதிலை ஏற்று சந்தோஷத்துடன் திரும்பினர்.

ஒருவெள்ளிக்கிழமையன்று தொழுகையை முடித்துவிட்டு காஜியார், பேஷ்இமாம் (மதகுரு) மற்றும் ஊர் மக்கள் அனைவரும் மௌலா சாஹிபு அடக்கம் செய்யப்பட்ட பகுதிக்கு வந்தனர். அங்கு ராணுவ அதிகாரிகளும், பிரஞ்சு அரசு அதிகாரிகளும் வந்திருந்தனர். மௌலா சாஹிபு அவர்கள் கனவில் காட்டிய குறிப்பை வைத்து ஓர் இடம் காட்டப்பட்டது. அவ்விடத்தைத் தோண்ட ஆரம்பித்தனர். அப்போது அம்மண்ணிலிருந்து இரத்தம் பீறிட்டு அடித்தது. அந்தக் குருதி அங்கு சுற்றி இருந்த அனைவர்மீதும் பட்டது. அதைக்கண்ட பிரஞ்சு அதிகாரிகள் ஆச்சரியப்பட்டனர். காஜியார் சொன்னது உண்மையே என்றுணர்ந்து மன்னிப்புக் கேட்டனர். மௌலா சாஹிபு அடக்கம் செய்யப்பட்டு உள்ள அந்த இடத்திலிருந்து அந்தப்பெட்டியை ஊர்வலமாக தற்போது அடக்கம் செய்யப்பட்டுள்ள இடத்திற்கு எடுத்துச் சென்றார்கள். அவர்களுடன் பிரஞ்சு அதிகாரிகளும் ஏனைய ஊர் மக்களும் சென்றார்கள். முல்லா வீதி குத்பா பள்ளிவாசலுக்குப் பக்கத்தில் உள்ள காலிமனையில் பெட்டியை வைத்தார்கள். பெட்டியைத் திறந்து பார்த்தார்கள். முஸ்லிம் வழக்கப்படி, மையத்தை அடுக்கடுக்காக மூன்று துணியில் வைத்து சுற்றி

தலைமாட்டிலும் கால்மாட்டிலும் கயிற்றால் கட்டப்பட்டு துணியால் மூடப்பட்டிருந்தார். தலைமாட்டுப் பக்கத்துணியைப் பிரித்துப் பார்த்தார்கள். சச்சிதானந்த நிலையில் பெரு வாழ்வு நடத்துகின்ற திருவாளர் போன்று இளம் புன்னகையோடு ஓர் உடல் அழியாது பச்சையாக இருந்தது. தூங்காமல் தூங்கி சுகம் பெறுகின்ற நிலைபோன்றிருந்தது. யோக நித்திரையில் ஆழ்ந்திருக்கும் யோகி போன்று காட்சியளித்தார். எல்லோரும் மௌலா சாஹிபு உடல்நிலையைக் கண்டு ஆச்சரியப்பட்டனர்.

அந்தப் பெட்டியில் வைத்திருந்த ஆதாரத்தைக் கொண்டு காஜியாரும் இஸ்லாமியப் பொது ஜனங்களும், பள்ளிவாசல் நிர்வாகிகளும், நாட்டாண்மைக்காரர்களும் முன்னின்று மௌலா சாஹிபு அவர்களின் பூத உடலை இஸ்லாமிய முறைப்படி தற்போது உள்ள இடத்தில் ராணுவ மரியாதையுடன் நல் அடக்கம் செய்தனர். அதாவது குத்பா பள்ளிவாசல் தென்புறத்தில் உள்ள இடத்தில் அடக்கம் செய்யப்பட்டது. இது ஏறக்குறைய இரண்டரை நூற்றாண்டுகளுக்கு முன் நடைபெற்ற நிகழ்ச்சியாகும். (எழுத்துக்கள் http://www.uyirmmai.com/uyirosai/ContentDetails.aspx?cid=1065 சொந்தமானது).

31) சற்குரு நவபாஷன சித்தர் - சந்திக்குப்பம்



சுமார் 250 ஆண்டுகளுக்கு முன்பு வடலூரில் இருந்து வந்தவர் சற்குரு நவபாஷன சித்தர் என்று நம்பப்படுகிறது. சந்திக்குப்பம் அருகில் உள்ள புண்ணிய தலமான திருகாஞ்சி காசி விஸ்வநாதரை தரிசிக்க வந்த பொது, சாந்திகுப்பம் மக்களை புரியாத/தெரியாத ஒரு நோய் பல உயிர்களை காவு வாங்கி கொண்டிருந்தது. இதை கேள்வி பட்ட சித்தர், மக்களுக்கு உதவ நல் உள்ளம் கொண்டார். முதலில் நோய்வாய் பட்டவர்களுக்கு நவபாஷன மருந்தை உண்ணும் விதத்தில் செய்து கொடுத்தார். சில நாட்களிலேயே ஊர்மக்கள் அனைவரும் குணம் அடைந்தனர்.

ஊர் பெயர் தெரியாத காரணத்தால், அவரை நவபாஷன சித்தர் என்றே அழைக்க தொடங்கினர். இவரை நாடி வந்தவர்களுக்கு, சிகிச்சை செய்வதையே தொழிலாக கொண்டிருந்தார். பெரும்பாலான நேரங்களில் இவர் தியானத்திலே இருப்பார். பொது நோயாளிகளுக்கு, மண்ணை எடுத்து நெற்றியில் தடவ, அது விபுதி ஆகிவிடும். வந்தவருக்கும் உடல்நிலை சில மணி நேரங்களிலே தேறிவிடும். தான் சமாதி அடையும்




தருணம் வருவதை முன்னதே அறிந்து கொண்ட இவர், ஒரு சீடரை கூப்பிட்டு "என் காலம் முடிந்த உடன், ஊரில் மேடான ஒரு பகுதியில் சமாதி அமைக்க கட்டளை இட்டார்". அன்றைய தினம் வந்ததும் மக்களை அழைத்து, பச்சரிசி சாதம் பொங்கிவரும்படி கூறினார். ஒரு செப்பு தகட்டில் சில மந்திரங்களை எழுதி அந்த சாதத்தில் வைத்தார். அந்த செப்பு தகடு சாதத்தோடு உருகி கரைந்தது. அதை உண்டார். யோகநிலையில் அசைவற்று இருந்தார். சித்தர் ஆணை இட்ட படி, மேடான ஒரு இடத்தில் அவரை சமாதி நிலையில் வைத்து மூடிவிட்டனர். இன்றும் தன்னை நாடி வருபவர்களுக்கு, சமாதி நிலையில் இருந்து அருள் செய்கிறார். வருடம் தோறும் தை பூசம் அன்று பச்சரிசி கஞ்சி செய்து சிறப்பு பூஜை செய்கின்றனர் (http://www.dailythanthi.com/).

32. ஸ்ரீ வியோமா சுவாமிகள் (திருக்காஞ்சி சாமியார்), கணுவாபேட்டை

மாசிமக திருவிழா அன்று திருகாஞ்சி சங்கராபரணி ஆற்றங்கரையில் சுற்று வட்டார பகுதியில் உள்ள சுவாமிகள் ஆற்றங்கரையில் கூடி இருந்தன! மக்கள் கூட்டம் கூடி இருந்தது! கூட்டத்தின் நடுவில் ஒரு ஞானி திருகாஞ்சி சிவனை தரிசித்து விட்டு, ஆற்றங்கரையில் கூடி இருந்த திருக்காமேஸ்வரர் உற்சவரை பின்னால் சென்று கொண்டு இருந்தார்! கோயிலின் திண்ணையில் படுத்து உறங்கி கொண்டார். மறுநாள் காலையில் திண்ணையில் தியானத்தில் முழுகி கிடந்தார். உணவு எதுவும் உண்ணாமல், அசையாமல் அங்கேயே இருந்தார். இவரின் மீது பரிதாபப்பட்டு இரவில் ஒரு கிழவி, தான் வியாபாரம் செய்து மீந்து

போன கிழங்கு வகைகளை பெரியவர் முன்பு வைத்து விட்டு சென்றார். கண் திறந்த சித்தர், கிழவியின் பாசத்தை உணர்த்து அதை உண்டார். இவ்வரே பல நாட்கள் சென்றன! ஒரு நாள், அந்த கிழவி வியாபாரம் செய்ய வரவில்லை. முன்று நாட்களாக வராததை கண்ட சித்தர் - அருகில் வியாபாரம் செய்து கொண்டு இருந்தவர்களை பார்த்து கேட்டார்.



வியாபாரம் செய்து கொண்டு இருந்த ஒரு பெண்மணி, இறக்கும் தருவாயில் இருக்கும் கிழவியின் நிலையை கூறினார். சித்தர் தன்னிடம் உள்ள திருநீரை அவர்களிடம் அளித்து கிழவியின் மேல் பூச சொன்னார். அவ்வாரே செய்த அந்த பெண்கள் - அனைவரும் வியக்கும் வண்ணம் மரண படுக்கையில் இருந்து எழுந்து எப்பொழுதும் போல் மீண்டும் எழுந்து நடக்க ஆரம்பித்தார்! மக்கள் பலருக்கு தீராத பல நோய்களுக்கு மருந்து அளித்து, குணம் அடைய செய்தார்! (படம் http://jnanabhoomi.blogspot.in/2010/09/blog-post_8394.html சொந்தமானது).

தம்மை நாடி வரும் செல்வந்தர்களை குழந்தையின் கல்விக்காக உதவும் படி கேட்டு கொண்டார். ஒரு செல்வந்தர் தனது தோப்பை அன்பளிப்பாக அளித்தார்! தான் மகேசனிடம் செல்லும் நேரம் வந்து விட்டதை உணர்ந்த சித்தர், தான் எண்ணிய நாளிலே சமாதியடைந்தார். அவர் ஆசிரமம் இருந்த தென்னம்தோப்பிலே அவருக்கு சமாதி அமைத்தனர். திருகாஞ்சி சங்கராபரணி ஆற்றுக்கு செல்லும் மண் சாலையில், கணுவாபேட்டை அருகில் உள்ள தென்னம்தோப்பில் இச்சித்தர் உடைய சமாதி உள்ளது

34. மகான் சன்னியாசி அப்பர் சித்தர் - திருகாஞ்சி ரோடு கனுவபேட்டில்



மகான் சன்னியாசி அப்பர் ஜீவசமாதி வில்லியனூர் அருகில் உள்ள கனுவபேட்டில் உள்ளது. இவரை பற்றிய தகவல்கள் கிடைக்கவில்லை. இவரை பற்றிய தகவல் கிடைத்தால் esanoruvanae@gmail.com அனுப்பி வைக்கவும்.



(படங்கள் Facebook - புதுச்சேரி சித்தர்கள் ஞானபூமி சொந்தமானது)

35. ஸ்ரீ கங்காதர சுவாமிகள், திருக்காஞ்சி

புதுச்சேரியில் உள்ள வரலாற்று புகழ்மிக்க கோயில்களில் திருகாஞ்சியில் உள்ள கங்கை வராக நதீஸ்வரர் கோயில் குறுப்பிடத்தக்கது. புண்ணிய நதியான சங்கராபரணி ஆற்றின் தென் கரையில் அமைந்துள்ளது காமாட்சி, மீனாட்சி உடனுறை கெங்கைவராக நதீஸ்வரர் கோயில். இந்த தலத்தில் மேற்கு திசை நோக்கி



உள்ள இறைவன் 16 பட்டைகள் கொண்ட லிங்கமாக காட்சியளிக்கின்றார். இந்த தலத்தில் வழிபட்டால் 16 வகை செல்வங்களும் கிடைக்கும் என்பது ஐதீகம். இக்கோயில் காசியை விட வீசம் அதிகம் கொண்டது எனவும், அகத்தியர் கரத்தில் ஏந்தி பூஜிக்கப்பட்ட மூர்த்தி தலம், தீர்த்தம் ஆகிய சிறப்புகளை உடையது எனவும் கருதப்படுகிறது. இத்தகைய சிறப்பு வாய்ந்த கோயிலின் பின்புறம் ஸ்ரீ கங்காதர சுவாமிகளின் ஜீவ சமாதி உள்ளது. இவரை போன்று ஸ்ரீ சதாசிவ சுவாமிகளின் ஜீவ சமாதியும் இவரின் சமாதியின் அருகிலேயே உள்ளது. சுமார் ஆயிரம் ஆண்டுகளுக்கு முன்னால், பல சித்தர்கள் வடக்கில் இருந்து இங்கு வந்து சிவ கூட்டு அடைந்தனர் என்று நம்பப்படுகிறது. இவரை போன்று அதிதி வர்மன், கேசவ வர்மன், குபேர வர்மன், நாகேந்திரன், கமலன், வியுகமுனி, மங்கலன், பிரம்மரிஷி மற்றும் சித்தானந்தன் போன்ற பல சித்தர்கள்

இந்த தபோவனத்தில் சமாதி அடைந்ததாக நம்பப்படுகிறது. பல ஆண்டுகளுக்கு முன்னால் நடந்ததால், இவர்களை பற்றி மேலும் தகவல்கள் கிடைக்கவில்லை.

36. ஸ்ரீ கடுவெளிச் சித்தர், இரும்மை மாகாணம்.


அந்தக் காலத்தில் இரும்பையிலும், அதைச்சுற்றி அமைந்துள்ள சிறு கிராமங்களிலும் கடுமையான வறட்சி நிலவி, பஞ்சம் தலைவிரித்தாடியது. மழை பெய்யாததால் நீர்நிலைகள் வறண்டு போனது. அந்த ஊரை அடுத்துள்ள கோட்டக்கரையிலிருந்து ஒரு சிற்றரசர் இந்த ஊரை ஆட்சிசெய்து வந்தார். அவர் ஆறாம் குலோத்துங்க சோழ மன்னரின் ஆட்சிக்குட்பட்ட சிற்றரசராக இருந்துவந்தார். வறட்சியின் கொடுமையால் பாதிக்கப்பட்ட மக்கள் தினமும் அரசரிடம் சென்று தங்கள் துயரங்களை முறையிட்டனர்.



எனவே அரசர், அரச சபையை கூட்டி ஆலோசனை நடத்தினார். அந்த சபையில் அமைச்சர்கள், அறிஞர்கள், புலவர்கள் மற்றும் ஜோதிடர்கள் இடம்பெற்றிருந்தனர். கடுமையான வறட்சிக்கான காரணத்தை அரசவை ஆராய்ந்தது. கடைசியாக வறட்சிக்கான காரணத்தை அரசவை கண்டு பிடித்தது. முனிவரின் தவத்தால் ஏற்பட்ட விளைவு இரும்பை ஊரில் உள்ள ஒரு அரச மரத்தின் கீழ் அமர்ந்து கடுவெளி சித்தர் என்பவர் நீண்டகாலமாக கடும் தவம் புரிந்து வருகிறார். அவருடைய தவத்தின் காரணமாக உடலில் இருந்து மின்னலைப்போல் வெளிப்படும் வெப்பம் காரணமாக வறட்சி ஏற்பட்டுள்ளது என்றும், எனவே எப்படியாவது கடுவெளி சித்தரின் தவத்தை கலைக்க வேண்டும் என்று முடிவு செய்யப்பட்டது. மேலும் அவரை அழைத்து வந்து இறைவனை வேண்டி பூஜை செய்தால் வறட்சி நீங்கி, மழை பெய்து ஊர் செழிக்கும் என்றும் நம்பிக்கை தெரிவிக்கப்பட்டது.

அதைத் தொடர்ந்து கடுவெளி சித்தரின் தவத்தை கலைத்து அவரை ஊருக்குள் அழைத்து வர வேண்டும் என்றும், அவ்வாறு அழைத்து வருபவர்களுக்கு நிலம் மானியம் வழங்கப்படும் என்று ஊர் மக்களுக்கு தண்டோரா மூலம் அறிவிக்கப்பட்டது. கடுவெளி சித்தரை அழைத்து வரும் பொறுப்பை அந்த சிவன் கோவிலில் நடனமாடும் வள்ளி என்ற தாசி ஏற்றுக்கொண்டாள். பின்னர் அவள் கடுவெளி சித்தரின் பழக்க வழக்கங்கள், உணவு ஆகியவற்றை கண்டறிந்தாள். அப்போது கடுவெளி சித்தர் தனக்கு பசிக்கும்போது, அவருடைய கையை நீட்ட அதில் அரச மர இலை ஒன்று விழுவதையும், அதையே அவர் உணவாக உட்கொள்வதையும் கண்டறிந்தாள். அதைத் தொடர்ந்து அரிசி மாவில், அரசமர இலைபோன்று வடிவத்தைச் செய்து, அதில் உப்பைச்சேர்த்து அதனை முனிவர் கையில் வைத்தாள். அதை அரச இலையாக நினைத்து உண்டபோது அதில் உப்புச் சுவையை உணர்ந்த முனிவர், தவத்தைக் கலைத்து கண்விழித்துப் பார்த்தார்.

அந்தசமயத்தில் முனிவரின் பின்பக்கமாக நின்று கொண்ட தாசி, "கோபப்பட்டு சபித்துவிட வேண்டாம்" என்று வேண்டிக்கேட்டுக்கொண்டாள். மேலும் தங்கள் ஊரில் வறட்சி நிலவுவதையும், அதனால் மக்கள் படும் துன்பத்தையும் எடுத்துக்கூறி, தாங்கள் வந்து சிவன்கோவிலில் பூஜை நடத்தி இறைவனை வேண்டி மழை பொழியச் செய்ய வேண்டும்" என்று கேட்டுக்கொண்டாள். அதைக் கடுவெளி சித்தர் ஏற்றுக்கொண்டார். உடனே அவர் கோவிலுக்கு வருகை தந்தார். அவரைக் கோவிலுக்கு அழைத்து வந்ததை பாராட்டி தாசிக்கு நிலம் மானியமாக வழங்கப்பட்டது. அவர் கோவிலுக்கு வருகை தந்ததையொட்டி கோவில் விழாக்கோலம் பூண்டது. அரசர் மற்றும் மக்கள் கூடி கோவிலை வலம் வந்தனர். கடுவெளி சித்தர் முன்னிலையில் தாசி நடனமாடினார்.சிவபெருமானின் பல அம்சங்களில் நடனமாடும் நடராஜரின் நடனமும் ஒரு அம்சமாகும். இதில் சிவபெருமான் ஆடிய ஆனந்த தாண்டவ நடனத்தை தாசி தனது நடனத்தில் ஆடும்போது, அவளுடைய கால் சலங்கையில் ஒன்று அறுந்து விழுந்தது. அதனால் வள்ளியின் நடனம் பாதிக்கப்படும் என்பதை உணர்ந்த சித்தர், தாசியின் காலில் அந்த சலங்கையை கட்டிவிட்டார்.



அதனைப் பார்த்த அரசரும், மக்களும் ஏளனம் செய்து சிரித்தனர். அதனால் கடுவெளி சித்தர் கடும் கோபம் அடைந்தார். அவர் உடனே சிவன் கோவிலுக்குள் சென்று இறைவனைப் பார்த்து, "அல்லும் பகலும் உன்னையே நினைத்தேன்; செல்லும்போது செலுத்துவேன் சிந்தையை; வெல்லும்போது விடுவேன் வேள்வியை; கல்லும் பிளந்து கடுவெளியாகுமே" என்று சீற்றத்துடன் கூறினார். அவர் இவ்வாறு கூறியதும், கோவிலின் மூலஸ்தானத்தில் இருந்த சிவலிங்கம் வெடித்து 3 துண்டுகளாக சிதறியது. சிவலிங்கம் வெடித்தவுடன் அதில் இருந்து ஒரு பிரகாசமான ஒளி தோன்றியது. அந்த ஒளியினுள் சிவபெருமானும், பார்வதியும் கடுவெளி சித்தருக்கு காட்சி அளித்தனர். அதே சமயம் மற்றவர்களுக்கு அது வெறும் வெளிச்சமாக மட்டுமே தெரிந்தது.வெடித்து சிதறிய சிவலிங்கத்தின் பகுதிகள் விழுந்த இடங்கள் எல்லாம் புல், பூண்டுகூட முளைக்காத கடுமையான களர் நிலமாக மாறி பயனற்றதாகிவிட்டது.

இதைக் கண்ட மன்னரும், ஊர் மக்களும் பதறினார்கள். உடனடியாக சித்தர் காலில் விழுந்து மன்னிப்பு கேட்டனர். அதனால் கோபம் தணிந்த சித்தர், "எட்டும் அறிந்த உந்தனுக்கு; எட்டும் அறியா எந்தனுக்கு எட்டும் இரண்டும் ஒன்றதாகுமே" என்று மனமுருக வேண்டினார். உடனே வெடித்த சிதறிய சிவலிங்கம் ஒன்றாக கூடியதாகவும், அன்றைய தினம் இரவில் மழை பெய்து வறட்சி நீங்கி ஊர் செழித்ததாகவும் கூறப்படுகிறது. இதனால் கிராமங்களில் தலைவிரித்தாடிய பஞ்சம் நீங்கியது. மேலும் கடுவெளி சித்தர் "கல்லும் பிளந்து கடுவெளியாகக்கடவது" என்று விட்ட சாபத்தையும் திரும்பப்பெற்றுக்கொள்ளும்படி அரசர் வேண்டினார். ஆனால் அதற்கு சித்தர் "என்ன நடந்ததோ, அது நடந்ததுதான், எதிர்காலத்தில் தூர தேசங்களில் இருந்து மக்கள் வருவார்கள். அவர்கள் இந்த வறண்ட மண்ணை வளப்படுத்தி எங்கும் பசுமையை ஏற்படுத்தி செழிப்பாக்குவார்கள்" என்று கூறினார். வெடித்துச் சிதறிய சிவலிங்கத்தின் ஒரு பகுதி கழுவெளி நீர்தேக்கப் பகுதியில் விழுந்ததாகவும், அதனால் அப்பகுதி வளமற்ற பகுதியாக மாறிவிட்டது என்றும் இப்போதும் கூறப்படுகிறது. பின்னாளில் அதுவே கழுவெளி ஆனது என்று கூறப்படுகிறது. மேலும் கடுவெளி சித்தர் கூறிய "தூரதேசத்து மக்கள்" தான் தற்போது ஆரோவில்லில் வசிக்கும் பலநாட்டு மக்கள் என்றும் கிராமவாசிகள் கருதுகின்றனர். (எழுத்துக்கள் http://www.dailythanthi.com/News/Puducherry/2015/02/12231151/Rampant-in-the-villages-Famine-Domino-Desert-plain.vpf சொந்தமானது; (படம் http://temple.dinamalar.com/New.php?id=159 சொந்தமானது).

37. ஸ்ரீ கந்தசாமி தேசிகர், நெட்டப்பாக்கம்.



புதுச்சேரி மாநிலம் நெட்டப்பாக்கம் மந்தாரவனத்தில் தானேதோன்றி திருவருள் புரிந்துவரும் ராமலிங்கநாதர் பெருமானை நாளும் அத்மமூர்தியாக வைத்து வழிபாடு செய்து வந்தவர் அருட்குரு கந்தசுவாமி தேசிகர் அவர்கள். இவர் வடலூர் வள்ளலார் பெருமானை குருவாக ஏற்று வழிப்பட்டு உள்ளார். நெட்டப்பாக்கத்தில் பெரிய கோயில் என்றழைக்கப்படும் ராமலிங்கேஸ்வரர் ஆலயத்திற்கு போகும் வழியில்-அரசாங்க பள்ளி அருகில் அமைந்துள்ளது. கந்தசாமி தேசிகர் வள்ளலார் காலத்தை சேர்ந்தவர். பிறப்பு சிறுவந்தாடு ஊராட்சி. தேசிகரின் தந்தைக்கு இரண்டு மனைவிகள். முதல் மனைவியில் பிள்ளையே சுவாமிகள்.

சித்தரின் தாய் சிறு வயதிலயே இறைவனை அடைந்து விட்டார். முதல் மனைவியின் மறைவுக்கு பின் சித்தரின் தந்தை இரண்டாவது திருமணம் செய்துகொண்டார். ஒரு நாள் சித்தர் ராமலிங்கேஸ்வரர் ஆலயத்திற்கு சென்று விட்டு வீடு திரும்புகிறார். சித்தரின் சித்தி அசைவ உணவு சாப்பிட்டு கொண்டு இருந்தார். இவரை கண்ட சித்தி, தான் செய்து வைத்து இருந்த அசைவ உணவை மறைக்க முற்பட, சித்தருக்கு ஏன் இவ்வாரு செய்கிறார்கள் என்ற ஐயம் ஏற்படுகிறது. அவர் தன் சந்தேகத்தை கேட்க முற்படுகையில், அவர்களுக்குள் வாக்குவாதம் ஏற்படுகிறது. அப்பொழுது அவர் தந்தை விட்டில் நுழைகிறார். அவரை பார்த்த சித்தி, சித்தர் தன்னை குளிக்கும் பொழுது பார்த்து விட்டதாக சொல்கிறார். இதை கேட்டு

அதிர்ந்த சித்தர், தன் கண் இருப்பதால் தான் இவ்வாறு சொல்கிறர்கள் என்று, அடுப்பில் இருந்த



கொள்ளிக்கட்டை எடுத்து தன் கண்ணில் குத்திக் கொள்ளிகிறார். வீட்டை விட்டு வெளியேறி அருகில் உள்ள வளவனூர் செல்கிறார். அங்கு நெசவு தொழில் செய்ய தொடங்கினார். அங்கு பல சித்துகள் செய்துள்ளார். ஒரு முறை நெசவாளர்கள், வடலூர் சென்று வள்ளலார் குரு பூசை தரிசித்து வரலாம் என்று கூறுகின்றனர். இதை கேட்ட சித்தர், இறைவன் எங்கு இருந்து கூப்பிட்டாலும் வருவார் என்று கூறி, அங்கே இருந்த தண்ணி தொட்டியில் அடிகளார் குரு பூசை காட்டி இருக்கிறார். சுவாமிகள் மறைந்தவுடன் அவருடைய சமாதியின் மேல் சிவலிங்கம் பிரதிஷ்டை செய்து ஊர்மக்கள் வழிபட்டு வந்ததாக பெரியோர்கள் கூறுவர். பெருமை வாய்ந்த அவருடைய சமாதி பீடம்-ஆங்கிலேயர் காலத்திற்குப் பின் சிதிலமடைந்து விட்டது. இதனை கண்ணுற்ற அவ்வூர் சிவனடியார்கள் -பெரிதும் முயற்சி செய்து ஊர்மக்களின் உதவியுடன் அத்திருக்கோயிலை மறுபடி சீர் செய்து வழிபட்டு வருகின்றனர்.


38) முருகனடிமை பச்சையம்மாள் சித்தர், கருவடிகுப்பம்.

புதுச்சேரியில் நடமாடிய பெண் சித்தர்களில் ஒருவர் முருகன் அடிமையை பச்சையம்மாள்! 19.6.1927 ஆம் ஆண்டு பிறந்தார். சிறு வயது முதலே முருகன் மீது மிகுந்த பக்தி கொண்டவர். 18ஆம் ஆண்டில் திருமணம் செய்து வெய்கபட்டது. குழந்தை பாக்கியம் இல்லாமல் இறைவனை வேண்டி வந்தார். 25ஆம் வயதில் ஒரு நாள் வீட்டில் தடுக்கி விழுந்து மயக்கம் அடைந்தார். அன்று முதல் ஏதோ பிரம்மை புடித்து போல் இருந்தார். எந்த வைத்தியம் செய்தும் நிலைமை மாறவில்லை. அதிர்ந்த பெற்றோர் ஒரு இஸ்லாமிய பெரியவரிடம் அழைத்து சென்றனர். இவரிடம் ஒரு தெய்விக சக்தி குடி கொண்டு இருப்பதை குறிபால் உணர்த்தினார்.

சிறுது காலத்துக்கு பிறகு ஒரு பெண் குழந்தை பெற்றாள். ஒரு முறை தனது கணவர் உறவினர் ஒருவர் குடல் பகுதியில் ஏற்பட்ட கோளறு, எந்த ஒரு மருத்துவரும் குணப்படுத்த முடியாத நிலையில், இவரிடம் வந்தார். பூசை அறையில் அமர்ந்து ஒரு முலிகை ஒன்றை கொடுத்து அதை உட்கொள்ள செய்து பிணி தீர்த்தார். செய்வினை கோளறு இது என்று குறி சொல்லி இருக்கிறார். பச்சை அம்மாள் கணவருடன், திருவாவடுதுறை ஆதினத்தில் இருந்த பழனி சுவாமிகள் என்பவரை பார்பதற்காக சென்றார். அவர் பச்சை அம்மாளிடம் இருந்த தெய்விக சக்தியை உணர்ந்து, பச்சை அம்மாளுக்கு தீட்சை அளித்தார். அன்று முதல் தன் சித்து விளையாடல் மூலம் அடிக்கடி பழனி சென்று வர ஆரம்பித்தார்.

குழைந்தைக்கு ஒரு வயது இருக்கும், ஆப்பொழுது ஒரு நாள் காளை ஆறு மணிக்கு வெளியே சென்றவரை காணவில்லை. வெளியே சென்ற சில நேரங்களில் குழந்தை பாலுக்காக அழுதது. கணவர் வெளியே தேடி பார்த்தும் காணவில்லை. புட்டி பாலை கொடுக்க முடிவெடுத்தார். புட்டி பால் வாங்கி வந்து பார்த்த பொழுது, குழந்தை பால் குடித்து விட்டு நன்றாக தூங்கி கொண்டு இருந்தது. அனைவருக்கும் ஒன்றும் புரிய வில்லை. மாலை வீடு திரும்பிய பச்சை அம்மாள், பழனி சென்றதனால் நேரம் ஆகிவிட்டது என்று கூறி விபூதியும், பஞ்சமிர்தமும் கொடுத்தார். ஒருவர் இவ்வளவு சீக்கிரத்தில் எப்படி பழனி சென்று வர முடியும் என்று அச்சிரியத்தில் எதுவும் பேசாமல் நின்றனர்.

அன்று ஆடி கிர்த்திகை, காலை எழுந்து குளித்து முடித்து பூஜை அறையில் தியானத்தில் அமர்ந்தார். சிறிது நேரத்தில் எழுந்து தன் கணவரை அழைத்து "குழந்தை மாலை 4 மணிக்கு திரும்பி விடும்" என்று புறப்பட்டார். நேரே கோயிலுக்கு சென்று கோயிலை சுற்ற ஆரம்பித்தார். முன்றாவது சுற்றில் ஆளை காணாது, கோயில் குருக்கள் பச்சை அம்மாள் கணவருக்கு தகவல் தந்தார். சொன்னது போன்றே மாலை 4 மணிக்கு திரும்பி வந்தார். வந்தவர் தியானத்தில் அமர்ந்தார். கணவர் என்ன நடக்கிறது என்று கேட்டதற்கு, "பல சித்தர்கள் ஜீவ சமாதி அடைந்த இந்த புண்ணிய பூமியின் மீது எனக்கு தனிப்பட்ட பாசம், இந்த சிறுமியில் உடல் எனக்கு தேவை படுகிறது, இன்னும் இரண்டு ஆண்டுகள் இவளை சொந்தரவு செய்ய மாட்டேன், அதன் பிறகு இங்கு தான் நிரந்தர வாசம் செய்வேன்" என்று கூறி தன் இயல்பான நிலைக்கு திரும்பினார். இந்த இரண்டு வருடத்தில் எந்த ஆன்மிக நிகழ்வுகளும் நடைபெறவில்லை. இரண்டு குழந்தைகள் பெற்றார்.



தனது 27 வயதில், இல்லற வாழ்க்கையில் இருந்து துறவற வாழ்க்கை வாழ ஆரம்பித்தார். நீண்ட நேரம் தியானம், அருள் வாக்கு போன்றவை தினசரி நிகழ்வுகள் ஆகின! தன்தெருவில் வசித்த ஒருவரின் காணமல் போன நகை இருக்கும் இடத்தையும், ஒருவரின் தந்தை மரணம் தழுவ போவதை மிகவும் துல்லியமாக சொன்னார். அவர் வாழ்ந்த காலத்தில் பிரெஞ்சு அரசாங்கம் மோசடி பேர்வழிகளையும், போலி சாமியார்களை பிடித்து கடுமையான தண்டனை கொடுத்து கொண்டு வந்த சமயம். பிரெஞ்சு உயர் அதிகாரி ஒருவர் இவர் ஊர் மக்கள் ஏமாற்றுகிறார் என்று எண்ணி, இவரிடம் பழனி பஞ்சமிர்தம் வாங்கி வர ஒரு காவலரை பணித்தார். தகவல் அறிந்த பச்சை அம்மாள், நாளை சித்தானந்த கோயிலுக்கு வந்து வாங்கி கொள்ள சொன்னார்.

மறுநாள் எல்லா வேலைகளையும் முடித்து கொண்டு நேரே சித்தானந்த சுவாமி கோயிலுக்கு சென்றார். மாறு வேடத்தில் காவலர்கள் இருந்தனர். கோயில் கிணற்றில் குளித்து விட்டு நேரே சன்னதிக்கு சென்றார். ஒரு பெரிய வாழை இலை போட சொல்லி, திருப்புகழ் பாடல்கள் சந்தம் மாறாமல் பாடினார். பாடல்கள் பாடி முடித்த பிறகு "அரோகரா, அரோகரா" என்று சொல்ல, மக்களும் அவரை தொடர்ந்து "அரோகரா, அரோகரா" என்று சொல்லி கொண்டு இருக்கும் பொழுது, கோயில் மேலிருந்து மல்லிகை பூ கொட்ட தொடங்கியது.

வாழை இலை முழுவதும் மலை போல் மல்லிகை பூ குவியலாக இருந்தது. அதன் நடுவே பழனி பஞ்சமிர்தமும், விபுதி குங்குமமும் இருந்தது. பிரெஞ்சு அதிகாரிகளும், காவலாளிகளும் அதிர்ந்து போயினர். பச்சை அம்மாளிடம் மன்னிப்பு கோரினர். மற்றோரு சமயம் ஆயுத பூஜை அன்று சுப்ரமணிய சுவாமி கோயிலில் கொலுவில் வைக்கப் பெற்ற உற்சவ அம்மனின் மணிமுடி காணமல் போக, அது திருச்சி நகர கடை விதியில் உள்ள நகை கடையில் இருப்பதாக சொல்லி மீட்டு எடுத்து கொடுத்தார். இது போன்று பல அற்புதங்களை செய்து வந்த பச்சை அம்மாளை "வெள்ளை புடவை அம்மா" என்று அழைக்க தொடங்கினர்.

1.11.1981 ஆம் ஆண்டு தான் வணங்கிய முருக பாதங்களிலே பரிபூர்ண நிலையை அடைந்தார். அவருடைய ஜீவ சமாதி புதுவை முத்தையால்பேட்டை கருவடிக்குப்பம் மயானத்தில் அமைந்துள்ளது. சித்தானந்த சுவாமி சமாதி அருகில் காணும் இவரது சமாதி குரு- சீஷீயை பாவத்தில் உள்ளது சிறப்பு மிக்கது (**பொழிப்புரை - புத்தகம் -ஸ்ரீ இந்து பப்ளிகேஷன்ஸ் வெளியிட்டில் கானமஞ்சரி சம்பத்குமார் அவர்கள் எழுதிய "சித்தமெல்லாம் நிறைந்த சித்தர்கள்")**.


39) பகவந்த சுவாமிகள், கடலூர் புதுப்பாளையம்.

'களவாணிப்பயலே..!'

- இந்த வார்த்தைதான் பகவந்த சுவாமிகளை அடையாளம் காட்டும் குறியீடு! தென் மாவட்ட மக்கள் அதிகமாக பயன்படுத்தும் இந்த வார்த்தையை கொண்டு இவர் மதுரை- திருநெல்வேலி பகுதியை சேர்ந்தவராக இருக்கலாம் என்கிறார்கள். 'யாதும் ஊரே யாவரும் கேளீர்' என்ற சித்தாந்தத்தை தங்களது வாழ்வில் நடைமுறைப்படுத்தும் யோகிகளுக்கும், சித்தர்களுக்கும் எந்த ஊர் சொந்த ஊராக இருந்தால் என்ன? பகவந்த சுவாமிகளின் உற்றார், உறவினர், அவருடைய வயது என எதுவுமே தெரியவில்லை. சுவாமிகளுக்கு சமஸ்கிருத மொழி தெளிவாகத் தெரியும். கணபதி சுவாமிகள், குருநாத சுவாமிகள், சுவாமிநாத சுவாமிகள் என பல பெயர்களில் இவர் அழைக்கப்பட்டார். ஆனால், இவருடைய உண்மை பெயர் தெரியவில்லை. தன்னைக் காணவந்தவர்களை ஆசீர்வதிக்கும் போது, 'பகவந்தன் உன்னை காப்பாற்றுவான்' என்பார். அதனை வைத்தே இவர் 'பகவந்த சுவாமிகள்' என்று அழைக்கப்பட்டார்.

சுவாமிகள், தான் கட்டியுள்ள வேட்டியி லிருந்து ஆங்காங்கே நூல் பிரித்தெடுத்து, வேட்டியை ஜன்னல் ஜன்னலாக மாற்றிவிடுவார்! யாராவது ஊட்டினால் மட்டுமே உணவு உண்பார். அதுவும் மிகவும் குறைவாகவே உண்பார். தனக்கு உணவு பரிமாறும்போது, அளிப்பவருடைய கரண்டியிலிருந்து ஒரு பருக்கை

அன்னம் கீழே சிந்தினாலும், எழுந்து சென்று அந்த அன்னத்தை தேடி எடுத்து வாயில் போட்டுக் கொண்ட பிறகுதான் உணவருந்துவதைத் தொடர்வார். அநேகமாக யாரிடமும் உரையாடாமல் தவிர்த்துவிடுவார். ஆனால், அவர் தமக்குத்தாமே பேசிக்கொள்ளும் சுபாவமுடையவர். அதைப் பார்த்து, அவரது உதட்டசைவைப் பார்த்து, சிலசமயம் அவர் பேசிக்கொள்ளும் குரல் கேட்டு, நாமாக நமக்குத் தோன்றுவதை நாம் அர்த்தம் செய்து கொள்ள வேண்டும். குழந்தைபோலதான் நடந்து கொள்வார். குளித்தல், ஆடை மாற்றுதல் போன்றவற்றை மற்றவர்கள் அவருக்கு செய்வித்தால்தான் உண்டு.



சுவாமிகளைப் பற்றி ஸ்ரீமான்தெய்வசிகாமணி முதலியார் என்பவர் கூறும் செய்திகள் மெய்சிலிர்க்க வைக்கின்றன. அவரது வார்த்தைகளிலேயே அதனை கேட்போம்: "வசதியான வாழ்க்கை இருந்தும் வாழ்வில் ஒரு தேடுதல் எனக்கு இருந்து கொண்டே இருந்தது. பற்றற்ற உலகம் குறித்த சந்தேகம் என்னை குடைந்து கொண்டே இருந்தது. கடவுளின் அன்பனாக மாற என் மனம் துடித்தது. 1879-ல் நான் எனது பணிக்காக விருத்தாசலத்திற்கு வந்தேன். அங்கே எனக்காக ஒதுக்கப்பட்டிருந்த வீட்டு வாயிலில் ஒரு புனிதரின் தரிசனம் கண்டேன். ரிஷியை போன்ற வடிவம்... முதிர்ந்த வயது... பூஜிக்க தக்க முகம்... இவர்தான் என்னை பந்தங்களினின்று விடுவிக்க வந்த மகா புருஷர் என்பது எனக்கு உடனே புரிந்தது. அந்த மகானுக்கு பணிவிடை செய்வதில் எனக்கு எல்லையற்ற சந்தோஷம் கிடைத்தது. எனக்கு அவரின் கிருபை கிடைத்தது. ஒரு நாள் இரவு விளக்கு அணைந்து விட்டது. நான் தடுமாறியபடி படுக்கைக்கு சென்றேன். அப்போது சுவாமிகள், 'நான் குடித்த பாலில் மிச்சம் இருக்கிறது; நீ வந்து அருந்து' என்றார். படுத்துக் கொள்வதற்காக என் படுக்கையை நெருங்கிய நான், சுவாமி அழைத்த உடன் வந்து பால் அருந்த சென்றேன். அதேசமயம், என் மனைவி எனது படுக்கை அறைக்குள் வந்து விளக்கேற்றினாள். அந்த வெளிச்சத்தில் எனது படுக்கையில் நாகப்பாம்பு கிடந்ததைப் பார்க்க முடிந்தது! சுவாமி என்னை பால் அருந்த அழைக்காவிட்டால், நான் பாம்போடு படுத்து அழுத்தியிருப்பேன். அது என்னை தீண்டியிருக்கும். நான் இறந்திருப்பேன்!" - தெய்வசிகாமணி சுவாமிகள் சிலாகித்தபடியே வேறொரு சம்பவத்தையும் நினைவு கூர்கிறார்.

'ஒருநாள், எனது வேலையாள் கோபாலனை சுவாமிகள் 'களவாணிப்பயலே குழந்தையை கொல்லலாமா?' என்று திட்டியபடி அடித்துக் கொண்டிருந்தார். நான் ஓடோடி சென்று 'என்ன சுவாமி விஷயம்' என்றேன். 'இவன் குழந்தையை கொன்று நகைகளை கொள்ளையடிக்க திட்டம் வைத்துள்ளான்' என்றார். நான் அதிர்ச்சியோடு அவனை நெருங்கி 'சுவாமிகள் சொல்வது உண்மையா' என்று கேட்டேன். அவன் எனது 5 வயது செல்ல மகள் மாணிக்கம்மாளை கொன்று நகைகளை கொள்ளையடிக்க திட்டம் வைத்திருந்ததை ஒப்புக் கொண்டான். சுவாமிகளின் வாக்கினை ஏற்று அவனை வேலையை விட்டு நிறுத்தினேன்."

ஒரு டிசம்பர் மாதத்தில் கெடில நதியில் வெள்ளம் ஏற்பட்டு ஊரில் உள்ள ஏராளமான வீடுகள் அழிந்தன. சுவாமிகளை காப்பாற்ற பக்தர்கள் ஓடோடி வந்தனர். "சுவாமி! வாருங்கள் பாதுகாப்பான இடத்திற்கு போவோம்" என்றார்கள். சுவாமிகள் மறுத்துவிட்டார். சுவாமிகளுடன் இருந்த சில பக்தர்களும் அவரைப் போலவே அவருடைய குடிலைவிட்டுப் போக மறுத்துவிட்டார்கள். தாம் வருந்தி அழைத்தும் அவர் தம்முடன் வராததால் அவரை அழைத்த சில பக்தர்கள் உயிருக்கு பயந்து பாதுகாப்பான இடத்திற்கு சென்று விட்டார்கள். அந்த வெள்ளத்தில் கட்டிடங்களும் ஏன் மாட மாளிகைகளும்கூட அடித்துச் செல்லப்பட்டன.

மறுநாள்... 'வெள்ளம் சுவாமிகளின் குடிலை பாழ்படுத்தியிருக்குமோ, சுவாமிகள் எப்படி இருப்பாரோ' என்று பயந்தபடியே வந்து பார்த்தார்கள் பக்தர்கள். அவர்களுக்கு இன்ப அதிர்ச்சி! அவருடைய கீற்றுக் கொட்டகைக்குக் கிஞ்சித்தும் சேதம் இல்லை. உள்ளே சுவாமிகளும், அவருடனேயே தங்கிவிட்ட பக்தர்களும் பாதுகாப்பாக இருந்தனர்! சுவாமிகள் முக்தி அடைவதற்கு 40 தினங்களுக்கு முன்பே உணவு எதுவும்

உண்ணாமல் இருந்தார். முக்தி அடையும் தினத்தன்று தன்னை சந்தித்த பக்தர்களிடம் சிலகாலத்திற்கு பிறகு இங்கு ஓர் அற்புதம் நிகழும். ஒரு ஆலயம் நிர்மாணிக்கப்படும் என்று அருளினார். 1889-ம் ஆண்டு, டிசம்பர் 18-ம் நாள் (மார்கழி மாதம் 5-ம் தேதி) சுவாமிகள் பரம்பொருளுடன் ஐக்கியமானார். திருப்பாதிரிப்புலியூர் அருகே புதுப்பாளையத்தில் கெடில நதிக்கரையில் திருக்கோயில் கொண்டுள்ளார் பகவந்த சுவாமிகள். இன்றும் பிரதி வருஷம் மார்கழி மாதம், சித்திரை நட்சத்திரத்தில் குரு பூஜையும், அன்னதானமும் நடக்கிறது. தினந்தோறும் இரண்டு கால பூஜையும், விசேஷ தினங்களில் சிறப்பு பூஜையும் நடக்கிறது (எழுத்துக்கள் https://www.dinakaran.com/Aanmeegam_Detail.asp?Nid=250&Cat=3 சொந்தமானது).

40) தயானந்தா சுவாமிகள், புதுப்பாளையம் - கடலூர்

இவரின் பூர்விகம் பற்றிய தகவல்கள் சரியாக கிடைக்கவில்லை. மஸ்தான் அல்லது காசிப்பிராமண வகுப்பை சேர்ந்தவராக இருக்கலாம் என்று நம்பப்படுகிறது. வடஇந்தியாவில் ராணுவத்தில் மிகப்பெரிய பதவியில் இருந்தவர். பதவியையும் சொந்த பந்தகளையும் விட்டு ஆத்ம சாதனையில் ஈடுபட்டார். திருநெல்வேலி, பாளையம்கோட்டையில் தாமிரபரணி ஆற்றில் கரையில் ஆழ்ந்த தவத்தில் இடுப்பட்டார் - ஆனந்த நிலையை உணர்ந்தார். சித்தர் அங்கிருந்து சேலம் சென்று சில காலம் இருந்து கடைசியில் கடலூர் வந்து சேர்ந்தார். முக்காலத்தையும் அறிந்த சித்தர், மற்றவர்களுக்கு ஏற்படும் நோய்களை தீர்த்து அதை தாமே ஏற்றுக்கொண்டவர். தாய்ப்பால் கொடுக்கமுடியாமல் அவதி பட்ட ஒரு பெண்மணிக்கு, தான் சாப்பிட்டு கொண்டு இருந்த உணவை கொடுத்து குறையை போக்கினார்.




மனநிலை சரி இல்லாத ஒரு பெண்ணை தலையில் உதைத்து "நல்ல இரு போ" என்று சொல்ல அடுத்த சில நேரங்களிலே பைத்தியம் தெளிந்து இருக்கிறது. 1904 ஆம் ஆண்டு ஒரு நாள் இச்சித்தர் ஊர் முழுவதும் சென்று "நாளை மாலை 4 மணிக்கு சிவப்புப் பையன் ஊரெல்லாம் வந்துவிட போகிறான்"..எல்லோரும் எச்சரிக்கையோடு இருங்கள்" என்று சொல்லி இருக்கிறார். அவர் சொன்னது போன்றே கெடிலம் ஆற்றில் வெள்ளம் பெருக்கெடுத்து ஓடியது. ஊருக்குள் வெள்ளம் புகுந்து பெரும் நாசம் விளைவித்தது. சித்தர் இருந்த இடத்தில வெள்ளம் பெருக்கெடுத்து ஓடியது; மக்கள் எவ்வளவோ கேட்டும் சித்தர் நகரவில்லை. சித்தரோ "கவலைப்படாதிர்கள் இரவு 11 மணிக்கு உதைத்து துரத்தி விடுகிறோம்" என்று சொல்லி கொண்டு இருந்தார். அவர் சொன்னது போலவே தண்ணீர் குறைந்து விட்டது. 1905ஆம் ஆண்டு ஒரு அபிஷேக அரதனையின் பொது தன்முன் இருந்த உணவை காட்டி, இனிமேல் இவர் இதை சாப்பிட மாட்டார் என்று சொல்லிவிட்டு அங்கு இருந்த ஜோதியை பார்த்து இதுபோல்ஜோதியாக இருக்க போகிறார் என்று சொல்லி இருக்கிறார். அன்றிலிருந்து சித்தர் 40 நாட்கள் உணவு உண்ணாமல் இருந்து விதேக முக்தி அடைந்தார் (விதேக முக்தி என்பது ஞான யோகத்தின் மூலம் முக்குணங்களை கடந்த ஜீவன் முக்தன், ஆத்மஞானத்தில் நிலைபெற்று பிரம்மத்தில் ஐக்கியமாகி விடுவதே விதேக முக்தி ஆகும். இந்த விதேக முக்தி அடைந்த ஒருவருக்கு (இறந்த பின்பு) மறுபிறவி கிடையாது. அத்தகைய மறுபிறவி அற்ற நிலையை அடைந்தவர்களை விதேக முக்தன் என்பர்). சித்தர் முக்தி அடைந்த தினம் 25.6.1905. பகவந்த சுவாமிகள் சமாதிக்கு அருகில் இவர் சமாதி உள்ளது. இவரின் சமாதி மேல் தண்டாயுதபாணியின் சிலை பிரதிஷ்டை செய்யப்பட்டு உள்ளது (**பொழிப்புரை** - புத்தகம் -ஸ்ரீ இந்து பப்ளிகேஷன்ஸ் வெளியிட்டில் கானமஞ்சரி சம்பத்குமார் அவர்கள் எழுதிய "சித்தமெல்லாம் நிறைந்த சித்தர்கள்").

41) கந்தசாமியார், காரணப்பட்டு

கந்தசாமியார் கடலூர் வட்டத்தில் உள்ள 'காரணப்பட்டு' என்னும் கிராமத்தில் 07-09-1838 ஆம் ஆண்டு உதித்தார். பிரம்ம இவரின் பாட்டனார் சந்திரசேகரப்பிள்ளை பெருஞ்செல்வந்தர். அறுபது காணி நிலத்துக்குச் சொந்தக்காரரும் கூட. கந்தசாமியின் தந்தையார் முத்துசாமிப்பிள்ளை. இவர் கணக்கு வேலை பார்த்து வந்தார். இவரின் துணைவியார் தயிலம்மாள். இளம் வயதில் இவர் கல்வியில் சிறந்து விளங்கினார்.

எண்ணறக் கற்றவர்; எழுத்தற வாசித்தவர். கணக்க வேலை பார்ப்பதற்கு உரிய படிப்பும் படித்திருந்ததினால் புதுவை மாநிலத்தில் 'பாகூர்' என்னும் ஊரில் கணக்கு வேலை கிடைத்தது. அதனை ஒழுங்குறச் செய்து கொண்டே மேன்மேலும் படித்தார். அதனால் பின்னர் புதுச்சேரியில் உள்ள சாரம் என்னும் பகுதியில் சுங்கச் சாவடியில் வட்டாட்சியர் பணியினை ஏற்றார். பணியினைத் திறம்பட ஆற்றினார். மணப்பருவம் வந்துற்றது. தக்கப் பெண் அணங்கினைத் தேடினர். கந்தசாமிக்குச் சீர்காழியிலிருந்து 'தங்கம்' என்ற பெண்ணைப் பார்த்துப் பேசி நல்வாழ்க்கைத் துணைவி ஆக்கினர். அவரும் அவளோடு இணங்கி நல்லறப்பாங்கில் ஒழுகினார். அதன் பயனாக பெண் மகவு பிறந்தது. 'ஜானகி' என்று பெயர் இட்டுச் செல்லமாக வளர்த்து வந்தார். கந்தசாமியார் பெற்ற கல்வியறிவோடு ஞான அறிவும் நிரம்பப் பெற்றவர். சைவ ஆகம சித்தாந்த நூல்களை எல்லாம் முறையாக கற்றவர். சிவபூசை நாள் தவறாமல் நியமப்படி ஒழுகி செய்து வந்தார். செபதபம் செய்தார். கல்வியறிவில் சிறந்த சான்றோர்கள் பலரும் அவரை நாடி வந்து பழகினர். அவரும் பலரைநாடிச் சென்று நட்பு கொண்டிருந்தார். உலகியல் வல்லவரோடும், அருளியல் நல்லவரோடும், அவருக்கு இடையறாத தொடர்பு இருந்து கொண்டிருந்தது. அதனால் ஊராரோடும், அடுத்த அயலாரோடும் அவருக்கு நெருக்கமான அன்பும் தொடர்பும் இருந்தது. இவ்வாறு இருக்கும் நாளில் இவருக்கு பித்தம் அதிகரித்துத் தலை சுற்றலும் மெய்ந்நடுக்கமும் ஏற்பட்டது. தலை ஆட்டமும், உடல் ஆட்டமும் ஓயாமல் இருந்து கொண்டிருந்தது. அதனை நிறுத்த வேண்டி விரும்பி நிரம்பப் பொருட் செலவு செய்தார். நரம்பியற் கோளாறு என்று குறிப்பிட்டனர். அதைச் சரி செய்ய வல்ல மருத்துவர்களை நாடினார். அவர்கள் சொன்ன மருந்துகளை எல்லாம் உண்டார். தடவச் சொன்னவற்றை எல்லாம் தடவிப் பார்த்தார். ஒருவர் அல்லாமல் பலரையும் நாடிப் பார்த்தார். எவராலும் அந்நோயினை நிறுத்த இயலவில்லை. செய்வதறியாமல் திகைத்தார்.



ஒரு நாள் இவர் வீட்டிற்கு பெரியவர் ஒருவர் வந்தார். இவர் நிலை கண்டு வினவினார். இவர் தமக்குள்ள நோயின் தன்மையை எடுத்துரைத்தார். என்னென்ன செய்தார்? யார் யாரைப் பார்த்தார் என்னென்ன செய்தனர் என்பதனை விளக்கமாக சொன்னார். அது கேட்ட அப்பெரியவர், வடலூரில் இராமலிங்க அடிகள் இருப்பது பற்றியும், அவர் பலருக்கு பல்வேறு பரோபகாரங்கள் செய்து கொண்டிருப்பது பற்றியும் எடுத்துக் கூறினார். அவர்பால் சென்றால் இவ்வுடல் நடுக்கமும், தலை ஆட்டமும் மாறும்; நிற்கும்; உடன் குணமாகும் எனவும் மொழிந்தார். அம்மொழிகள் அவருக்குப் பசித்தவனுக்குப் பாற்சோறு வாய்த்தது போல் இருந்தது.

வீட்டு மாட்டு வண்டி மேட்டுக்குப்பம் நோக்கிப் பயணப்பட்டது. அண்டகோடிகளெல்லாம் விரும்பி அருகில் சென்று வணங்கத் தக்க அருட்பெருஞ்ஜோதி ஆண்டவராம் வள்ளலைக் கண்டிட்டார். கந்தசாமியார் சிந்தை தெளிந்து கண்ணீர் சிந்திட்டார். கைகள் தலை மீது குவிய கால்கள் தள்ளாட அடியற்ற மரம்போல் வள்ளல் திருவடிகளில் விழுந்து வணங்கினார். அவ்வமயம் காரணப்பட்டாருக்கு வயது 21 ஆகும். வள்ளலாருக்கு வயது 36 ஆகும். அடிகளார் சென்னை வாழ்வை நீத்து கருங்குழியில் உறையத்துவங்கிய ஓராண்டில் அதாவது 1859 - ஆம் ஆண்டில் கருங்குழியில் தமது சற்குருநாதரின் முதல் தரிசனம் கிட்டியது. காரணப்பட்டார் தாம் பாடிய "இயற்கையுண்மை ஆனந்தக் கண்ணி"யின் 91-வது கண்ணியில் கீழ்கண்டவாறு குறிப்பிட்டுள்ளதிலிருந்து இதனை நாம் அறியலாம். கோதல் என்றால் பழுது எனப்பொருள். நோயினால் பழுதடைந்த என்னை எழு மூன்று இருபத்தோறு வயதில் ஆண்டுக்கொண்ட இராமலிங்கரே! என வியக்கிறார். கோதிலெழு மூன்று வயதினி லெனையாட் - கொண்டருள் ராமலிங்கம் (2084) தனது உடல் குறையினை எடுத்துவிளம்பினார். நம்பெருமானாரும் திருநீறு தந்திட்டார். உடம்பெலாம் பூசப்பணித்திட்டார். அவ்வாறே கந்தசாமியார் திருநீற்றைப் பெற்று உடம்பெலாம் பூசினார். என்ன வியப்பு! அவருக்கு அல்லல் தந்து வந்த மயக்கம் மாய்ந்தது. உடல் நடுக்கமும் தலை சுற்றலும் ஓடியது. இத்தகு அருஞ்செயல் புரிந்த பெருங்கருணை நிதியாகிய வள்ளற்பெருமானை வாயார வாழ்த்தி வணங்கிநின்றார் கந்தசாமி, நெஞ்சாரப் புகழ்ந்து விழி நீர் சிந்தியது. அவர் நிலை கண்டு அப்போது நம்பெருமான் 'உமக்குத் தக்க உத்தியோகம்

தருவோம்' என்று உரைத்து, உடன் ஊர் திரும்பிச் செல்லவும் உத்தரவு தந்தார். பெருமானாரின் பெருமைகள் தன்னளவிலும் உலகளவிலும் பரவுவதை உணர்ந்த காரணப்பட்டார், சித்திவளாகத்திற்குச் சென்று வள்ளற்பெருமானிடம், தாம் சந்தன மரத்தால் செய்து எடுத்துச்சென்ற பாதரட்சையை அணியச்செய்து அழகுபார்த்தார். சிலவருடங்கள் அதனை நம்பெருமானார் அணிந்திருந்தனர். பிறகு காரணப்பட்டார், அந்த பாதரட்சையை அடியேனுக்கு வழங்கவேண்டும் என வள்ளற்பெருமானிடம் பிரார்த்தனை செய்தார். அடிகளாரும் அவரது மனநிலை அறிந்து அதற்குச் சம்மதித்தார். "வள்ளலார் அணிந்திருக்கும் பாதரக்ஷைகளை இரண்டு மாதத்திற்கு ஒருமுறை ஒவ்வொருவர் எடுத்துக்கொண்டு போய்ப் போற்றி அதில் லிங்கத்தை வைத்துக்கட்டி வைப்பார்கள். சிலநாள் கழித்து எடுத்துப்பார்த்தால் லிங்கம்கட்டி யிருக்கும்; எடுத்து நெருப்பிலிட்டால் உருகிப் புகைந்து போகாது. இதனால் சுத்ததேகம் பெற்றதன் இலக்கணம் புலனாகின்றது."

கந்தசாமியார் உளம் மகிழ்ந்து ஊர் திரும்பினார். ஆனால் அங்கு சென்ற அவர் உளம் திரும்பவில்லை. திருவருட்பா சிந்தை கவர்ந்தது. ஓத ஓத உள்ளம் குழைந்தது. வள்ளற் பெருமான் முன் இருந்து பாடுவதை போல் உணர்வு இருந்தது. நாட்டமெல்லாம் மேட்டுக்குப்பம் சித்திவளாகத் திருமாளிகை முன் நின்றது. வள்ளல்பால் சென்றது. இவர் எண்ணமெல்லாம் பெருமானையே வலம் வந்து கொண்டிருந்தது. எனவே இவர் துறவு பூண்டு குடும்பத்தை விட்டு நீங்கி மேட்டுக்குப்பத்திற்கு வரத்துணிந்தார். இதுப்பற்றி குடும்பத்தில் தெரிவித்தார். குடும்பத்தார் பெரிதும் கலங்கினர். இவர் செல்வதற்கு முன்னர் குடும்பத்தினர் மேட்டுக்குப்பம் சென்றனர். வள்ளற்பெருமானிடம் கந்தசாமியார் நிலை குறித்து முறையிட்டனர். பெருமான் 'உலகம் பிரமிக்கத் துறவு பூண வேணாங்காணும்; அருந்தல், பொருந்தல் முதலிய ஜீவகாருண்யமுள்ள ச ம்சாரிகளாகிய இல்லறத்தார் எல்லாம், அந்த அருட்பெருஞ்ஜோதி ஆண்டவர் அருளுக்கு நூற்றுக்கு நூறு பங்கு முழுவதும் உரியவர் ஆவார்கள் இது பொய்யன்று,' என்று கூறியருளிக் குடும்பத்தில் சேர்ந்து வாழவழிகாட்டினார். பெருமான் வாக்கினைத் தலைமேற்கொண்டு சென்றிட்டார் கந்தசாமியார். அவ்வாரே காரணப்பட்டுக்குச் சென்று குடும்பத்தோடு வாழ்ந்து வந்தார். பெருமான் நினைவாகவே இருந்து வந்தார். இவர் உள்ளமாகிய இரும்பு பெருமானாகிய காந்தத்தை நோக்கி நகர்ந்து கொண்டே இருந்தது. சில நாட்கள் சென்றன. இவரின் துணைவியார் தங்கம் உயிர் நீத்தார்.

வடலூரில் தங்கல்:- அவர் மனம் எல்லாம் வல்ல வள்ளற் பெருமானுடன் சேர்ந்து வாழ்வதையே விரும்பியது. அதனால் வீட்டாரிடம் சொல்லிக் கொண்டு அவர் தம் ஒரே மகள் ஜானகியை உடன் அழைத்துக்கொண்டு வடலூர் வந்து சேர்ந்தார். ஒரு குடில் அமைத்துக்கொண்டு அதில் தங்கினார். சங்கப்பணிகளிலும், சாலைப்பணிகளிலும் அன்பர்களோடு சேர்ந்து ஈடுபட்டார். மேட்டுக்குப்பத்தில் பெருமானைக் கண்டு வணங்கி வழிபட்டு நியமங்களைக் கடைபிடித்தார். திருவடிப் புகழ்ச்சி:- அன்று சித்திவளாகத்தில் வழிபாடு நடந்தது. பெருமான் முன்னிலையில் அன்பர்கள் கூட்டு வழிபாடு செய்தனர். கந்தசாமியார் இசையோடு திருவடிப்புகழ்ச்சியைப் பாடினார். வள்ளற் பெருமானையே வழிபடு கடவுளாகக் கொண்டு ஒழுகியதால் நெகிழ்ச்சியோடு அப்பாடல் ஒலித்தது. இசையறிவு தனக்கு மிகுதியும் உள்ளது என்னும் கருத்தும் அவருள் பதிந்திருந்தது. அதனை உணர்ந்த வள்ளல் அத்திருவடிப் புகழ்ச்சியைப் பல இசைகளில் பாடிக்காட்டி மகிழ்வித்தார். அது கண்டு திகைத்தார் கந்தசாமி. இப்படியெல்லாம் பாடமுடியுமா என்று வியந்தார். இசைஞானம் மற்றவர்களை விடக்கூடுதலாகவே கந்தசாமியாரிடம் இருந்தது. அருட்பாவைப் பாடப்பாட அது மிகுந்தது. பல இராகங்களில் பல உருப்படிகளில் அது வெளிப்பட்டது. பாட்டுக்கு ஏற்றபடி கருவிகள் கொண்டு பாடினால் இன்னும் சிறப்பாக இருக்கும் என்று நம்பினார். நண்பர்கள் துணை கொண்டு பலகருவிகளை இசைத்துக்கொண்டு பாடவும் முனைந்தார். அதுகண்டு வள்ளற்பெருமான் கந்தசாமியாரைத் தன் முன்னிலைக்கு அழைத்தார். 'மனங்கசிந்துருகவே பாடல் பாடவேண்டும். இசைக்கருவிகள் கொண்டு பாடுவதால் மனம் உருகாது, உணர்ச்சி பெருகாது, சன்மார்க்கத்திற்கு இசைக்கருவிகள் தேவையில்லை. இசைக்கருவிகள் இல்லாமலே மனம் உருகபாடி வழிபடுங்கள்' என்று விளக்கியருளினார்.

பெருமான் திருக்காப்பிட்டுக் கொள்ளும் காலம் நெருங்கிக் கொண்டிருந்தது, அன்பர்களையெல்லாம் அழைத்தார். சாலைப் பொறுப்பை கல்பட்டு ஐயா பார்த்துக்கொள்ள வேண்டும். சங்கப்பொறுப்புகளைத் தொழுவூரார் பார்த்துக்கொள்ள வேண்டும், ஞானசபை, தருமச்சாலைகளில் நடைபெறும் வழிபாட்டுப்

பொறுப்பைக் காரணப்பட்டார் பார்த்துக்கொள்ளவேண்டும், சித்திவளாகம் விளக்குப் பார்க்கும் பொறுப்பை சேலத்து ஞானாம்பாள் பார்த்துக்கொள்ள வேண்டும் என்று உத்தரவிட்டருளினார். காரணப்பட்டாருக்கு வழங்கிய பொறுப்பை மிகஒழுங்காக நடத்தி வந்தார்.

வள்ளற் பெருமான் சித்திவளாகத் திருமாளிகையில் திருக்காப்பிட்டுக் கொண்டு மறைந்து அருளினார். இவரோ தமிழகம் முழுவதும் சன்மார்க்க சங்கங்களை அன்பர்கள் மூலம் பல ஊர்களிலும் நிறுவினார். கொடியேற்றிவைத்து கொள்கைகளை விளக்கினார். ஒவ்வோர் ஊரிலும் சமரச பஜனை செய்தார். தன் மகள் ஜானகியையும் பஜனைக் குழுவில் இருந்து கொண்டு பாடச் செய்தார். காரணப்பட்டு கந்தசாமிப்பிள்ளை கண்வலியால் துன்பப்பட்டார். வடலூர் செல்லும்படி கனவில் வள்ளல் உத்தரவிட்டார். அங்ஙனமே செல்ல இரஸ்தாளி வாழைப்பழம் கண்ணுக்கு கட்டும்படி ஓர் அன்பர் கூறினார், அங்ஙனமே செய்ய கண்நோய் அகன்றது. திருக்கோயிலூரில் கந்தசாமியார் தங்கியிருந்தபோது கனவில் வள்ளற் பெருமான் தோன்றி அந்தாதி, நாமாவளி, கண்ணி முதலிய பிரபந்தங்கள் பாடும் படியும் உத்தரவாகியது. பல புத்தகங்கள் எழுதினார்! அச்சிட்டு மக்களை சென்றடைய செய்தார்!

இளம் வயதிலேயே பெருமானால் ஆட்கொள்ளப்பட்டு அறுபது ஆண்டுகளுக்கு மேலாகத் திருவருட்பாத் தேனின்பத்தை துய்த்து அதனை பலருக்கும் ஊட்டி உவகையுறச் செய்தவர், ஒருநாள் அங்குள்ளோரைக் கூப்பிட்டு நான் இராமலிங்க சுவாமிகளின் திருவடிகளைச் சேரப்போகிறேன் என்றார். படுத்திருந்தவர் எழுந்து உட்கார்ந்தார். அருட்பெருஞ்ஜோதி அருட்பெருஞ்ஜோதி தனிப்பெருங்கருணை அருட்பெருஞ்ஜோதி என்று உரத்த குரலில் உள்ளாழ்ந்து சொன்னார். மகாமந்திரம் முழங்க 02-12-1924 ஆம் ஆண்டு வள்ளல் மலரடியில் மலர்ந்தார். இவரது ஆக்கையினை வடலூர் சங்கமும், மற்ற உயர்சன்மார்க்க அன்பர்களும் தங்களது ஊரில் அடக்கம் செய்ய முன்வந்து வேண்டிநின்றனர். ஆனால் திருவருள் அதற்கு சம்மதிக்காததால், காரணப்பட்டுவாழ் மக்களும், உறவினர்களும் அவர் பிறந்த ஊரிலேயே அடக்கம் செய்ய காரியப்பட்டனர். காரணப்பட்டில் இவரது கல்லறை இன்றும் அணையாதீபத்துடன் "காரணப்பட்டு ச.மு.கந்தசாமி ஐயா அருள் நிலையம்" என்ற பெயரில் ஒளிர்ந்துக்கொண்டிருக்கிறது (எழுத்துக்கள் http://wikimapia.org/32301892/SA-MU-KANDHASAMY-PILLAI-ARUL-NILAYAM சொந்தமானது).

42) பவழகொடி சித்தர், மண்ணாடிப்பட்டு கொம்யூன் சோம்பட்டு



விருதாச்சலம் அருகில் உள்ள பவழக்கொடி மற்றும் பவழக்காடு கிராமங்களில் வாழ்ந்ததால் இப்பெயர் ஏற்பட்டு இருக்கலாம் என்றும் பவழக்கொடி என்ற மூலிகையைப் பயன் படுத்தியதால் இவருக்கு இப்பெயர் வந்திருக்கலாம் என்று கருதப்படுகிறது. புதுச்சேரியை 17ம் நூற்றாண்டில் பிரெஞ்சுகாரர்கள் ஆண்டு கொண்டு இருந்தனர். மண்ணாடிப்பட்டு சோம்பட்டு கிராமத்தை சேர்ந்த விவசாயி ஒருவர் பக்கத்துக்கு கிராமத்தில் விவசாயம் செய்து கொண்டிருந்தார். அரசு உத்தியோகத்தில் இருந்ததால் தனது நிலத்தை குத்தகைக்கு விட்டார். குத்தகைக்கு எடுத்த நபர் பொய் சாட்சிகளை ஏற்பாடு செய்து நிலத்தில் தனக்கு பங்கு உண்டு என்று, விருதாச்சலம் நீதிமன்றத்தில் வழக்கு தொடர்ந்தார். பல நாட்கள் நடந்த வழக்கில் விவசாயிக்கு மிகுந்த பொருள் இழப்பு. தீர்ப்பு நாள் வந்தது, விவசாயி வாகன வசதி இல்லாத காலகட்டத்தில், காட்டு வழியில் விருதாச்சலத்திற்கு சென்று கொண்டு இருந்தார். வழியில் யோகத்தில் ஒரு சித்தரை கண்டார். கண்ணில் நீர் பெருக அவரை தொழுதார். இவரை கண்ட சித்தர், நியாயம் இருப்பதால் வெற்றி கிட்டும் என்று வாழ்த்தினார். சித்தர் சொன்னது போன்றே தீர்ப்பும் அமைந்தது. சந்தோசமாக திரும்பிய விவசாயி, சித்தரை வணங்கி தன்னுடன் தன் ஊருக்கு வரும் படி வேண்டினான். தங்கள் பாதம் பட்டு எங்கள் ஊருக்கு சுபிட்சம் உண்டாகும் என்று வேண்டினான். சித்தரும் இறைவனின் கட்டளை அதுவாயின், அகட்டும் என்று புதுச்சேரி புறப்பட்டார். விவசாயி சித்தருக்கு தனது வீட்டின் அருகே ஒரு குடில் அமைத்து குடுத்தார். சித்தர் அந்த குடிலில் உணவு, உறக்கம் இன்றி பல காலம் யோகத்தில் ஆழ்ந்தார். மக்களின் பிணிகளை போக்கி வாழ்ந்து வந்தார். ஒரு நாள் உறங்கி கொண்டு இருந்த சித்தர் எழுந்து துணியை உதறி தம் இரு கைகளாலும் தேய்த்தார். அருகில் இருந்தவர்கள் பதட்டத்துடன் விவரம் கேட்டனர்.

"திருவண்ணாமலையில் தேர் தீ பிடித்து எரிகிறது" என்று சொன்னார். அடுத்த நாள் திருவண்ணாமலையில் பெரிய தேர் தீப்பிடித்த சம்பவம் மக்கள் அறிந்ததும், மக்கள் சித்தரின் சக்தியை அறிந்தனர். நடக்கவே முடியாத ஒரு சிறுவனை, விபூதி தடவி நடக்க வைத்த சம்பவம் சித்தரின் பெருமையை மேலும் ஊரெங்கும் பரப்பியது. மக்கள் தங்கள் நிலங்களுக்கு ஆசிரமத்தில் உள்ள கிணற்றில் இருந்து தண்ணீர் கொண்டு வந்து தெளித்து அமோக விளைச்சல் கண்டனர். சுமார் 50 வருடங்கள் வாழ்ந்த சித்தர், தான் முக்தி அடையும் தினத்தை முன்பே சொல்லி அதே தினத்தில் முக்தி அடைந்தனர். இவர் ஜீவ சமாதி அடைந்த தை மாதம் விசாக நட்சத்திரத்தில் ஆண்டுதோறும் குரு பூசை நடைபெறுகிறது. இவரின் ஜீவ சமாதி புதுச்சேரி மண்ணாடிப்பட்டு கொம்யூன் சோம்பட்டு கிராமத்தில் அமைந்துள்ளது. **(பொழிப்புரை - புத்தகம் -ஸ்ரீ இந்து பப்ளிகேஷன்ஸ் வெளியிட்டில் கானமஞ்சரி சம்பத்குமார் அவர்கள் எழுதிய "சித்தமெல்லாம் நிறைந்த சித்தர்கள்").**

43. சாந்தானந்த சுவாமிகள், 100 அடி சாலை, புதுவை.

சென்னை பட்டினத்தில் 1854 மார்கழி பிறந்தார். ஸ்ரீனிவாசலு நாயுடு - இளமையில் பெற்றோர் இட்டப்பெயர். சுவாமிகள் வங்கியில் வேலைசெய்து கொண்டு இருந்தார். ஒரு நாள் பணியில் இருந்த பொழுது கண்களை மூடினார், யாராலும் அசைக்க முடிய வில்லை. தன்னுள் ஒரு பேரொளியை கண்டார். அசைவற்ற நிலையில் பேரானந்த நிலையை அடைந்த நிலையை trance என்பர். இவருடைய குரு சதானந்த சுவாமிகள். இவர் எப் போழுதும் "நாராயண நாராயண" என்று சொல்லி கொண்டு இருப்பது வழக்கம். இவர் அடிக்கடி புதுவை வருவதுண்டு. அங்கே வைசியாள் வீதியில் தங்குவார். மற்ற சித்தர்கள் போன்று தன் காலம் நெருங்குவதை உணர்ந்த சுவாமிகள், தம் சீடர்களுக்கு தம் தியான சக்தியின் மூலமாக செய்தி அனுப்பினார். 1901 ஆம் ஆண்டு ஜூலை மாதம் ஞாயிற்றுக்கிழமை சென்னையில் சித்தி அடைந்தார். அவரின் விருப்படியே, புதுவை எல்லைப்பிள்ளை சாவடியில் சாரதா சிருங்கேரி சிவகங்கை மடத்திற்கு மேற்கில் 100 அடி சாலையில் க்ரானைட் வணிக வளாகத்தின் உட்புறத்தில் உள்ளது **(பொழிப்புரை - புத்தகம் -ஸ்ரீ இந்து பப்ளிகேஷன்ஸ் வெளியிட்டில் கானமஞ்சரி சம்பத்குமார் அவர்கள் எழுதிய "சித்தமெல்லாம் நிறைந்த சித்தர்கள்").**

44. மிளகாய்ப் பழச்சாமி சித்தர், முத்தியால்பேட்டை



பாரதியாரால் வழிபட்ட சித்தர். பூர்விகம் தெரியவில்லை. முத்தியால்பேட்டை மணிகூண்டிற்கு அருகே காணப்படும் பாழடைந்த முருகன் கோயிலில் அம்மன் அவதாரமாகவே மக்கள் இப்பெண் சித்தரை வழிபட்டுள்ளனர். இவர் கட்டிய கோயில் தான் அந்த முருகன் கோயில். இவர் இளம் வயதிலேயே துறவறம் பூண்டவர் என்று கூறப்படுகிறது. இவர் வீட்டில் ஒரு அணையா விளக்குக்கும் வேலுக்கும் தினசரி பூசை செய்துள்ளார்.

தம் இளம் வயதில் கணவனை இழந்த சித்தர், மனம் உடைந்து - கால்போன போக்கிலே நடந்து சென்றபோது, ஒரு இடத்தில பசி மயக்கத்தில் கீழே விழுந்தார். "அம்மா எழுந்திரு! அம்மா எழுந்திரு! நான் உனக்கு வழி காட்டுகிறேன்" என்று ஒரு பாலகன் குரல் கேட்க, எழுந்த சித்தர் அந்த பாலகனை பின்தொடர்ந்தார். மூன்று பாதைகள் பிரியும் ஒரு இடத்தில் நின்ற சிறுவன் "நீ இங்கே இரு! நான் போய் வழிகேட்டு திரும்புகிறேன். அதுவரை நீ இங்கேயே இரு" என்று சொல்லி தன்னிடம் இருந்த வேலை வைத்துகொள் என்று சொல்லி சென்றது. சிறிது நேராம் கழித்து தான் இவருக்கு வந்தது முருக பெருமான் என்று! அச்சிறுவன் சொன்னது போன்றே அங்கே அமர்ந்து இருந்த சித்தர் முருகா! முருகா! என்று சொல்ல "கூப்பிட்டாயா தாயே!" என்று குரல் வந்ததை உணர்ந்த சித்தர் மெய்சிலிர்த்து போனார். அங்கேயே தங்கி அந்த வேலுக்கு தினமும் பூசை செய்து வந்தார். அங்கே ஒரு கோயிலும் எழுப்ப நினைத்தார். இவரின் புகழ் எக்குதிக்கும் பரவியது.

இவரை சோதிக்க நினைத்த உள்ளூர் குறி கேட்கும் பெண்மணி, இவரிடம் பக்தை போல் நடித்து சில காலம் இவருடன் தங்கினார். சமயம் பார்த்து தான் கொண்டு வந்த விஷத்தை சித்தர் குடிக்கும் பாலுடன் கலந்து விடுகிறார். சித்தர் நடப்பதை புரிந்து கொண்டு, அந்த பெண் கொடுத்த பாலை உண்டார். மறுநாள் அந்த குறி கேட்கும் பெண், இவர் இறந்திருப்பார் என்று நினைத்து உறங்கி கொண்டு இருந்தார். சித்தர் அவளை காலையில் எழுப்ப, அதிர்ந்து போனார். அந்த பெண்ணை பார்த்த சித்தர் "இன்னும் சோதனை பாக்கி உள்ளதா?" என்று கேட்டார். அந்த பெண் மன்னிப்பு கேட்டு அழுதாள். இறைவனிடம் இருந்து அழைப்பு வருவதை உணர்ந்த இச்சித்தர், அனைவரிடமும் தெரிவித்தார். மறுநாள் இவர் இருக்கும் அறை கதவு திறக்கப்படவே இல்லை. கதவை உடைத்து சென்று பார்த்த பொழுது சித்தரையும் காணவில்லை, அங்கே இருந்த முருக வேலும் காணவில்லை. சித்தர் எப்படி மறைந்தார் என்று யாருக்கும் தெரியவில்லை. உள்ளே தாழ்போடப்பட்டு இருந்ததை கண்ட மக்களுக்கு ஒரே ஆச்சரியம்!



இவர் கட்டிய கோயில் புதுவை முத்தியால்பேட்டை மணிகூண்டிற்கு எதிரே பாழடைந்த நிலையில் காணப்படுகிறது - ஒருகாலத்தில் மிகவும் பிரபலமாக இருந்த வள்ளி தெய்வானை சமேதராக சுப்பிரமணியர் கோயில் இன்று ஒரு கால பூசை மட்டும் நடைபெறுகிறது. **(பொழிப்புரை - புத்தகம் -ஸ்ரீ இந்து பப்ளிகேஷன்ஸ் வெளியிட்டில் கானமஞ்சரி சம்பத்குமார் அவர்கள் எழுதிய "சித்தமெல்லாம் நிறைந்த சித்தர்கள்").**

45. நந்தியடி சுவாமிகள் - பாக்கம் x கூட்ரோடு, வெள்ளாழங்குப்பம்.



கடலூர் மாவட்டம் திருவகிந்திபுரம் வீரவைணவ குடும்ப்பத்தில் வடகலை வைணவ மரபில் பிறந்தவர். பிறப்பு 28-3-1862 ஆம் ஆண்டு, இயற்பெயர் சீனிவாச ஆச்சாரியார். நந்தியடி சுவாமிகள் சுமார் முப்பதாவது வயதில் துறவுநிலை கொண்டு, இல்லறத்து ஞானியாய், இயற்கை துறவியாய், நல்லறத்து நாயகனாய் விளங்கி பழனி தவத்திரு சாதுசுவாமிகளுக்கு அருளாசானாய், குருமுதல்வராகத் திகழ்ந்து, தேசாந்திர சன்னியாசியாக விளங்கியவர்.

துறவு பூண்டு வெள்ளாழங்குப்பம் வந்த சுவாமிகள், ஸ்ரீ வள்ளி தெய்வானை சமதே சுப்பரமணிய சுவாமி திருக்கோயில் அமைத்து மக்கள் அருள் புரிந்து வந்தார்.இவர் இங்கு வந்த பல ஆண்டுகளுக்கு முன்பே சன்னியாசி அப்பன் என்ற சுவாமிகள் ஜீவ சமாதி அடைந்துள்ளார். அவரின் சமாதி அருகே ஒரு பெரிய ஆவுடையார் உள்ளது. அவரின் காலம் பல நூறு ஆண்டுகளுக்கு முன்பு என்பதால், சரியான தகவல் இல்லை.

இவர் சுமார் 130 ஆண்டுகளுக்கு முன்பு தன்னுடைய பெயரை தமிழகத் தனித்தமிழில் முதல் முதலில் சுவாமிகள் என்பதை அடிகளார் என மாற்றினார்கள். அதைப்பார்த்து, ஞானியார் சாமிகள் தன்னுடைய பெயரை ஞானியார் அடிகள் என்று மாற்றினார்கள். சுவாமிகள் என்ற பெயரை அடிகளார் என்று மாற்றுவதற்கு முதன்முதலில் வித்திட்டவர் தவத்திரு நந்தி அடிகளார்.



தவத்திரு சாது சுவாமிகளுக்கு சன்னியாசம் கொடுப்பதற்கு பத்தாண்டுகளுக்கு முன்பாகவே, இமயமலையில் உள்ள மத்திய நாராயணத்திக்கு வா என்று சொல்லி விட்டு சென்று விட்டார்கள். சாது சுவாமிகள் குருநாதரை தேடி சென்று சந்நியாச தீட்சை பெற்றார். யாத்திரை முடித்து திரும்பிய சுவாமிகள், திருச்சி மாவட்டத்தில் உள்ள பெருவளநல்லூர் கிராமத்தில் தங்கி இருந்த பொழுது இறைவனிடம் இருந்து அழைப்பு வர, திருவாசகத்தில் உள்ள திருகழுகுன்ற பதிகத்தை பாட சொல்லி அன்று இரவே அவர்கள் முக்தி நிலை அடைந்தார்கள். முக்தி அடைந்த நாள் 25-2-1928.

46. ஸ்ரீ விஸ்வநாத சுவாமிகள், பண்டசோழநல்லூர்.

புதுச்சேரி யூனியன் பிரதேசத்தில் உள்ள பண்டசோழநல்லூர் என்ற கிராமத்தில் உள்ளது இவரது ஜீவ சமாதி. சிறு வயது முதலே இவர் சிவன் மீது அளவற்ற பக்தியும், அன்பும் கொண்டு வாழ்ந்து வந்தார். இவர் தம் 20 ஆம் வயதில் இல்லறம் துறந்து துறவறம் புகுந்தார். நலிந்த மக்களின் நோய் தீர்த்து துறவறம் புகுந்தார். நலிந்த மக்களின் நோய் தீர்த்து, பேய் பித்து விரட்டி, தன் கரத்தினால் அள்ளித்தந்த திருநீரில் நலிந்தவர்களின் பிணி தீர்த்த மகான் விஸ்வநாத சுவாமிகள். பிறைசூடிய பெருமானை எண்ணி எத்தினமும்



தவத்தில் அமர்ந்தார். புழுதி அடைந்தது. புதர் மண்டியது, செடிகள் கொடிகளனாது, கொடிகள் அடர்ந்து காடுகள் ஆகின. ஓம் என்னும் மந்திரமும், நமசிவய என மந்திரமும் அப்பகுதியில் ஆடு, மாடு மேய்பவர்கள் காதில் விழுமாம். அவர்கள் சத்தமும், சலனமும் செய்யாமல் திரும்பி விடுவார்களாம். இப்படியே பல ஆண்டுகள் சென்றன. ஒருமுறை மேய்ச்சலுக்கு விடப்பட்ட ஆட்டுக்குட்டி ஒன்று சுவாமிகள் தவம் மேற்கொண்ட இடத்தில் புதர் மண்டிய இடத்தில் சிக்கிக்கொண்டது. இதை மேய்ப்பவனும் கவனிக்காமல் சென்று விட்டான். இந்த அட்டுகுட்டியின் அலறல் சத்தம், இளகிய மனம் கொண்ட சுவாமிகளின் தியானத்தை கலைத்தது. சுவாமிகள் எழுந்து ஆட்டுக்குட்டி புற்றில் சிக்கி கொண்ட இடத்திற்கு விரைந்து வந்தார். புற்றில் சிக்கி கொண்டி ஆட்டுக்குட்டியை விடுவிக்க அருகில் கிடந்த கம்பை எடுத்து அந்த புற்றை இடித்தார். ஆட்டுக்குட்டி விடுப்பட்டு சுவாமிகளின் முன்னால் மண்டி இட்டு வணங்கி துள்ளி குதித்து ஓடியது.

அப்போது புற்று இடிக்கப்பட்ட இடத்தில் சிவலிங்கம் ஒன்று தென்பட்டது. புற்றை அகற்றி சிவலிங்கத்தை உருவை வெளிப்படித்தினார் சித்தர். எனக்கு இந்த திருகாட்சியை தந்தருளவா? அட்டுகுட்டியின் அலறல் சத்தம் என் தவத்தை கலைத்தது என்று ஆனந்தம் கொண்டார் சுவாமிகள். இந்த செய்தி அருகில் உள்ள அனைத்து கிராமங்களுக்கும் பரவியது. புற்றின் அடியில் கிடைத்த சிவலிங்கத்தை பிரதிஷ்டை செய்து ஒரு சிவாலயத்தை எழுப்பும்படி ஊர் மக்கள் அனைவரும் ஸ்ரீ விஸ்வநாதன சுவாமிகளிடம் வேண்டுகோள் விடுவித்தனர். அவ்வாரே தான் தவம் செய்த இடத்துக்கு அருகாமையிலே ஒரு இடத்தை தேர்ந்தெடுத்தார். அவ்விடத்தில் திருக்கோவில் உருவாக்கப்பட்டது. ஆண்டுகள் பல சென்றன! இறைவனிடம் இருந்து தனக்கு அழைப்பு வருவதை உணர்ந்த சுவாமிகள், தான் இறைவனை அடையும் நாளை கூறினார். கூறியது போல மாசிமாதம் பூரட்டாதி நட்சத்திரத்தில் ஜீவ சமாதி அடைந்தார். மேலும் தான் ஈசனை அடைவதற்கு முன்னதாகவே தன் தவ வலிமைகள் முழுவதையும் இரண்டு பெரிய செப்பு தகட்டில் உள்ளடக்கினார்.

அந்த எந்திர தகட்டை ஸ்ரீ மல்லிகா அர்ச்சுனர் ஆலையத்தில் தெற்கு முகம் பார்த்த அறையில் வைக்கப்பட்டுள்ளது. எந்திர தகடு வைக்கப்பட்ட அறையின் நேர் எதிரில் ஸ்ரீ விஸ்வநாத சுவாமிகள் ஜீவ சமாதி அடைந்தார். எந்திர தகடு வைக்கப்பட்டு இருக்கும் உற்சவ மூர்த்தியார் தெற்கு பார்த்த அறையில் இருந்து சுவாமிகளின் ஜீவ சமாதி வரை துவாரம் (போந்து ஒன்று) இடப்பட்டுள்ளது. ஸ்ரீ விஸ்வநாத சுவாமிகள் பீடத்தின் மீது அமைய பெற்றிருக்கும் லிங்கத்தின் மீது அமைய பெற்று இருக்கும் லிங்கத்தின் மீது இன்றளவும் எந்திர செப்பு தகட்டின் பார்வை விழுகின்றன. பௌர்ணமி தினங்களில் சுவாமிகள் அருளிய எந்திர செப்பு தகடுகளுக்கு சிறப்பு அபிஷேக ஆராதனையும் செய்து வருகின்றனர். இப்பொழுது இந்த ஜீவசமாதி சிதைந்து போய் உள்ளது. திருப்பணி வேலைகள் நடைபெற்று கொண்டு இருக்கின்றது.



சுவாமிகள் தன் வாழ்ந்த காலங்களில் பல அற்புதங்களை செய்துள்ளார். நம் மனிதப் பிறவியின் சரீரம் மிகவும் அசுத்த தன்மை கொண்டது என நம் சுவாமிகள் மிகப்பெரிய கருத்தாகும். ஆகையால், ஆலைய

வாயிலில் தன் உடலை நிறுத்தி விட்டு தன் சிரத்தை மட்டும் ஸ்ரீ மல்லிகா அர்ஜுனப் பெருமானை தரிசிக்க அனுப்பி வைப்பராம். ஒரு முறை போறாமை கொண்டவர்களால் சித்த புருஷரை கொலை செய்ய ஆட்கள் அனுப்பி வெய்த்தனர். அந்த நேரத்தில் தன் சிரம், கரம் அனைத்தையும் சிதைந்து கிடப்பது போல் சித்த பெருமான் காட்சி தந்துள்ளார். அதைக் கண்ட கயவர்கள் தாமே சித்தரை கொன்று விட்டதாக அனுப்பியவர்களிடம் கூறி உள்ளனர். ஆனால், மறுநாள் சூரிய உதயத்தில் சித்தப்பெருமான் சிவ பூஜையை செய்து கொண்டு இருந்திருக்கிறார். பேய், பித்து பிணிகளை விரட்டும் வல்லமை கொண்டு இருந்ததால் பண்டசோழநல்லூர் சுற்றி இருந்த மக்கள் இவரிடம் சென்று தன் பிணிகளை நிக்கிக்கொண்டுள்ளனர். **(எழுத்துகள் - ஸ்ரீ விஸ்வநாத சுவாமி (ஜீவசமாதி) திருப்பணி நன்கொடை பத்திரிகை சொந்தமானது; படம் -** http://pandachozhanallur.blogspot.in/#**!).**

46. ஸ்ரீ உலகநாத களரானந்த சுவாமிகள் -சோரியாங்குப்பம் பள்ளி.

ஸ்ரீ உலகநாத களரானந்த சுவாமிகளின் சொந்த ஊர் கருவடிக்குப்பம். பல ஊர்களுக்கு சென்று விட்டு கடைசியில் சோரியாங்குப்பம் வருகிறார். அங்கு குடிக்கொண்டு இருக்கும் செடல் செங்கழுநீர் மாரியம்மன் கோவில் மேல் வழிநடை பாடியுள்ளார். இந்த ஊரில் இருந்த பொழுது தண்ணீரில் மிதத்தல், ரசவாதம் போன்ற பல சித்துகளை செய்து உள்ளார். இவரின் பெருமை அறியாமல் ஊரில் உள்ள சிலர் இவருக்கு இடஞ்சல் கொடுத்துள்ளனர். இதனால் இந்த ஊரைவிட்டே செல்ல முடிவு செய்தார்! ஊரை விட்டு செல்லும் பொழுது சாபம் விட்டு சென்றுள்ளார் ஒருவரை பார்த்து நீ இருக்கும் இடம் மண்மேடு ஆகி போகும் என்று சொன்னது, இன்றும் கூட அந்த இடம் மண் மேடாகதான் இருக்கின்றது! ஒருவரை பார்த்து-போகும் இடம் தெரியாமல் போகும் அழிந்து போவாய் என்று கூற, இன்று வரை அவர் எங்கு போனார் என்று தெரியவில்லை என்று ஊர் பூசாரி கூறினார். இவர் ஜீவசமாதி அடையும் நாளை, ஒருநாள் முன்பே சொல்லி விட்டார். தான் ஜீவ சமாதி அடைந்த உடனேயே அவரை சமாதி அடையும் இடத்தையும் அவரது பக்தர்களுக்கு சொல்லி இருக்கிறார். தான் இருக்கும் இடம் பிற்காலத்தில் பல பிள்ளைகள் ஞானம் பெரும் இடமாக மாறும் என்று சொல்லி இருக்கிறார். அதன் படியே இப்பொழுது அங்கு ஒரு பள்ளி இயங்கி கொண்டு இருக்கிறது. இவர் ஈஸ்வர ஆண்டு கார்த்திகை மாதம் 17ஆம் தேதி (2.12.1937) காலை 10.30 மணியளவில் ஜீவ சமாதி அடைந்தார்.



47. தேவராசு சுவாமிகள், வன்னியநல்லூர் (சூனாம்பேடு அருகில்).

புதுச்சேரி நகரில் உள்ள முத்தியால்பேட்டையில் 1935 ஆம் ஆண்டு முதல் 1948 ஆம் ஆண்டு வரை தம் திருவுடலை சுமந்தவாறு வலம் வந்துள்ளார். யாராவது வந்து அவர்களிடம் தங்கள் நோய்கள் பற்றியோ அல்லது குறைகளை சொன்னால், மண்ணை அள்ளி கையில் கொடுப்பார். அதை நெற்றியில் இடச்செய்கை செய்வார். சில அன்பர்களுக்கு வாயில் போட்டு க் கொள்ள சைகை காட்டுவார். பிணிகள் விலகி விடும்.

முத்தியால்பேட்டை நாலுமூலை உள்ள மிளகாய்ப்பழச் சாமியார் கட்டிய முருகன் கோயில் அருகில் பெரும்பாலும் காணப்படுவார். சுவாமியை ஒரே இடத்தில் பார்க்க முடியாது! வேகமாக சென்று கொண்டு இருக்கும் அவர், எந்த கடை ஓரத்திலாவது நின்று விட்டால் அன்று அந்த கடையில் அமோக வியாபாரம் நடக்கும். உணவகம் சென்று இட்லி, வடை எடுத்து விதியில் எரிந்து விட்டு செல்வார். அன்று அங்கு அமோக வியாபாரம் நடக்கும். சிறு பிள்ளைகள் சுவாமியை பின் தொடர்ந்து தெருவில் செல்வார்கள். அப்பொழுது தெருவில் இருக்கும் மண்ணை எடுத்து பிள்ளைகள் கையில் வைப்பார்கள். கையில் வெய்த மண், சக்கரையாக மாறிவிடும். பிள்ளைகள் சக்கரையாக வாயில் போட்டு கொண்டு ஓடுவார்கள். சுவாமிகள் மௌனத்தில் ஆழுந்து மகா மௌனத்தில் திலைத்து இருப்பார். யாரிடமும் உணவுக்காக கையெந்தியது இல்லை. ஒரு அன்பர் பல முறை உணவு கொடுத்தும் அந்த உணவை ஏற்கவில்லை. கடைசியில் கூழை கொடுத்துள்ளார். அதை ஒரு கொட்ட இஞ்சி காட்டி உள்ளார். அதில் உற்றிக் கொடுத்த பிறகே சுவாமி அதைப் பருகி உள்ளார். அது முதல் சுவாமிகளுக்கு கூழை கொடுத்து வந்துள்ளனர்.


மவுனயோகி
மகான் தேவராசு சுவாமிகள்

ஒரு முறை, முத்தியால்பேட்டை கடை தெருவில் உள்ள பிள்ளையார் கோயிலில் சித்தரை யாரோ கொலை செய்து விட்டார்கள் என்றும், தலையும் உடலும் தனித்தனியாக இருப்பதாக உள்ளூர் காவல் நிலையத்தில் சிலர் புகார் செய்தனர். விரைந்து சென்று பார்த்த பொழுது, சுவாமிகள் சுகமாக உறங்கி கொண்டு இருந்தார். இதே போன்று மறுநாளும் புகார் வர, விரைந்த சென்ற காவலர்கள் -தங்கள் முன்னால் சித்தர் நடந்து செல்வதை கண்டு மிகவும் வியந்து போனார்கள். சித்தரின் சித்து வேலை என்று அறிந்து காவலர்கள் திரும்பி சென்றனர். இதன் பிறகு சித்தர் அந்த கோவிலில் படுப்பதே தவிர்த்து விட்டார். அவரது தேகம் மிகவும் வலிமை வாய்ந்ததாக இருந்தது. அவரது நடந்துகொண்டே இருப்பார். எங்கும் ஒக்கார மாட்டார். மகா மௌனதிலயே இருந்தார். ஒரு முறை காலாப்பட்டு சாலை ஓரமாக சென்று கொண்டு இருந்தவரை ஒரு வாகனம் பின்னால இருந்து மோதியது. சுவாமி தூக்கி எரியப்பட்டு கிழே விழுந்தார். ஊர் மக்கள் அவரை தூக்க சென்றனர். பலத்த இரத்த காயங்களுடன் எழுந்த சித்தர், எதுவும் நடக்காது போன்று எழுந்து நடக்க தொடங்கினார். இதை கண்ட மக்களுக்கு ஒரே அதிர்ச்சி.

சித்தர் அங்கிருந்து மரக்காணம் வந்தார். அங்கிருந்த பேருந்து நிலையத்தில் உள்ள இட்லி கடை வைத்திருந்த ஒரு மூதாட்டியிடம் பசிக்காக கையை தட்டினார். கலையில் இருந்து வியாபாரம் ஆகாமல் இருந்ததால், சுவாமிகளை விரட்டினர் அந்த மூதாட்டி. அங்கிருந்து சித்தர் சென்று விட்டார். அன்று முழுவதும் எந்த வியாபாரமும் நடக்க வில்லை, மேலும் அந்த மூதாட்டியால் வாயை திறக்கவோ, நகரவோ முடியவில்லை. இவரை தேடி வந்த மூதாட்டியின் பேத்தி, இவரின் நிலையை கண்டு கண்ணீர் வடித்தால். அருகில் இருந்தவர்களிடம் இருந்து நடந்ததை அறிந்து கொண்ட பேத்தி, சித்தரை தேடி கண்டு பிடித்து அவரிடம் மன்னிப்பு கேட்டார். பாட்டியை குணப்படுத்தும் படி கெஞ்சினால். மனம் வருந்திய சித்தர், பாட்டியை இலேசாக தடவி கொடுத்தார். பாட்டி பழைய நிலைமைக்கு திரும்பினார்.

அங்கிருந்து சித்தர் வன்னியநல்லூர் சேர்ந்தார். அங்குள்ள நாவமரத்தடியின் கிழ் சுவாமி ஆறு நாட்கள் தங்கினார். நாவமரத்தை உற்றுப் பார்ப்பதும் வணம்குவது மாய் இருந்த சித்தரை பார்த்த ராமாயி என்ற உள்ளூர் பெண், அவருக்கு சாப்பாடு கொண்டு வந்து தந்தார். அதை ஏறெடுத்தும் பார்க்கவில்லை. தான் கொண்டு வந்த கூழையாவது குடிக்கும் படி கேட்டுக்கொண்டார். சித்தரும் கூழை குடித்தார். குடித்து முடித்த சித்தர் அவளுக்கு சிறிது மண் அளித்தாராம். அதை விட்டில் வைத்த இடத்தில் நூறு ரூபாய் நோட்டு ஒன்று இருந்ததாம். தபால்காரர் மனைவியின் வாயிற்று வலியை தான் அளித்த மண்ணை பூச செய்து அந்த நிமிஷமே குணம் அடைய செய்தாரம். அவ்வூரில் வசதி மிகுந்த அம்மணி அம்மாள் என்ற வயதான அம்மையார் விட்டில் அமர்ந்திருந்தார். அம்மணி அம்மாள் சித்தரை அங்கிருந்த கம்பால் அடித்து விரட்டினார். சித்தார் மிண்டும் மரத்தடியிலே வந்து அமர்ந்து விட்டார். சித்தரை பிரம்பால் அடித்த பெண் மறுநாள் விட்டை விட்டு வெளியே சென்றவர், இன்றுவரை வீடு திரும்பவில்லை. அவர் சித்தரை அடித்தால் ஏதேனும் தண்டனை அடைந்திருக்கலாம் என்று மக்கள் நம்புகின்றனர். இறைவனை அடையும் நேரம் வந்துவிட்டதை உணர்ந்த சித்தர் 22-06-1948 ஆம் ஆண்டு ஆனிமாதம் செவ்வாய்கிழமை மாலை 3.30 மணிக்கு பூராட நட்சத்திரத்தில் உடற்சட்டை தூக்கி எறிந்தார். அன்று கூழ் கொண்டு வந்த எழுமலை என்ற நபரை அங்கே இருக்க சொன்னார். ஊழ் குடிக்காமல் இருந்துள்ளார். தான் சமாதி அடையும் நேரத்தில் பயங்கர சிரிபொன்றை சிரித்தார். அதன் பிறகு, அவர் உடலில் எந்த சலனமும் இல்லை.



ஊர் மக்கள் ஒன்று கூடி அந்த இடத்தில் ஒரு சிறிய மேடை கட்டி வழிபட்டு வந்தனர். சித்தரின் சீடர்களான கோவிந்தசுவாமி மற்றும் ராஜப்பா ஆகிய இருவரின் கனவிலும், தேவரசு சுவாமிகள் தோன்றி தாம் சமாதி


அடைந்த இடைத்தை உணர்த்தினார். என்றோ எடுத்த புகைப்படத்தை எடுத்து கொண்டு, உள்ளூர் மக்களின் உதவியால் சுவாமிகளின் சமாதியை கண்டு பிடித்தனர். சமாதியை நெருங்கிய சிடர்களுக்கு ஆவி வடிவில் சுவாமிகள் தரிசனம் தந்துள்ளார் (**பொழிப்புரை - "ஓம் ஸ்ரீ தேவராசு சுவாமி சித்தர் கோயில்" பத்திரிகை**).

<u>குறிப்புகள்</u>

(1) ஜீவ அமிர்தம் புத்தகம், ஆசிரியர் கோ.திருமுருகன், வைதேகி பதிப்பகம்.

(2) புத்தகம் -ஓம்காரம், சென்னை வெளியிட்டில் தவத்திரு சுவாமி ஓம்கார நந்தா அவர்கள் எழுதிய "ஞானபூமி").







(3) ஸ்ரீ இந்து பப்ளிகேஷன்ஸ் வெளியிட்டில் கானமஞ்சரி சம்பத்குமார் அவர்கள் எழுதிய "சித்தமெல்லாம் நிறைந்த சித்தர்கள்" புத்தகம்.

(4) புத்தகம் திரு.சி.எஸ்.முருகேசன் அவர்கள் எழுதிய "புதுச்சேரி சித்தர் பீடங்கள்", குறிஞ்சி வெளியிடு.

(5) https://ta.wikipedia.org/wiki/

(6) http://www.dailythanthi.com/

(7) https://www.dinakaran.com/

(8) http://www.uyirmmai.com

(9) http://jnanabhoomi.blogspot.in/

(10) http://www.puduvaisiththargal.com/

(11) http://pandachozhanallur.blogspot.in/#!